
# இதயத்தில் நீ



1

உலகமே அவசரகதியில் இயங்கும் காலைப்பொழுதில், வேணுகோபால் தன் மனைவியிடம் வந்து அந்தச் செய்தியைச் சொன்னார்.

வேறொன்றும் இல்லை.... அவருடைய நண்பரின் மகன் பரத் வருகிறான்!

''சரோ... மாடியை சுத்தப்படுத்தி வை... பையன் அங்கே தங்கிக்கொள்ளட்டும்.''

''என்ன... இங்கே தங்கிப் படிக்கப்போகிறானா?'' சமையல் அறையில், காய்கறிகளை வதக்கிக்கொண்டிருந்த சரோஜா கேட்டாள். மகள்கள் இருவரும் புறப்படுவதற்குமுன், எல்லாம் தயாராக வேண்டுமே என்ற அவசரம் அவளது நெற்றியில் வியர்வையை வழியச் செய்தது.

''படிப்பா... அவன் வளர்ந்த பிள்ளைடீ... வயசு இருபத்தெட்டு இருக்கும். ஏதோ வியாபார விஷயமா

வருகிறானாம். நம்மை நம்பி அனுப்பி வைக்கிறான், கோவிந்தன்.''

கரண்டியை அப்படியே நிறுத்திவிட்டு கணவர் பக்கம் திரும்பினாள், சரோஜா. அவள் கண்களில் திகைப்பு! ''என்னங்க இது... வயசுப் பெண்கள் ரெண்டு பேரை வச்சிருக்கோம். இங்கேயா வாலிபப் பையனைத் தங்க வைக்கிறது?''

வேணுகோபால் சிரித்தார். ''அடி அசடு... என் நண்பன் இங்கு அனுப்பி வைக்கும் நோக்கமே அவனை நம்ம வீட்டு மாப்பிள்ளையாக்கத்தான். அவன் கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்கிறானாம்.''

''இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பிள்ளையா? விடலைப் பருவத்திலேயே பொண்ணுங்க பின்னால் பசங்க சுத்தறப்போ கல்யாண வயசுப் பையன் இப்படி பேசுகிறான் என்றால் அதிசயம்தான்.''

''என்ன சொல்ல... இந்தக் காலத்துப் பொண்ணுங்க சரியில்லைங்கிறான். நாகரீக மோகமும், உல்லாச வாழ்க்கையும் தான் குறின்னு அலைகிற பொண்ணுகளைப் பார்த்து அவனுக்கு வெறுப்பே வந்துவிட்டதாம். தாரமாக வருபவள் தன் அம்மா மாதிரி அடக்க ஒடுக்கமாக இருக்கணும்ன்னு தேடுறான். இன்னும் கண்ணில் அகப்படவில்லையாம். அதனால் கல்யாணமே வேணாம்ன்னு சொல்கிறான். எப்படியாவது அவனை மடக்கிப் போட்டு மாப்பிள்ளை ஆக்கிக்கோன்னு நச்சரிக்கிறான், கோவிந்தன்.''

தண்ணீர் குறைந்து காய்கறிகள் அடிப்பிடிக்கும் மணம் வரவும் ''அடடா... பேச்சு சுவாரஸ்யத்தில் இதை கவனிக்கலையே?'' என்று புலம்பியவாறு கொஞ்சம் நீர்



விட்டு, தொடர்ந்து வதக்க ஆரம்பித்த சரோஜா அப்படியே பேச்சைத் தொடர்ந்தாள்.

''அதுசரிங்க... நம்ம வீட்டுப் பொண்ணுகளும் நாகரீகம்தானே. அதுவும் பெரியவள் அதி நாகரீகம் ஆச்சே. வேணும்னா சின்னவள் சரிப்படுவா. அவ கொஞ்சம்... கொஞ்சம் என்ன.... நிறையவே அடக்கம். இந்தக் காலத்தில் யாரு தாவணியும் சேலையும் உடுத்துறா? சுடிதார் தானே.

அதுவும் கூடாதுன்னா அவன் ஏதாவது கிராமத்துக்குப் போய் ஒரு அருக்காணியையோ... சொக்கியையோ தான் தேடி மணக்கணும். இப்போ அவங்ககூட நாகரீகம் கத்துகிட்டாச்சு... காஞ்சிப் பட்டு உடுத்தி, கண்நிறைய மை தீட்டி, நெற்றி நிறைய குங்குமம் வச்சு வரணும்ன்னு ஆசைப்பட்டா... அவன் அதோகதிதான்.''

''பார்த்துப் பேசு சரோ... நம்மோட வருங்கால மாப்பிள்ளை அவன். தனக்கு வருகிற மனைவி நாகரீக பெண்ணாக இருக்கணும்ன்னு எதிர்பார்க்கிற பசங்க மத்தியில் இப்படியும் ஒருத்தன்னா அதை மெச்சணும். இந்த வீட்டு வருங்கால மாப்பிள்ளையை ராஜமரியாதையோடு நாம கவனிக்கணும், தெரிஞ்சுக்கோ.''

''மாப்பிள்ளை... யாருக்குப்பா?'' சாப்பாட்டு மேசை முன் வந்து அமர்ந்துகொண்ட மூத்தவள் சுஜிதா கேட்டாள்.

அவளைப் பார்த்து முகம் சுளித்தாள், தாய். ஜீன்ஸ் பனியன்! பேய்பிடித்தவள் மாதிரி கூந்தலை விரித்துப் போட்டிருந்தாள்... இதழ்களில் கொஞ்சம் அதிகமாகவே உதட்டுச் சாயம்...



''என்னடீ இந்த அவதாரம்.. கொஞ்சம் அடக்க ஒடுக்கமா இருக்கக்கூடாதா? இந்தக் கண்றாவி உடையை கழட்டி போட்டுட்டு நல்ல சேலையை உடுத்திக் கோயேன்'' எரிச்சலுடன் சொன்னாள், சரோஜா.

''ஏன்... இந்த உடைக்கு என்னவாம்? நல்லாதானே இருக்கு. சரி... மாப்பிள்ளை... ராஜமரியாதைன்னு காதில் விழுந்ததே, என்னப்பா அது?''

''என் நண்பனோட மகன் வர்றான்ம்மா... இங்கே ஒரு ஆறேழு மாதம் தங்குகிறதா உத்தேசமாம். அவனைத் தான் மாப்பிள்ளைன்னேன்... நாளைக்கு மாப்பிள்ளையாகப் போகிறவன்தானே!''

''அய்யோ அப்பா... என்னை மனசில் வச்சு பேச வேண்டாம். என் கனவெல்லாம் ஆகாயத்தில் பறக்கிறது தான். அதாவது விமானப் பணிப்பெண்ணாக வேண்டும். கூடிய சீக்கிரம் கிடைத்துவிடும். அதுக்கு இந்தக் கல்யாணம், குடும்பம் எல்லாம் ஒத்துவராதுப்பா... வேணும்னா உங்க இளைய மகளுக்கு கட்டி வையுங்க. அம்மா! கொஞ்சம் வெங்காய சட்னி வை.''

''ஆமாம்.... நீ கல்யாணம் பண்ணிக்காமல் இப்படியே இருந்துடுவியா?''

''பண்ணிப்பேன்... இல்லைன்னு சொல்லலைம்மா.. ஆனா இப்போ கிடையாது.''

''ஓகோ! அவ்வைக் கிழவியாக ஆனதுக்கு அப்புறம்ங்கிறே... அதுக்கு ஏத்த மாதிரி தாத்தா கிடைக்கணுமேடி... முடியுமா?''

''ஆனாலும் உங்க பொண்டாட்டிக்கு ரொம்பத்தான் கொழுப்புப்பா... நக்கலைப் பாருங்களேன்!'' இட்லியை



சட்னியில் தோய்த்து வாயில் போட்டவாறு சொன்னாள், சுஜிதா.

''பின்னே... பிடி கொடுக்காம பேசினால் உன் அம்மாவுக்கு கோபம் வராதா? ஏற்கனவே இரத்த அழுத்தம்! உன் பேச்சில் இன்னும் சூடாகி, இரத்தம் கொதித்து உச்சத்துக்கு அழுத்தம் எகிறிடுமே?''

''அதுசரி.. நீங்க எப்படி உங்க மனைவியை விட்டுக் கொடுப்பீங்க?''

''அது முடியாதும்மா... நீங்க கல்யாணம் ஆனதும், கணவனோடு போயிடுவீங்க... நான் அம்மாவோடுதானே இருக்கணும். அவளைப் பகைச்சிட்டு இருக்கமுடியுமா? சொல்லு.''

சரோஜா, கணவனை முறைத்தாள்.

''இதுக்குப் பேருதான் வஞ்சகப் புகழ்ச்சிங்கிறது... ஏத்துற மாதிரி இறக்கிறது. ஒத்து ஊதுறமாதிரி ஊதி காலை வாருவது. இதுக்கு என்ன தண்டனை தெரியுமா? வாய்க்கு சுவையாக சமைச்சு போடுறதை நிறுத்திட்டு, உப்பு - சப்பு இல்லாம வடிச்சு கொட்டுறதுதான். இருங்க, பண்ணுறேன்.''

''பார்த்தாயா இதுக்குத்தான் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கக்கூடாதுன்னு சொல்றது... உங்க அம்மாவுக்கு கோபம் வந்தா வீடு தாங்காதுன்னு தெரியாதா, சுஜி?''

''அப்பா... ரொம்பத்தான் 'பாவ்லா' காட்டுறீங்க. சரி, உங்க அருமை மாப்பிள்ளை எங்கிருந்து குதிக்கப் போகிறார்? வானத்திலிருந்தா? இந்திரலோகத்திலிருந்தா?''

''எங்கும் இல்லை... ஆந்திராவிலிருந்து.''

''ஓ! குல்டி!''

''வாயிலே போடுவேன்... என்னடீ குல்டீ?''

''என்னம்மா... ஏதோ நான் வைச்ச பேரு மாதிரியில்லே குதிக்கிறே? எல்லோரும் சொல்றதுதான். ஆங்கிலத்தில் 'தெலுகு' என்பதை திருப்பிப்போட்டா 'குல்டி'ன்னு வரும். ஏம்ப்பா.. ஆந்திரான்னா அவங்களுக்கு தமிழ் வராதோ?''

''அவர்களும் நம்மளை மாதிரி தமிழர்கள்தான். ஆந்திராவில் போய் குடியேறிட்டாங்க. நிறைய நிலம் இருக்கு. நெல் விளைச்சல் அமோகமா இருக்கு. மாந் தோப்பு, தென்னந்தோப்புன்னு ஏகப்பட்ட சொத்து.... பத்தாதுக்கு சூரியகாந்தி எண்ணெய் வியாபாரம் வேறு. அவங்க, பரம்பரை கோடீஸ்வரங்கம்மா. இங்கே சென்னையிலும் அவர்களது வியாபாரக் கிளைகள் இருக்கு. அவர்களுடைய விற்பனையை விரிவுபடுத்த வேண்டி அந்தப் பிள்ளை இங்கு வருகிறான்.''

சுஜிதா எழுந்தாள்.

''என்னம்மா எழுந்துட்டே?''

''போங்கப்பா... நீங்க சொல்றதைப் பார்த்தா ஏதோ அலுத்துப்போன அசமந்தமாகத் தெரியுது. பேரு என்ன... பிச்சுமணியா? அரிசி... சூரியகாந்தி, தென்னந்தோப்புங் கிறீங்க. தெலுங்குப் படத்தில் வேட்டியை தார்ப்பாய்ச் சிக்கிட்டு ஜெயப்பிரதாவோடு 'டூயட்' பாடிய என்.டி..ஆர். நினைவுதான் வருகிறது.

பார்த்துகிட்டே இருங்க... உங்க நண்பரோட பைய னும் அப்படித்தான் வந்த இறங்கப்போகிறான். ஆகா...



ஓகோன்னு புகழ்ந்துதள்ளும் நீங்க வாயடைச்சு நிக்கப் போறீங்க... சுத்த போர் நான் வர்றேன்.''

கைப்பையை சுழற்றியவாறு சென்ற மகளைப் பார்த்துவிட்டு மனைவியை ஏறிட்டார், வேணுகோபால்.

''எதுக்குங்க யோசனை? முதல்ல அந்தப் பிள்ளை வரட்டும். அப்புறம் பார்ப்போம். இப்ப சாப்பிடுங்க. இட்லி ஆறிடும்.''

''ஆமாம்... சுஜாதா சாப்பிட்டாச்சா?''

''இப்பத்தான் குளிக்கறா. அவ வர இன்னும் நேர மாகும். நீங்க சாப்பிடுங்க.''

அவர் சாப்பிட்டு முடிக்கும்போது இளைய மகள் வந்தாள். இளம்மஞ்சள் நிற சுடிதாரில் அப்போதுதான் பூத்து சிரிக்கும் செவ்வந்தி பூப்போல இருந்தாள்.

சுஜிதாவும் சுஜாதாவும் இரட்டைப் பிறவிகள் என் பதை அவர்களது தோற்றத்திலே தெரிந்துவிடும். அப்படி அச்சில் வார்த்தது போல இருந்தனர்.

அவர்களைப் பார்ப்பவர்கள் முதலில் திகைத்து, பின் குழம்பிப்போவார்கள். இதில் யார் சுஜிதா? யார் சுஜாதா?

ஏன் பெற்றவர்களே கொஞ்சம் உற்றுப் பார்த்துதான் தெளிவார்கள்.

மூத்தவள் சுஜாதா, இளையவளைவிட இரண்டு அங்குலம் உயரம்.

சுஜாதாவுக்கு சிரித்தால் கன்னத்தில் அழகாய் - சின்னதாய் குழி விழும். மேல் உதட்டின் வலப்பக்கம் புள்ளியாய் சின்ன மச்சம்.

ஒருவேளை பார்ப்பவர்களுக்கு அதிக குழப்பம் வேண்டாம் என்று, படைத்த பிரம்மனே நினைத்தானோ என்னவோ!



சுஜிதா, அதீத நாகரீகப் பிரியை.கழுத்துவரை வெட்டி விட்ட கூந்தல். அடிக்கடி அழகு நிலையத்திற்கு சென்று தன்னை இன்னொரு ஐஸ்வர்யா ஆக்கிக்கொள்ளும் ஆர்வம்.

சுஜாதா அப்படி இல்லை. தன் தாயின் விருப்பத்திற்கு மதிப்பு கொடுத்து, தன் அடர்ந்த கூந்தலை வெட்டி விடாமல் முதுகு வரை புரளும்படி வளர்த்திருந்தாள்.

சுபாவத்தில் இருவருக்கும் எத்தனை வித்தியாசம்?

தான் அழகி என்ற கர்வம் சுஜிதாவுக்கு என்றைக்கும் உண்டு. அவளது கண்களில் அது தெரியும். நடையில் ஒய்யாரம்.... இதழ்களில் மற்றவர்களை மட்டம்தட்டும் புன்னகை. 'அட! என்னைவிடவா நீ அழகு?' என்பது போல்.

சுஜாதா அப்படி இல்லை... கண்களில் வசீகரிக்கும் சிநேகப் பார்வை... இதழ்களில் வரவேற்கும் புன்னகை... வார்த்தைகளில் வணங்கி பணியும் மென்மை...

சுஜிதாவிடம் படபடப்பு அதிகம். தன் தங்கையைப் போல நிதானமில்லை. எல்லாமே அவசரம். அவளது கனவு - வாழ்வின் ஒரே இலட்சியம் அழகிப் போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்பது. அதற்குத் தாயின் சம்மதம் கிடைக்கவில்லை என்பதால் அதே உல்லாச வாழ்வையும் பண செழுமையையும் தரும் விமானப் பணிப்பெண் வேலைக்குத் தாவியது அவள் மனம்.

தன் அழகுக்கும் திறமைக்கும் நிச்சயம் அந்த வாய்ப்பு கிடைக்கும் என்ற முழு நம்பிக்கை. அவளுக்கு இருந்தது. அவளது 'மெகா' கனவு, ஒரு பெரிய கோடீஸ்வரனை மணந்து வாழ்க்கையின் சொகுசுகளை - இன்பங்களை



ஆசைதீர அனுபவிக்க வேண்டும். அவன் அழகனாக இருந்தால் கூடுதல் போனஸ் மாதிரி... அவளது அழகில் தேன் குடித்த வண்டாக மயங்கி... மதுக்குடத்தில் விழுந்த ஈயைப்போல அவன் விழுந்த கிடக்க வேண்டும்.

மொத்தத்தில் அவள் விரும்பியது ஒரு கூஜா... அதுவும் தங்கக் கூஜா.

விமானப் பணிப்பெண் வேலையில் இதெல்லாம் சாத்தியம் ஆயிற்றே. எத்தனை பெரும்புள்ளிகள்... தொழில் அதிபர்கள்... நடிகர்கள்... கிரிக்கெட் வீரர்கள்... செல்வச் சீமான்கள் பயணம் செய்கிறார்கள். யாராவது ஒருவன் கிடைக்கமாட்டானா? வலைவீசினால் மீன் சிக்கியே தீரும்.

அப்படிப்பட்டவள் ஆந்திராவில் வெளியே தெரியாத ஊரில் நிலத்தைக் கட்டிக்கொண்டு அழும் ஒருவனை தன் மணாளனாய் நினைத்துப் பார்ப்பது என்பது... ஊகூம்!

சுஜாதாவின் எண்ணங்களும் இலட்சியங்களும் வேறாக இருந்தன. படிப்பில் மிக ஆர்வம். உடன்பிறந்தவள் பி.எஸ்சி.யுடன் நின்றுவிட... அவள் இன்னும் தொடர்ந்து படித்தாள். சுஜிதாவைப் போல அதீத நாகரீகம் இல்லை. ஜீன்ஸ் என்றால் முகம் சுளிப்பாள். சுடிதார் கவுரவமான உடை என்று அதை உடுத்துவாள். தன் அழகைப் பற்றிய கவனம் இல்லை... எளிமையாக இருப்பவள். எல் லோரிடத்திலும் இனிமையாகப் பழகுபவள். அவளுக்கும் ஒரு குறிக்கோள் இருந்தது.

கல்லூரி பேராசிரியராவது. மாணவர்களின் அறி யாமை இருட்டை நீக்கி, அறிவு ஒளி ஊட்டும் புனிதப் பணி அல்லவா அது.

இருவருக்கும் இடைவெளி பத்து நிமிடம்தான்! ஆனால், அவர்களின் குணாதிசயத்தில் எத்தனை வித்தியாசம்! பத்து நிமிடத்துக்குள் அத்தனை மாற்றமா?

சரோஜாவுக்கு தன் இளைய மகளை நினைத்து பெருமை! கூந்தலை அழகாய் வாரி பின்னலிட்டு, மல்லிகையை முடித்திருந்தாள். அவளது விழிகள் மை தீட்டாமலே அழகாய் இருந்தன.

சுஜிதாவைப் போல உதட்டுச் சாயமோ, அளவுக்கு மீறிய ஒப்பனையோ இல்லாமல் மிதமான அலங்காரத்துடன் இருந்த சின்ன மகளை மனசுக்குள் மெச்சிக் கொண்டாள்.

பெண் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். பெரியவளும் இருக்கிறாளே... தொடையைக் கவ்விக் கொண்டிருக்கும் அந்த ஜீன்சும்... கண்றாவி பனியனுமாய்... தலையை விரித்து போட்டுக்கொண்டு பகவதி கோவிலில் பேய் ஓட்டுறவங்க மாதிரி அலங்கோலமாய்....

ஒரே வயித்தில்... ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டையில் ஒருத்தி அப்படியும்... ஒருத்தி இப்படியும்!

''அம்மா! சாப்பாடு தயாரா? ஒரே பசி...'' இளைய மகளின் குரல் இழுத்தது.

''நீ தாமதமாக வந்தா எப்படி? வா... தயாராக இருக்கு.''

''ஆமா... உன் அழகு மகள்... எனது அருமைச் சகோதரி எங்கே? அதுக்குள் போயாச்சா? கல்லூரிக்கு போகிற எனக்கே அத்தனை அவசரம் இல்லை. அவளுக்கு என்ன அப்படி வேலையாம்? ஏம்மா... அதை நீ கேட்கிறதில்லையா?''



''ஆமா... கேட்டாலும் ஒழுங்கா பதில் சொல்லிடப் போறாளாக்கும்? பந்தயக் குதிரை மாதிரி 'டக்டக்'குன்னு எங்கோ போறா. எப்பவோ வர்றா. தட்டிக்கேட்டா பட்டிக்காடு மாதிரி இருக்காதேம்மான்னு என்னையே அடக்குகிறாள். எல்லாம் உன் அப்பா கொடுக்கிற செல்லம்டீ....''

''சரிம்மா.. அதுக்கு நான் என்ன செய்தேன்? அக்கா மேலே இருக்கிற கோபத்தில் சட்னியை இஷ்டத்துக்கு கொட்ட வேண்டாம். கல்யாணம் ஆகிறவரைக்கும்தான் இப்படி... அப்புறம் எல்லாம் சரியாகிவிடும்ன்னு நீதான் சொல்லுவியே?''

''எனக்கும் அதான் நம்பிக்கை. யாரோ ஒரு பிள்ளை இங்கு வரப்போறதாய் உன் அப்பா சொல்றார். அவனையே மாப்பிள்ளையாக்கிவிடலாம்ன்னு யோசனை... பார்க்கலாம்.''

''யாரோவா... என்னம்மா இது? நம்ம தனிமைக்கு தொந்தரவாகிடுமேம்மா'' கண்களில் திகைப்பு தெரிய கேட்டாள், மகள்.

''அப்படியெல்லாம் வராது. நம் மாடியில்தான் அறை. அப்பாவின் நண்பரின் மகன். ரொம்ப பெரிய இடம். பார்க்கலாம், யாருக்கு கொடுப்பினை இருக்கோ?''

''அய்யோ... உலகத்தில் இவனைவிட்டா வேறு ஆண்பிள்ளையே இல்லைங்கிற மாதிரி இருக்கும்மா, உன் பேச்சு. ஆள் எப்படி... முரடா, முசுடா, உம்மண்ணா மூஞ்சியா? இப்படி எதுவும் தெரியாமல் ஒரு முடிவுக்கு வரவேண்டாம்மா... அக்காவோட குணத்துக்கு பொருத்தமா மாப்பிள்ளை அமையணும். அவளோட



சுதந்திர போக்குக்கு விட்டுக்கொடுத்து... அதேநேரம் எல்லை மீறாமல் கடிவாளம் போட்டு நிறுத்துகிற மாதிரி கண்ணியமான - கட்டுப்பாடான ஒருத்தர் தேவைம்மா.''

''நீ சொல்றதும் சரிதான், சுஜா. இப்ப எதுக்கு மூளையைக் குழப்பிக்கணும்? முதலில் அந்தப் பிள்ளை வரட்டும்... அப்புறம் பார்த்துக்கலாம்.''

''சரி... இப்ப நான் கல்லூரிக்குப் புறப்படலாம் தானே?''

''புறப்படு.''

''அம்மாடி... தப்பித்தேன்.''

பாசாங்கு பயத்துடன் ஓடிய சின்ன மகளைச் சிரிப்புடன் பார்த்தாள், சரோஜா.

''உன்கிட்டே 'பிரசங்கம்' அடித்துவிட்டு போகிறாளா உன் பொண்ணு?'' புறப்படத் தயாராகி வந்த வேணு கோபால் கேட்க...

''பெரியவ அலட்சியமா பேசினாள். சின்னவ பொறுப்பா பேசுகிறாள். எதுக்கு அவசரம்? பிள்ளையைப் பார்த்துட்டு முடிவு பண்ணுங்கன்னு பெரிய மனுஷி மாதிரி பேசிட்டு போறா. ஏங்க... ஒரே வயித்தில்தான் சுமந்தேன். ஒண்ணாதான் பத்து மாதம் இருந்தன... ஒரே நாளில்தான் இவங்களை பெத்தேன். ஆனா, எத்தனை வித்தியாசம் பார்த்தீங்களா?''

''உன் பொண்ணுகளை நினைச்சு 'ஆ'ன்னு வாயைப் பிளந்து நின்றுகொண்டிருக்காமல் வேலையைப்பாரு, சரோ. அந்தப் பையன் எந்த நேரத்திலும் வரலாம். நான் போய் சீக்கிரம் வேலையை முடித்துக்கொண்டு வருகிறேன்.... என்ன?'' என்று கூறிவிட்டு புறப்பட்டார்.



அவர் சென்றதும் 'மளமள'வென்று மாடி அறையை சுத்தப்படுத்தி, திரைச்சீலைகளையும்... படுக்கை விரிப்பையும் மாற்றினாள்.


என்னவோ மனசுக்குள் நெருடல்... 'இது நல்லதுக்கா? இல்லை விபரீதத்திற்கா?'

இரண்டு பெண்களை வைத்துக்கொண்டு, காஷ்மீரத்துப் பெண்கள் வயிற்றில் நெருப்புச் சட்டியை சுமந்து திரிவது போல இருக்கிறதே? வருகிற பையன் எப்படிப்பட்டவனோ?

ஒருவேளை.. அவன் பொறுக்கியாக இருந்துவிட்டால்? கடவுளே... கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொறிந்து கொண்ட கதையாகிவிடுமே?

மனதில் பயம் கவ்வியது. சஞ்சலம் புகுந்து விளையாடியது. எல்லாமே பரத் வரும்வரைதான். அவனைப் பார்த்ததும் எல்லாம் மாயமாகிப்போனது.

'இவன்தான்... இவனேதான் என் வீட்டு மாப்பிள்ளை' முடிவு செய்துவிட்டது அவள் மனம்.



## 2

சரியாய் நாலரை மணிக்கு காரில் வந்து இறங்கினான், பரத்.

படித்த களை முகத்தில் சொட்டியது. விசாலமான நெற்றி, அவனை அதி புத்திசாலி என்று அடித்துச் சொன்னது. அழகான கண்களின் கூரிய பார்வை எதையும் சரியாய் எடைப்போடுவதில் வல்லவன் என்று காட்டியது. உதடுகளின் அழுத்தம்,

என்னை யாரும் அவ்வளவு எளிதில் ஏமாற்ற முடியாது என்று எச்சரித்தது. அகன்ற தோள்களும், முறுக்கேறிய உடம்பும் என்னை எதிர்த்துப் பார் என்று பயம் காட்டின.

தலை நிமிர்ந்துப் பார்க்கும் உயரமும், மேனியின் செழிப்பும் அவன் செல்வச் சீமான் என்று கூறாமல் கூறின. வசீகரமானத் தோற்றமும் காந்தப் பார்வையும் என்னால் எந்தப் பெண்ணையும் வசப்படுத்த முடியும் என்று சவால் விட்டன.

''வாப்பா... பயணம் சுகமாக இருந்ததா?'' என்ற குசல விசாரிப்புடன் வரவேற்றார், வேணுகோபால்.

''எந்தத் தொந்தரவும் இல்லை. அப்பா சரியாக வழி காட்டி இருந்ததால் எளிதாய் உங்கள் வீட்டைக் கண்டுபிடிக்க முடிந்தது.''

சரோஜா மலைத்துப்போய் நின்றிருந்தாள்.

இவனா பரத்!

அடடா... இவன் மாப்பிள்ளை என்றால் கொடுத்து வைத்திருக்க வேண்டும்தான்.

அவன் சிரிக்கையில் எத்தனை அழகு... ஆளை மயக்கும் வாளிப்பு...

நிச்சயம் சுஜிதா மயங்கத்தான் போகிறாள்.

''என்ன சரோ... விருந்தாளி வந்தாச்சு. உள்ளே கூப்பிடாமல் சிலையாக நிக்கிறே?''

கணவர் சொன்னதும் தன்னை சுதாரித்துக்கொண்டு வரவேற்றாள்.

''அப்பா உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். 'சென்னையில் எனக்கு இருக்கும் ஒரே நெருங்கிய



நண்பன் வேணுகோபால் தான்' என்பார். அதான் நேரே இங்கே வந்தேன்.''

அவனது சகஜமான பேச்சும், கலகலப்பான சுபாவமும் ரொம்பவே பிடித்துப்போனது.

சரோஜாவின் மனசுக்குள் பரத் மேல் மதிப்பெண் கூடிக்கொண்டே போனது. அவளிடம் சொன்னான் -

''அம்மா உங்களுக்காக ஏதோ கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். இருங்க, கொண்டுவருகிறேன்'' என்று சென்றவன், பெரிய கூடையொன்றை எடுத்து வந்தான்.

கூடை முழுக்க விதவிதமான டப்பாக்களில் தினசு தினுசாய் ஊறுகாய், பொடிகள்.

''எதுக்குப்பா இத்தனையும்? பாவம்... உன் அம்மா வுக்கு வீண்சிரமம்.''

''எல்லாம் அம்மாவோட கைப்பக்குவம். தன் கைவரிசையை காட்டுவதில் அம்மாவுக்கு பெருமை. எல்லாமே ஆந்திரா ஸ்பெஷல்.''

''சரி தம்பி.. போய் கை கழுவிக்கொண்டு வாங்க. சாப்பிடலாம்'' என்று அழைத்தாள், சரோஜா.

''அய்யோ... இந்த ரெண்டுகெட்டான் வேளையிலா? எதுவும் வேண்டாம். வரும்வழியில் வெயிலுக்கு மோர் குடித்து வயிறு நிரம்பி இருக்கு. பிளீஸ்... வேண்டாமே!''

சரோஜாவுக்கு ஏமாற்றம்தான். சிரத்தையாய் செய்து வைத்திருக்கும் கிச்சடியை சாப்பிட்டுவிட்டு அவன் பாராட்ட வேண்டும் என்ற ஆசையில் மண் விழுந்துவிட்டதே!

''சரி... காப்பியாவது குடியுங்க தம்பி'' என்று காப்பி கலந்துவரச் சென்றாள்.



பரத்தும் வேணுகோபாலும் பேசிக்கொண்டிருந்தனர். ஆந்திராவின் அரசியலில் தொடங்கி கிரிக்கெட் போட்டி வரை தொடர்ந்த சுவாரசியத்தில் நேரம் போனதே தெரியவில்லை.

''என்னங்க... நீங்க பாட்டுக்கு பேசிக் கொண்டிருந்தா எப்படி? தம்பி கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கட்டும். பாவம், அத்தனை தூரம் கார் ஓட்டி வந்திருக்கிறார்'' காப்பி தம்ளரை எடுக்க வந்த சரோஜா சொல்ல...

''எனக்கு இந்த 'ங்க்' மரியாதையெல்லாம் வேண்டாம். 'பரத்' என்று பெயர் சொல்லிக் கூப்பிடுங்க'' என்றான், பரத்.

''அது எப்படி?'' என்று ஆரம்பித்த மனைவியை சைகையால் அடக்கினார், வேணுகோபால்.

''பரத் சொல்றதும் சரிதான் சரோ. அவனும் நம்ம வீட்டுப் பிள்ளைதானே. மூணாவது மனிதனாக நினைச்சு பேச வேண்டாம். சரிப்பா.... போய் ஓய்வு எடுத்துக் கொள். மாடியில் உனக்கு வசதியாய் இடம் ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்றதும் பரத் எழுந்து சென்றான்.

ஐந்து மணிக்கு சுஜாதா வந்தாள்.

''என்னம்மா... உன் மாடி வீட்டு மாப்பிள்ளை வந்தாச்சா?''

''உஷ்... மெல்லடீ....''

தணிந்த குரலில் மகள் மறுபடியும் கேட்டாள். ''என் னம்மா... உன் மாடி வீட்டு மாப்பிள்ளை வந்தாச்சா?''

''வந்தாச்சு... அவனுக்கு இந்த 'மாப்பிள்ளை' விசயம் எல்லாம் தெரியாது. ஏதோ தங்க வந்திருக்கிறான். எதை யாவது உளறி காரியத்தைக் கெடுத்துவிடாதே, சுஜா.''



''சரி... எப்படி இருக்கிறான்? அதைச் சொல்லும்மா... உனக்கு பிடிச்சாச்சா?''

''மரியாதை கொடுடீ.... பரத் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாகப்போகிறவன்.''

''ஓ! தீர்மானமே பண்ணியாச்சா? அப்போ அவரைப் பார்க்கணுமே! ஏம்மா... நான் பாட்டுப் பாடினால் இறங்கி வருவாரா, உன் அருமை மாப்பிள்ளை?'' என்றபடி ''தரிசனம் கிடைக்காதா என்மேல்'' என்று ராகத்துடன் இழுத்தவளின் குரல் அப்படியே நின்றது.

அப்போதுதான் மாடியிலிருந்து இறங்கி வந்து கொண் டிருந்தான், பரத்.

அரண்மனை உப்பரிகையிலிருந்து இறங்கி வரும் ராஜகுமாரனைப் போல அழகாய் - மிடுக்காய் - கம்பீரத் துடன். சந்தன நிறச் சட்டையும், கறுப்பு நிறப் பேன்ட்டும் அவனது வசீகரத்தை இன்னும் கூட்டிக்காட்டின.

மகுடி முன் நாகம் போல கிறங்கி நின்றிருந்த சுஜாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அந்தப் புன்னகையைக் கண்டதும் அவளின் இதயம், தாளம் தப்பி ஒலித்தது. உள்ளுக்குள் ஏதோ தடம் புரண்டது போல தெரிந்தது.

அந்தக் கணத்தில்தான் அவளைக் கேட்காமல் மன சுக்குள் நுழைந்துவிட்ட பரத் அமர்த்தலாய் கால் மேல் கால் போட்டு அங்கு அமர்ந்துவிட்டான்.

''அலோ... என் பெயர் பரத்.''

கனவிலிருந்து விடுபட்டவள் போல விழித்துவிட்டு, அவளும் ''அலோ'' என்றாள்.

அவளது கருவண்டு கண்கள் அவனது முகத்தை சுற்றிவந்தன.

'ஆண்களில் இப்படியும் ஒரு அழகனா?'

''நீங்க வேணு மாமாவின் மகள்... சரியா? ஏதோ கனவில் மிதக்கிற மாதிரி தெரிகிறது... என் தலையில் ஏதாவது கொம்பு முளைத்திருக்கிறதா? இப்படிப் பார்க்கிறீர்கள்?''

அவள் முகம் சிவந்தாள். இத்தனை நேரமாக அவனையே பார்த்துக்கொண்டிருக்கிறேன்.... அவன் என்ன நினைப் பான்? ச்சே! ஏன் இப்படி மனம் தடுமாறிப்போனேன்? பேச்சும் தடுமாறித்தான் வந்தது.

''நான்... சாரி... நீங்க... உங்களை...'' திக்குத்திணறி னாள், சுஜா.

''எதிர்பார்க்கவில்லை இல்லையா? நான் வந்தபோது நீங்கள் இல்லை. ஆமாம்... என்ன செய்கிறீர்கள்? படிக் கிறீர்களா? இல்லே வேலையா மிஸ்...''

''சுஜாதா. எம்.எஸ்சி. கணக்கு படித்துக்கொண்டிருக் கிறேன். கடைசி ஆண்டு.''

''பெண்கள் அதிகம் படிக்க வேண்டும். அப்போது தான் தன்னம்பிக்கையும் மன உறுதியும் வரும். என்ன சொல்றீங்க சுஜாதா?''

அவனது கலகலப்பான பேச்சும் நல்ல சிந்தனையும் அவளது மனதைக் கவர்ந்தன.

''ஆமாம்... அம்மாவை எங்கே காணோம்?''

அப்போதுதான் உணர்வு வந்தது.

''ஆமாம்... அம்மா எங்கே போனாள்? இங்கேதானே இருந்தாள்?''



''இதோ வந்துட்டேன், பரத். மாடியிலிருந்து நீ வர்றதைப் பார்த்ததும் காப்பி போட போனேன். அப் படியே சூடா பக்கோடாவும் செய்திருக்கிறேன். சாப் பிடுப்பா'' என்று சொன்னாள், சரோஜா.

''எண்ணெய் பொருளா? வேண்டாம்...நான் தொடு வது இல்லை'' என்றவன் சரோஜாவின் முகவாட் டத்தைக் கண்டதும் ''சரி... கொஞ்சமாகக் கொடுங்கள் போதும். உங்களுக்காக சாப்பிடுகிறேன்'' என்றான்.

அதை வாயில் போட்டு சுவை பார்த்தவன் ''அருமையா இருக்கு. இந்த உலகத்தில் என் அம்மாவின் கைவண்ணம் தான் சுவைன்னு நினைத்திருந்தேன். இப்போ அந்தப் பட்டியலில் நீங்களும் சேர்ந்துவிட்டீர்கள்!''

அவன் மெச்சியதும், தலைநிறயை பனிக்கட்டியை வைத்தது போல உருகிப்போனாள், சரோஜா.

தன் கைக்குட்டையால் உதடுகளை ஒற்றியவன் ''சரி... நான் புறப்படுகிறேன். அவசரமாக ஒரு நண்பனைப் பார்க்க வேண்டி இருக்கிறது. ஒன்பது மணிக்கு வந்து விடுகிறேன். சுஜா, வர்றேன்'' என்று அவன் புறப்பட் டதும்... கண்ணில் இருந்து மறையும்வரை அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள், சுஜா.

''எப்படி இருக்கிறான் பார்த்தியா சுஜா? சர்வ லட்சணமா இல்லை... இவனைக் கணவனா அடைய கொடுத்து வச்சிருக்கணும். நீ என்ன சொல்றே?''

'அந்த கொடுப்பினை எனக்கு இருந்தால்....' மனம் ஏங்கியது.

கல்லூரி வாழ்க்கையில் எத்தனையோ ஆண்பிள்ளை களை அவள் சந்தித்திருக்கிறாள். பேசியும் இருக்கிறாள்.



ஆனால், யாரையும் பார்த்து சலனமடையாத மனம் இவனிடம் மாத்திரம் ஏன் சரணடைய வேண்டும்? கண்டதும் காதல் என்பார்களே, அது இதுதானோ?

''நான் சொல்றதுசரிதானே?'' அம்மாவின் குரலில் கலைந்தாள்.

''என்ன சொன்னேம்மா?''

''நம்ம சுஜிக்கு இவன் படுபொருத்தம்ன்னேன்.''

நெருஞ்சி முள்ளை இதயத்தினுள் நுழைத்ததைப் போல ஒரு வலி...

''சுஜிக்கா... அவள்... அவள் சம்மதிப்பாளாம்மா?''

''எல்லாம் சம்மதிப்பாள். பரத்துக்கு என்ன? கண் ணுக்கு லட்சணமா ராஜா மாதிரி இருக்கான். அப்படி இல்லாவிட்டால் வற்புறுத்தியாவது சம்மதிக்கச் செய்ய மாட்டேனா?''

'அப்போ... பரத் எனக்கில்லை... அவனை இழந்து நிற்கப்போகிறேனா?'

நெஞ்சம் பாரமானது. கண்ணில் நீர் தேங்கியது. அதுநாள் வரை எந்தக் கவலையும் இல்லாமல் மான் குட்டியாய் வளையவந்த சுஜா, முதன்முதலாய் தன் நிம்மதியைப் பறிகொடுத்தாள்.



3

''என்னடீ அதிசயம்... என்னிக்கும் இல்லாம நீ சேலை கட்டி இருக்கே? அதுவும் பட்டுச்சேலை! என்ன ஆச்சு... ஜீன்ஸ் வெறுத்துடுச்சா? இரு, இரு. வானம் மப்பும் மந்தாரமா இருக்



கான்னு பார்த்துட்டு வர்றேன்.நீ ஏதாவது செய்யப்போய் அப்புறம் பேய்மழையும், சூறாவளியுமா வந்துட்டா பாவம், மத்தவங்களுக்கு கஷ்டம்டி'' மகளை கிண்டல் செய்தாள், சரோஜா. அவள் எதிரே சுஜிதா, அழகு தேவதையாக நின்றிருந்தாள்.

''என்ன லட்சணமா தெரியுறே... திருஷ்டி சுத்திப் போடணும்டி. பாழாப்போன ஜீன்சிலும், அந்த தொளதொள பனியனிலும் பார்க்க கண்றாவியாக தெரியுறே... திடீர்ன்னு இப்படி வந்து நின்னா எனக்கு மாரடைப்பு வந்துடும்டி... தினமும் சேலை கட்டப் பாரு.''

''சேலை கட்டலைன்னு புலம்பறே... கட்டினா கிண் டலா பேசுறே? போம்மா...''

''கிண்டல் இல்லேடி... என் பொண்ணோட அழகைப் பார்த்த சந்தோஷம்... அதான் பேசுறேன். என்னதான் சொல்லு... பெண்ணுக்கு கல்யாண வயசு வந்தாச்சுன்னா சேலைதான் அம்சமா தெரிகிறது. இனிமே அந்த ஜீன்ஸ் கர்மத்தையெல்லாம் தூக்கி போட்டுடு... போதுமா?''

''அய்யோ அம்மா... இன்னிக்கு ஒருநாளே போதும் போதும்ன்னு ஆச்சு. எப்படித்தான் இதை உடுத்துறியோ? சேலையை சுத்திசுத்திக் கட்டுறது ஏதோ சர்க்கஸ் வேலை பண்ணுற மாதிரி இருக்கு. கழட்டி எறியலாம் போல தோணுது. தோழியோட திருமணம்ன்னு உடுத்திக் கொண்டேன். ஒருநாள் கூத்துடன் சேலைக்கு முழுக்குதான். எனக்கு என்னோட ஜீன்சும் பனியனும்தான் லாயக்கு.''

தலையில் அடித்துக்கொண்டாள், தாய். ''கல்யாணத் தன்று என்ன பண்ணுவே? அப்ப சேலை கட்டித்தானே ஆகணும்... அப்பவும் 'மாட்டேன்' என்பாயா?''

''நான்தான் திருமணமே வேண்டாம்ன்னு சொல்கிறேன்... ஏன் தொணதொணக்கிறேம்மா?''

''ஏன்டீ... உன் வயசு பொண்ணுங்க எல்லாம் தாலிக் கட்டிக்கொண்டு அவளவள் புருஷன், குடும்பம், குழந்தைன்னு வாழ ஆரம்பிச்சாச்சு. இப்பவும் பாரு... உன்னோடு படிச்சவளின் கல்யாணத்துக்குத்தானே போகிறே. இப்படி உன் தோழிகள் எல்லாம் கல்யாணம் பண்ணிக்கொண்டு போனபிறகு நீ மாத்திரம் ஒத்தைக் கொக்காக நிக்கப்போறியா?''

''போம்மா... கல்யாணம்னதும் நினைவுக்கு வருது. எங்கே அந்த ஆந்திராகாரர்...... எப்படி இருக்கான்? கொழுகொழுன்னு அமுல் பேபியாட்டம் இருக்கானா? இளம் பூசணி மாதிரி தொப்பையும் இருக்குமே? சும்மாவா... நல்லா சாப்பிட்டு 'பன்' மாதிரி ஊதியிருக்கும் உடம்பு... என்னம்மா நான் சொல்றது சரிதானே?''

எரிச்சலில் எதுவும் பேசாமல் இருந்தாள், சரோஜா. கண்மூடித்தனமான அபிப்பிராயம்.... என்ன சொல்லி இவளைத் திருத்த முடியும்?

''மவுனம் சம்மதம் என்பார்கள். ஆக நான் சொன்னதெல்லாம் நூத்துக்கு நூறு சத்தியம்... நல்ல வேளையாய் நான் தப்பித்து விட்டேன். வேணும்னா உன் சின்ன மகளுக்கு அவனைக் கட்டி வைத்து உன் அருமை மாப்பிள்ளையாக்கிக் கொள்ளும்மா... நான் 'ஜுட்'. அப்புறம் சொல்ல மறந்துட்டேனே... நான் வர ஆறு மணி ஆகலாம். நீ வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடக்க வேண்டாம். என்ன?''

சேலையில் கால்கள் பின்ன நடந்து செல்லும் மகளை வழியனுப்பிவிட்டு, பெருமூச்சுவிட்டாள், சரோஜா.



'என்றைக்கு இவளுக்கு நல்ல புத்தி வருமோ, ஈஸ்வரா!' என்ற அங்கலாய்ப்புடன் தன் வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள்.

பரத், இன்னும் மாடியிலிருந்து இறங்கி வரவில்லை. அவனுக்கும் சிற்றுண்டி தயாராக இருக்கிறது.

வேணுகோபாலும் ஏதோ அவசர வேலையாக காலை ஏழு மணிக்கே புறப்பட்டு சென்றுவிட்டார்.

வாசல் அருகே பூத்து மணம் வீசிக்கொண்டிருந்த மல்லிகையை இன்றைக்காவது பறித்து சரமாகக் கட்ட வேண்டும் என்று நினைத்து பாத்திரத்தோடு வெளிவந்தாள், சரோஜா. ஆட்டோவில் வந்து இறங்கிய சுஜிதாவைப் பார்த்து வியப்படைந்தாள்.

''ஏன்டி வந்துட்டே?''

''ஊகூம்... நேரே சத்திரத்துக்கு போக நினைச்சேன். ஆனால், திருமண அழைப்பிதழை எடுக்காம போயிட்டேன். பாதி வழியில் ஞாபகம் வர, திரும்பி வந்துட்டேன். அதை எடுத்துக்கொண்டு போனால்தான் சத்திரத்தைக் கண்டுபிடிக்க முடியும்மா'' என்றாள், சுஜிதா.

தன் அறைக்குள் சென்று அந்த அழைப்பிதழை தேடி எடுத்து பைக்குள் வைத்துக்கொண்டு மூடியவாறு வெளியே வந்தவள் எதிரே வந்த பரத்தை கவனிக்கத் தவறினாள்.

அவன் மீது மோதி தடுமாறி விழப்போனாள். எதை யாவது பிடித்துக்கொள்ள வேண்டுமே என்ற வேகத்தில் அனிச்சையாய் அவன் தோள்களைப் பற்றினாள். பரத் இதை சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவனும் சட்டென்று அவளது தோள்களை அணைத்து நிறுத்தினான்.



கண்மூடித் திறக்கும் நேரத்தில் கடல் கொந்தளிப்பு போல அத்தனையும் நடந்து முடிந்துவிட்டது!

எரிச்சலுடன் நிமிர்ந்து பார்த்த சுஜிதா, அப்படியே மலைத்துப்போனாள்.

'இவனா... அந்த பரத்! எத்தனை அழகு?' எரிச்சலும் கோபமும் மாயமாகிப்போக.... ஏதோ இன்ப உணர்வு அவளை ஆட்கொண்டது. இதயம் 'லாலா' பாடியது. உடம்புக்குள் மின்னலைகளின் வேகம்... கண்ணிமைகள் இன்ப அதிர்ச்சியில் படபடத்தன. அவனையே பார்த்தவாறு சிலையாக நின்றிருந்தாள். 'இவனையா வேண்டாம் என்றேன்?'

முதலில் சுதாரித்துக்கொண்டது பரத்தான். அவளை விடுவித்தவாறு ''சுஜாதா... நேத்து சுடிதார். இன்று சேலையா? இரண்டுமே உங்களுக்கு அழகுதான். இன்னைக்கு என்ன அழகிப்போட்டியில் கலந்துகொள்ளப் போகிறீர்களா? அப்போ நிச்சயம் உங்களுக்குத்தான் முதல் பரிசு'' என்றான்.

சுஜிதாவுக்கு 'துணுக்' என்றது.

'சுஜாதாவா... அப்படியென்றால் அவளுடன் அறிமுகம் ஆகிவிட்டதா? இந்த அழகு மன்மதனின் முதல் பரிச்சயம் எனக்கு இல்லாமல் போனதே. ஒருவேளை... சுஜாதா இவன் மனதைத் திருடிவிட்டாளோ?'

'இல்லை... கூடாது... எனக்கு போட்டியாய் யாரும் வரக்கூடாது.'

''என்ன சுஜாதா... மவுனமாயிட்டீங்க? அதுசரி... இன்னிக்கு காலேஜ் இல்லையா? இதற்கும் பதில் வருமா... அதுவும் கிடையாதா?''



''நான்... சுஜாதா இல்லை... சுஜிதா.''

''ஓ! பெயரைத் தப்பாகச் சொல்லிவிட்டேன் போலிருக்கு. நேத்து சுஜாதான்னு சொன்ன நினைவு.''

''நேத்து நீங்க சந்திச்சது என் தங்கை, சுஜாதா. நாங்க இரட்டையர்கள். நீங்கள் பரத்... எங்க அப்பாவின் நண்பரோட மகன். சரியா?''

''ஆமா... உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி - அதிர்ச்சி. என்னால் நம்பவே முடியவில்லை. நீங்கள் இருவரும் ஒரே மாதிரி இருப்பது அதிசயம்தான். நீங்களும் கல்லூரியில் படிக்கிறீர்களா, சுஜிதா?''

''நான் படிப்பை முடித்துக்கொண்டேன். எனக்கு வேலைக்குப் போக வேண்டும் என்ற விருப்பம். அதான் மேலே படிக்கவில்லை.''

அப்போதுதான் கிண்ணம் நிறைய மல்லிகைப்பூக்களுடன் வந்தாள், சரோஜா.

''பரத்... இவள்தான் என் பெரிய பொண்ணு.''

வெண்ணிற பற்கள் தெரிய சிரித்தவாறு ''தெரியுமே. நேத்து சுஜாதா.... இன்று இவங்க. இரண்டு பேரும் நகல் எடுத்த மாதிரி இருக்கிறதைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி. அப்புறம், உங்க ரெண்டு பெண்களுமே அழகிகள்தான்'' என்று அவன் சொன்னதும்...

தேன் உண்ட வண்டாக மயங்கி நின்றாள், சுஜிதா. அவனது மிடுக்கானத் தோற்றம்.... உடையணியும் விதம்... குரலின் கதகதப்பு... கண்களின் காந்தவீச்சு... உதடுகளில் அழகாய் பூக்கும் புன்முறுவல்... பணத்தால் வந்த ராஜகளை! எல்லாம்... எல்லாமே வசிய மருந்தாய் வேலை செய்து அவளைக் கட்டிப் போட்டன.

'இவனை வேண்டாம் என்றது என் முட்டாள்தனம். எந்தப் பெண்ணாவது இப்படிப்பட்ட மணாளனை வேண்டாம் என்று ஒதுக்குவாளா?'

இப்படி ஒருவனுக்காத்தானே வலையைக் கையில் வைத்துக்கொண்டுக் காத்திருந்தேன்... வலைவீசாமல் அவன் கிடைத்திருப்பது என் அதிருஷ்டம்! அது தெரியாமல்.. சே! என்னென்னவோ ஏளனமாய்ப் பேசிவிட்டேனே... எல்லாம் என் அவசர குடுக்கைத்தனம்.

'என் அழகுக்குப் பொருத்தமான இவனே எனக்கு ஏற்ற கணவன்... இனி எனக்கு விமானத்தில் பறக்கும் வாய்ப்பு என்ன... இந்திரலோகப் பதவியும் வேண்டாம்.'

''சரி... நான் புறப்படுகிறேன். இன்னிக்கு சாப்பாடு எல்லாமே வெளியில்தான். சுஜிதா! நீங்க எங்கே போகணும்ன்னு சொன்னால் உங்களை அங்கே விட்டுவிட்டு செல்கிறேன்!''

''உங்களுக்கு எதுக்கு வீண்சிரமம்?'' ஒப்புக்கு மறுத்தாள்.

''நானா உங்களை சுமக்கப்போகிறேன்... என் கார் தானே. வாங்க'' என்றான், அவன்.

'அப்படியே நீங்கள் சுமந்தாலும் அது எனக்கு சுகம் தான், பரத்' என்று மனசுக்குள்ளே பேசினாள்.

''சுஜிதாவும் சுஜாவும் வயசில சின்னவர்கள், பரத். நீ எங்களுக்கு சொன்னதை திருப்பி உனக்கு சொல்கிறேன். இரண்டு பேரையும் 'வா' 'போ'ன்னே சொல்லலாம்'' என்றாள், சரோஜா.

''அப்படியா? மகிழ்ச்சி. சுஜிதா... போகலாமா?''



ஜோடியாய் இருவரும் செல்வதைக் கண்கொள்ளாமல் பார்த்து நின்ற சரோஜா, உள்ளம் பூரித்துப்போனாள்.

'என்ன பொருத்தம்! பிள்ளையாரப்பா... இரண்டு பேர் மனசும் ஒத்துப்போகணும்ப்பா... என் பொண்ணு தன் பிடிவாதத்தை தளர்த்திக்க வேண்டும். பரத் என் பொண்ணை விரும்பணும். இதை நீதான் நிறைவேத்தணும் தும்பிக்கையானே.'

அந்தத் தாயின் வேண்டுதல் கடவுளின் காதில் விழுந்திருக்க வேண்டும்.

பரத், சுஜிதாவை மனப்பூர்வமாய் விரும்பினான்.

சுஜிதா! சொல்லவே வேண்டாம். பரத்திடம் மயங்கி அல்லும் பகலும் அவனது நினைவிலேயே கிடந்தாள். மன்மத பாணம், அதிவேகத்தில் வேலை செய்ய ஆரம்பித்தது.

இருவரும் காதல் வயப்பட்டு தங்களை மறந்தனர்.



4

தியாகராய நகர் நெரிசலில் காரை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு, ஒட்டலுக்குள் நுழைந்தனர், பரத்தும் சுஜிதாவும்.

உள்ளே இருந்தவர்களின் கண்கள் அவர்கள் மீது ஈக்களாய் மொய்த்தன. அவர்களின் ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்துவிட்டு அசந்தனர்.

சுஜிதா இளம் பச்சை நிற சேலை உடுத்தி இருந்தாள். ஆம்... இப்போதெல்லாம் அவள் உடுத்துவது சேலைதான். அவனுக்கு நாகரீக உடைகள் பிடிக்காது என்று தாய் மூலமாய் அறிந்து கொண்டவள் ஜீன்சுக்கும் பனியனுக்கும் 'டாடா' சொல்லி விட்டாள்.



அவளிடம் மாற்றத்தைக் கண்ட சரோஜா, இன்னும் கொஞ்சம் உப்பு, காரம் சேர்த்து மசாலா கலந்து அதன்மேல் தாளித்தும் கொட்டினாள்.

''ஆமாம்டீ... இந்தக்கால பெண்களோட அதிநாகரீகப் போக்கைப் பற்றி பேசறப்போ முகம் சுளித்துக்கொள்கிறான். அவனுக்கு வரப்போகும் மனைவி எப்படியெல்லாம் இருக்கணும்ன்னு பட்டியல் போட்டு சொல்றான்.

நளினமா நடந்துக்கணும். ஆம்பளைத்தனமா இருக்கக் கூடாது. வீட்டுக்கு விளக்கேற்ற வருபவள் குத்துவிளக்கு சுடர் மாதிரி ஒளி கொடுக்கணும். தெருவிளக்கு மாதிரி தன் அழகை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடாது. இதுதான் பரத்தோட எதிர்பார்ப்பு!''

பழைய சுஜியாக இருந்திருந்தால் 'யாருக்காகவும் நான் என்னை மாத்திக்க முடியாது. நான் நானாகத்தான் இருப்பேன்' என்று தூக்கி எறிந்து பேசியிருப்பாள்.

இப்போது அவள் புது சுஜியாயிற்றே... பரத்தின் மேல் இருந்த கவர்ச்சி அவளை தலையாட்டி பொம்மையாக்கியது.

பரத் மனதைக் கவரவேண்டும் - அவனுக்கு மனைவியாக வேண்டும். அதற்காக அவனது விருப்பப்படியே சேலை கட்டி, கூந்தலை பின்னலிட்டு அடக்க ஒடுக்கமாய் தெரிந்தாள்.

தோற்றத்தை எளிதாக மாற்றிக்கொள்ள முடியும். சுபாவத்தை எப்படி? நடைமுறையில் அது கடினமாகத் தான் தெரிந்தது. நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வையால் பாயும் குதிரை மாதிரித் திரிந்தவள் தலைநிமிராத நடையுடன் அன்னமாகிப் போனாலும்,



இயற்கை சுபாவத்தை மாற்றிக்கொள்வது அத்தனை சுலபமா? ஊகூம்... குரலில் மென்மையையும், பேச்சில் குழைவையும் கொண்டு வர முயற்சித்தாலும் சிலநேரம் அவளையும் மீறி படபடப்பும் அசட்டையும் எட்டிப் பார்த்து விடுகின்றன.

என்ன செய்வது? 'ப்ச்சு... பரத்துக்காக என்னவெல்லாம் செய்யவேண்டி இருக்கிறது?'

சும்மாவா... அழகும் இளமையும் செல்வமும் கூடுதலாய் கவர்ச்சியும் கொண்டவனை விட்டுவிட முடியுமா?

இங்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். சுஜிதாவின் காதலை, ஆழமான காதல் என்று முத்திரை குத்திவிட முடியாதுதான்.

உண்மையான காதல் என்பது இரண்டு இதயங்கள் இணைவதுதான். தூயகாதலின் இலக்கணம் 'நீயன்றி நானில்லை' என்று கலந்துவிடுவதுதான். கடலில் சங்கமிக்கும் ஆறு காணாமல் போவது போல மனங்கள் கலந்துவிட வேண்டும்.

அங்கே அழகு, செல்வம் எல்லாமே இரண்டாம்பட்சம்தான். வெளி இச்சைகளில் மனதை இழந்து, அதை காதல் என்று எண்ணுவது வெறும் மாயை.

சுஜிதாவும் அப்படித்தான்... அவள் பரத்திற்காக ஏங்கவில்லை... அவனிடம் இருக்கும் செல்வமும் அழகும்தான் அவளை ஈர்த்தன. அவளது காதல், நீரில் கரைந்துவிடும் உப்பாக இல்லாமல் நீரில் மிதக்கும் எண்ணெயாக - தாமரை இலை மேல் ஒட்டாது உறவாடும் பனித்துளியாக இருந்தது.

என்ன செய்ய... அதை நிஜம் என்று எண்ணி அவளை மனப்பூர்வமாய் நேசிக்க ஆரம்பித்துவிட்டான், பரத்.

அவளுடன் ஒட்டியவாறு வெளியே சுற்றுவதில் அவனுக்கு பெருமைதான்.

“என்ன சாப்பிடலாம் சுஜி?” என்று கேட்டான்.

“எனக்கு ரவை இட்லி போதும், பரத்.”

அவளுக்கு ரவை இட்லியும் தனக்கு தோசையும் வரவழைத்தான்.

“சென்னைக்கு வந்தால், காலையில் பொங்கல், தோசைதான் சாப்பிடுவேன். தமிழ்நாட்டில் இதெல்லாம் ரொம்ப சுவையாக இருக்கிறது சுஜி... அங்கே எதிலும் காரம்தான்” என்றான்.

அந்த நேரம் பார்த்து இளைஞன் ஒருவன் வந்தான். சிரித்தபடி நெருங்கினான்.

“எஸ்...” என்றான்.

குரல் கேட்டுத் திரும்பிய சுஜி, முகம் வெளுத்துப் போனாள்.

‘இவனா?’

அவன், விக்ரம்!

‘இவன் எங்கே இங்கே? வசமாய் மாட்டிக்கொண்டேனே?’ மனசுக்குள் படபடப்பு.

“என்ன... முன்னே பின்னே அறிமுகமில்லாத ஆளை பார்க்கிற மாதிரி முழிக்கிறே? உன்கிட்டேயிருந்து போன் எதுவும் வரலையேன்னு நினைத்தேன். இப்பத் தெரியுது... என்ன காரணம்ன்னு?”

பொறியில் சிக்கிய எலிகூட இப்படித் தவித்திருக்காது. அதைவிட மோசமாய் உள்ளுக்குள் தவித்தாள்.

ஓரக்கண்ணால் பரத்தை கவனித்தாள். அவன் முகத்தில் கேள்விக்குறி தெரிந்தது.



‘யார் இவன்?’ நினைத்தவனின் புருவங்களில் முடிச்சு விழுந்தது. ‘இவனுக்கும் சுஜிக்கும் என்ன தொடர்பு?’

சுஜிக்கு தோழிகள் மட்டுமல்ல... ஆண் நண்பர்களும் உண்டு. கல்லூரி படிப்பு முடிந்ததும் தொடரும் நட்பு வட்டம்... அது, வெறும் நட்புதான் என்றாலும் அனைவரும் சேர்ந்து லூட்டி அடிப்பதுண்டு.

ஆனால், இதை பரத் ஏற்றுக்கொள்ள வேண்டுமே... பெண்ணின் இலக்கணம் பற்றி பட்டியல் எழுதியவனாயிற்றே.

‘இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்புவது? கடவுளே... இந்த விக்ரமுக்கு கொஞ்சமாவது புத்தி வேண்டாம்... இப்படியா வந்து தொலைப்பது?’

மின்னல் வேகத்தில் யோசனை பளிச்சிட்டது. முகத்தை அப்பாவித்தனமாய் வைத்துக்கொண்டு வியப்புடன் கண்களை விரித்து வினவினாள்.

“சாரி... நீங்கள் யாரென்று தெரியவில்லை... ஒரு வேளை என் சகோதரி சுஜா என்று நினைத்து பேசுகிறீர்களோ என்னவோ? அவள்தான் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறாள். உங்களை சந்தித்ததை அவளிடம் சொல்கிறேன். உங்கள் பெயர்?”

விக்ரம் முகத்தில் இப்போது குழப்பம் வந்து உட்கார்ந்தது. ‘இவள் என்ன சொல்கிறாள்... எதற்கு இப்படி நடிக்கிறாள்?’

இவள் நிச்சயம் சுஜிதான் என்று திட்டவட்டமாகத் தெரிந்தாலும் மேலே எதுவும் பேசாமல் ஒதுங்குவதுதான் நல்லது. அப்புறம் தொலைபேசியில் பேசி, விவரம் கேட்கலாம்.



“சாரி... நான்தான் தப்பாக நினைத்துவிட்டேன். என் பெயர் விக்ரம்... வர்றேன்.”

அவன் சென்றபின்தான் அவளுக்கு மூச்சு வந்தது. பரத் பக்கம் திரும்பி மெல்லியதாய் புன்னகைத்தாள்.

“சுஜாதாவுக்கு தெரிந்தவனா... அவளுக்கு ஆண் நண்பர்களும் உண்டா?”

அவனது முகச்சுளிப்பைக் கண்டு உள்ளம் தெளிந்தாள்.

‘நல்லவேளை... தப்பித்தேன். என் நண்பன் என்று சொல்லியிருந்தால் உதறிவிட்டே போயிருப்பார் போல.’

“நீ நினைக்கிற மாதிரி எனக்கு குறுகிய நோக்கம் கிடையாது, சுஜி. ஆனால், நட்பு என்பதற்கு ஒரு வரையறை வேண்டும். அதுவும் ஆண் நண்பர்கள் என்றால் நிச்சயம் எல்லைத் தாண்டாமல் இருக்க வேண்டும். இப்போதெல்லாம் ஆண் நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு அடிக்கும் கூத்தும் கொட்டமும் சகிக்கவில்லை. சுஜாவும் அப்படி இருக்கக்கூடாது பாரு... என்னால் இதை நம்பமுடியவில்லை சுஜி.”

‘கடவுளே... பிழைத்தேன்’ என்று சுயநலமாய் எண்ணினாளே தவிர, தங்கையைப் பற்றி அவன் மனதில் தப்பான எண்ணத்தை விதைத்துவிட்டோமே என்று வருத்தப்படவில்லை.

அவள் முன் இருந்த ரவை இட்லி அவளை முழித்துப் பார்த்தது. ஏனோ அவளுக்கு அது சுவைக்காமல்போனது. காரணம் - தங்கை மீது மை பூசியதற்காக இல்லை... இன்றைக்கு கை கொடுத்த என் அதிருஷ்டம் எப்போதும் உடன் வருமா என்ற அச்சமே.



ரவை இட்லி மண்ணாய் நாவில் புரண்டு, தக்கையாய் தொண்டையில் இறங்கி, நெஞ்சுக்குள் பாறையாய் தங்கியது.



5

கல்லூரியில் அறிவிப்பு பலகை முன் மாணவ - மாணவிகள் கும்பலாய் நின்றிருந்தனர்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிக்கான அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது.

முதுகலை மாணவர்களுக்கு தனிப் போட்டி.

“நம்மளில் யாருடி கலந்துக்கப்போறீங்க?” ஒரு மாணவி கேட்க -

அனைவரும் ஒரே குரலாய் “சுஜா... சுஜாதான்” என்று, முன்மொழிந்து, வழிமொழிந்தனர்.

“அவ வீட்டுக்குப் போகிற வழியில்தான் நூலகம் இருக்கிறது. அவளே செய்யட்டும். என்ன சுஜா... ஒப்புதலா?” தோழி சுவர்ணா கேட்டாள்.

“முடியாது என்று சொன்னால்விடவா போறீங்க? ஆனா, அங்கே போய் புத்தகங்களை எடுத்து, குறிப்பெழுதிவிட்டு வீடு போய் சேர நேரமாகிவிடுமே?”

“இரண்டு நாளில் முடிச்சுடலாம். பசங்களுக்கு கிடைக்காம எல்லா பரிசுகளையும் நாமளே அள்ளிக்கணும். புரிஞ்சுதா? ஒண்ணு பண்ணு... நம்ம சண்முகம் கிட்ட நூலகம் வரை ‘டிராப்’ கேளு. கொஞ்சம் ‘பிகு’ பண்ணுவான்.’ சமாளி.”

"எல்லாம் சரிதான். இதில் உன் பங்கு என்ன சுவர்ணா?"

"எல்லாத்தையும் பார்வையிட்டு திருத்தம் பண்ணும் பெரி...ய்ய வேலை என்னுடையது ஆச்சே?"

"பிழைச்சுக்குவேடீ நீ" என்றாள், சக மாணவி தன லட்சுமி.

"முதல்ல நான் வீட்டுக்கு வர நேரமாகும்ன்னு தகவல் சொல்லிடுறேன்" சொல்லிவிட்டு தொலைபேசியை நாடிச் சென்றாள், சுஜா.

"அம்மா... நான்தான் பேசுறேன்."

"நான்தான் என்றால்... சுஜாவா... சுஜியா? பெயரைச் சொல்லித் தொலை... பெத்தவ எனக்கே தெரியலை. முழிக்கிறேன்" மறுமுனையில் தாய் சொன்னாள்.

"நான்தான்ம்மா சுஜா... இன்னும் சுஜி வரலையா?"

"அழகு நிலையத்திற்கு போகணும்ன்னு சொன்னா. இன்னும் வரலை. ஆமா, நீ எதுக்கு போன் பண்ணினே?"

"நான் வர்றதுக்கும் கொஞ்சம் தாமதமாகும்ன்னு சொல்லத்தான்..."

"நீயுமா... என்னவோ போங்க.. வெளியே போகிற பொண்ணுங்க வீடு வர்றவரைக்கும் மனசு அடித்துக் கொள்ளுகிறது... அது உங்களுக்கு எங்கே புரிகிறது?"

"ஏம்மா பயப்படணும்... நாங்க என்ன சின்ன குழந்தைகளா?"

"பயமே அதான்டி... வயசுக்கு வந்த பெண்கள் ஆச்சே... வயித்தில் நெருப்பைக் கட்டிக்கொண்டு அல்லவா இருக்க வேண்டியது இருக்கிறது. சரி, சரி. ரொம்பவும் தாமதம் பண்ணவேண்டாம்.... புரியுதா?"



'பாவம் அம்மா... வீண் கவலையில் தவிக்கிறாள். சுஜி ஏன் பொறுப்பில்லாமல் திரிகிறாள்? சே...'

கல்லூரி முடிந்ததும் சுஜா, நேராக சண்முகத்திடம் வந்தாள். நூலகம் வரை தன்னை கொண்டு விடமுடியுமா என்று கேட்டதும் அவன் முகம் கோணியது. கடைசியில் ஒருவழியாக சம்மதித்தான்.

சண்முகம் பெண்கள் என்றாலே மரவட்டையாக சுருண்டு கொள்ளுவான். அவனது ஊர் மதுராந்தகம். சென்னையில் தன் அக்கா வீட்டில் தங்கிப் படிக்கிறான். அவனுடைய அம்மா அவனுக்கு படித்துப் படித்து சொல்லியிருப்பது இதுதான்.

'பெண்களின் சகவாசம் வேண்டாம். அவர்களிடம் இருந்து ஒதுங்கியே இரு. நல்ல பிள்ளையாகப் படித்து பேர் வாங்கித் தரணும். உன் மாமா தன் வீட்டில் உன்னைத் தங்கச்சொன்னதே பெரிசு. எதையாவது ஏடாகூடமாய் செய்து பெயரைக் கெடுத்துக்காதே. அப்படி ஏதாச்சும் செய்தே நான் உசிரோடு இருக்கமாட்டேன், ஆமா.'

அந்தத் தாய் சொல்லைத் தட்டாமல் நல்ல சமர்த்துப் பிள்ளையாய் கல்லூரிக்கு போய் வந்து கொண்டிருந்தான், அவன்.

எண்ணெய் பூசி படியவைத்த கேசம்... நெற்றியில் விபூதிப் பூச்சு... எளிமையான உடை.... போதாதா? அவனை சீண்டி விளையாடுவதே மாணவிகளின் பொழுதுபோக்கு. இன்றைக்கு தப்பிக்க வழி தெரியாமல் சுஜாவை நூலகம் வரை கொண்டுவிட ஒப்புக்கொண்டு வாகனத்தில் ஒன்றாக சவாரி செய்யும்போது அவன் தேகம் பயத்தில் இறுகிக் கிடப்பதை அவளால் உணரமுடிந்தது.



அவ்வப்போது விழிகளால் சுற்றிப் பார்த்து 'நல்ல வேளை... தெரிந்தவர்கள் கண்ணில் படவில்லை' என்று அவன் உறுதி செய்துகொள்ளுவதைக் கண்டு அவளுக்குள் சிரிப்பு வந்தது.

'சரியான தொடை நடுங்கி... இப்படியா பயந்து சாவான்?'

"ஏன் சண்முகம்.... ரொம்ப 'டென்ஷனா' இருக்கீங்க? ரிலாக்ஸ், பிளீஸ்" என்றாள்.

"இல்லே... நான் யாரையும்... எந்தப் பெண்ணையும் இப்படி உட்காரவச்சு அழைச்சு வந்ததில்லை. அதான்..."

"நாம ஒண்ணும் தப்புப் பண்ணலையே, சண்முகம்? இது ஒரு சின்ன உதவிதான். எதுக்குப் பயப்படணும்?"

அவன் வண்டியை ஓரமாய் நிறுத்தப்போனான். வண்டி ஆட்டம் காண, அதை சமாளிக்க அவள் சண்முகத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அவளது பிடியில் இருந்த சண்முகம் புழுவாய் நெளிந்தான்.

'அய்யோ... யாராவது பார்த்துவிட்டால்?'

உண்மையில் அதை இரண்டு கண்கள் பார்த்து விட்டன என்பதை அவர்கள் இருவருமே அறியவில்லை.



## 6

"நன்றி சண்முகம்" துப்பட்டாவை சரிபண்ணியவாறு சொன்னாள், சுஜா.

அவனோ 'விட்டால் போதும்' என்று ஓடுவது கண்டு சிரிப்பு வந்தது.

'இந்த தொட்டாற்சிணுங்கியின் செயலை தோழிகளிடம் சொல்ல வேண்டும்... விழுந்து சிரிப்பார்கள்.'



'எப்படியோ வாகன வசதி கிடைத்து, சீக்கிரமே வந்தாயிற்று. வாழ்க சண்முகம்.'

குறிப்பெடுத்து எழுதுவதில் ஒரு மணி நேரம் கழிந்தது. மீதி, நாளைக்கு என்று எண்ணிக்கொண்டவள் குறிப்பு தாள்களை தோள்பையில் திணித்துக்கொண்டு வெளியே வந்தாள்.

வாகன நெரிசலும், புகை நெடியும் முகத்தை சுளிக்க வைத்தன.

வருவதற்கு என்னவோ சண்முகம் கிடைத்தான். அதே மாதிரி இப்போது யாராவது வந்து உதவினால்? பெரு மூச்சுவிட்ட அதே நேரம்... 'சர்' என்று ஒரு கார் வந்து நின்றது.

"ஏறிக்கொள்" என்ற குரல் கேட்டு மனம் குதித்தது. "அட... பரத்! நான் இங்கே இருக்கேன்னு எப்படி தெரிஞ்சது?"

"சொல்றேன்.... வந்து உட்காரு."

அவனது அருகாமையில் அமர்ந்தவள் கேட்டாள் - "ம்... சொல்லுங்க. ஜோசியமா? இல்லே ஞான திருஷ்டியா... எப்படி?"

"இங்கே ஒருவரை சந்திக்கவேண்டியிருந்தது. நீ யாருடனோ வந்து இறங்கியதைப் பார்த்தேன்."

"அப்போ... ஒரு மணி நேரமா காத்திருந்தீர்கள்?" தலைக்காவிரி வெள்ளமாய் உற்சாகம் பெருக்கெடுத்தது அவளுக்கு.

"நான் பார்க்கவேண்டியவரிடம் இப்பத்தான் பேசி விட்டு வந்தேன். நீயும் வந்தாய்..."



7

தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள், சுஜா. வீட்டில் வந்து விட்ட கல்யாண பதற்றம் அவளை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

நிச்சயதார்த்தம் என்பது பாதிக் கல்யாணம் மாதிரி. அதற்காக வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு வர்ணம் பூசி, எல்லா பக்கத்திலும் புது திரைச்சீலை மாற்றி, அலங்கரித்து, தோரணங்கள் கட்டி... மொத்தத்தில் ஒரு குட்டி இந்திரலோகம் அங்கு உருவாகியது!

பரத்தின் பெற்றோர், நிச்சயதார்த்தத்திற்கு முதல்நாள் வருவதாய் ஏற்பாடு.

மாப்பிள்ளை என்ற உறவு வந்துவிட்டபடியால், சரோஜாவும் வேணுகோபாலும் வாய் நிறைய மாப்பிள்ளை என்று ஆசையுடன் அழைக்க ஆரம்பித்துவிட்டனர். அவனும் அவர்கள் இருவரையும் அத்தை, மாமா என்று முறையாகக் கூப்பிட்டான்.

நிச்சயதார்த்தத்திற்காக துணிமணிகள், நகைகள் எல்லாம் வாங்கவேண்டியிருந்ததால் அடிக்கடி வெளியே போகவேண்டி இருந்தது.

தேர்வைக் காரணம் சொல்லி சுஜா ஒதுங்கிக்கொண்டாள். பெண் மனம் பூ மாதிரி. அவள் என்னதான் சலனமில்லை என்றிருந்தாலும் மனதின் இடுக்கில் கொஞ்சம் ஏக்கம் ஒட்டிக்கொண்டிருந்தது. அந்த ஏக்கம்தான் ஒதுங்கி நிற்கச் செய்தது.

பெரிய மகளின் திருமண ஏற்பாட்டு வேலைகள் மத்தியில் தன் சின்ன மகளின் ஒதுக்கத்தை கவனிக்க



வில்லை, சரோஜா. அப்படியே கவனித்திருந்தாலும் தேர்வு கெடுபிடிதான் காரணம் என்று நினைத்திருப்பாள்.

இதுதான் அந்த வீட்டின் முதல் வைபவம். நல்லபடியாக திருமணம் நடக்க வேண்டும் என்ற தவிப்பு பெற்றவர்களுக்கு. அந்தத் தவிப்பில் இளைய மகளின் கலகலப்பின்மையை எங்கே கவனிக்க முடிந்தது?

இப்போதெல்லாம் சுஜா, வீட்டுக்கு தாமதமாக வந்தாள். மனதை அலைக்கழிக்கவிடாமல் இருக்க கொஞ்சம் தள்ளியே இருக்கலாமே என்ற எண்ணம்தான். மனம், பழையக் குருடி கதவைத் திறடி என்று மீண்டும் சலனப்படக்கூடாதே என்ற பயம்.

அந்த வீட்டு மாப்பிள்ளை என்ற உரிமையில் வீடு முழுக்க வளையவரும் பரத்தின் கண்களில் படாமல் இருந்துவிடலாம் என்ற நினைப்புதான்.

அன்றைக்கு பரத் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தான். அவனுடன் சுஜிதாவும் இருந்தாள். இருவரும் சின்னத்திரையில் வந்த காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

“எல்லாமே சுத்த ‘போர்’. திருப்பி திருப்பி ஒரே மாதிரி கதை. உப்புசப்பில்லாத வசனம். சலித்துவிடுகிறது பரத். இதை தொலைக்காட்சின்னு சொல்றது தப்பு. தொல்லைக் காட்சின்னு சொன்னா பொருந்தும்” சலிப்புடன் சொன்னாள், சுஜிதா.

அதைக் கேட்டுவிட்டு சிரித்தான், பரத்.

“இப்படி சொல்லும் பெண்கள்தான் தொல்லைக்காட்சியே கதின்னு கிடக்கிறார்கள்!”



தமிழ்நாட்டுக்கு வந்த காவிரியாய் அப்படியே உற்சாகம் வறண்டு போனது. “எனக்காக வரவில்லையா? சே!”

“ஆமாம். உன்னுடன் வந்தது யார்... நண்பனா?”

அவனது கேள்வியில் வியப்படைந்தாள்.

‘ஏன் கேட்கிறான்?’

“சொல்லும் அளவுக்கு நட்பு இல்லை. உடன்படிக்கிற மாணவன். அவ்வளவுதான்.”

“அத்தனை நெருக்கமாய் வந்தாயே, அதான் கேட்டேன்?”

“என்ன செய்ய.... காரில் இருப்பது போல அந்த வாகனத்தில் தடுப்பு இல்லையே... இருந்திருந்தால் அதைப் பிடித்துக் கொண்டிருப்பேன்” எரிச்சலுடன் பதில் வந்தது.

‘என்ன இவன்? சி.பி.ஐ. போல விசாரிக்க இவன் யார்?’ என்ற கோபம் அவளுள் மூண்டது.

அதை உணர்ந்தானோ என்னவோ... மேலே எதுவும் கேட்காமல் காரைச் சீராக ஓட்டினான்.

உதட்டை கடித்துக்கொண்டாள், சுஜா.

‘அக்கா சுஜிதாவிடம் இதமாய் - அன்பாய் பழகும் இவன் ஏன் என்னிடம் இறுக்கத்துடன் இருக்கிறான்?’

‘அவள் தன் எதிர்கால மனைவி என்ற உரிமையாலா? நினைக்கும்போதே நெஞ்சு அடைத்தது.

சகோதரியின் நாளைய கணவன். ஆக, எட்டமுடியாத உயரத்தில், அவன். அருகில் நெருங்க முடியாத இடைவெளிக்கு சென்றுவிடப்போகிறான். அப்புறம் அவனை நினைப்பது மகாதப்பு.



கண்கள் கசிய... முகத்தைத் திருப்பிக்கொண்டு வெளியே பார்த்தாள்.

‘பத்து நிமிடத்தில் முந்திக்கொண்ட அக்காள் அதிருஷ்டக்காரி ஆகிவிட்டாள். பரத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டாள்.’

அடுத்த கணமே தன் மனதைக் குட்டி அடக்கினாள். ‘வேண்டாம், மனமே. குரங்காட்டம் போடாதே... யாருக்கு யாரோ? எந்தத் தோளுக்கு எந்த மாலையோ?’

எனக்கு பரத் இல்லை என்றான பின்பு அவனை நினைத்து ஏங்குவது தவறுதான்.

அக்காவின் மகிழ்ச்சியைப் பார்த்து மனநிறைவு அடைய வேண்டுமே தவிர நான் பெருமூச்சு விடுவது அழகல்ல.

பரத்துடன் இணைந்து சுஜிதா செல்வதை எந்தவித சலனமும் இன்றி பார்க்கத் தொடங்கினாள்.

கூடியவரையில் வீட்டில் இருப்பதை தவிர்க்கப் பார்த்தாள். மறுபடியும் வேதாள மனம், முருங்கை மரம் ஏறக்கூடாதே என்ற பயம்!

படிப்பில் முழுமூச்சுடன் இறங்கினாள். பரத்தால் என் படிப்பு கெட்டு, எதிர்காலம் பாதிக்கக்கூடாது... தீர்மானத்துடன் செயல்பட்டாள்.

இப்போது இருவரும் சிரித்துப் பேசுவதை - ஊர் சுற்றுவதை - இணைந்துப் பழகுவதை வேதனையின்றி - மனதில் சுமையின்றி அவளால் பார்க்க முடிந்தது.

ஒரு நல்ல முகூர்த்தம் பார்த்து நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறிக்கப்பட்டது.

''ப்ச்சு... நான் அப்படியில்லை... எனக்கு இந்த அழுகிற காட்சிகளையும் அழுமூஞ்சிகளையும் பார்த்தாலே பிடிக்காது. நல்ல நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கணும். மகிழ்ச்சி அடையணும்.''

''உலகத்தில் நடக்கிற துன்பங்களைப் பற்றி, துக்க நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டாமா?''

''எதுக்கு? நாம் வாழ்வதே சந்தோஷத்துக்குத்தானே, பரத். மனசை எப்போதும் மகிழ்ச்சியாய் வச்சுக்கணும். அதுதான் என் நோக்கம். அதனால இந்தக் கண்ணீர், சோகம், வேதனை... இதெல்லாம் எனக்கு சுத்தமா பிடிக்காது. நான் ஜாலி ரகம், பரத். சுஜா மாதிரி இல்லை. அவள்தான் உணர்ச்சிவசப்படுவாள். ஏதாவது சோகக் காட்சி வந்தால் போதும்.. ஏதோ தனக்கே நடந்துவிட்ட மாதிரி கண்ணீர் விடுவாள். எனக்கு சிரிப்பு வரும். எதுக் குடி இப்படி கண்ணீரை வீணாக்குகிறே'ன்னு கேட்பேன்.''

''நீங்க இரண்டு பேரும் இரட்டையர் என்றால் நம்பவே முடியவில்லை, சுஜி. இரண்டு பேருக்கும் ரொம்ப வித்தியாசம். வெறும் உருவ ஒற்றுமை மட்டும் தான் இருக்கு.''

''உண்மைதான் பரத். குணத்தில் நேர்மாறாய் வட துருவம், தென்துருவம் போலத்தான், நாங்க.''

''சுஜி... உன் பெயருக்கு தபால் வந்திருக்கு'' அப்பா வேணுகோபால் வந்து தந்தார்.

அதை வாங்கிப் பிரித்துப் படித்தவளுக்கு வியப்பு! விமான பணிப்பெண் வேலை! பயிற்சிக்கான அழைப்பு! அவளின் பல நாள் கனவு, இலட்சியம்! இதோ... கையில்.. கடித வடிவில்!



ஆனால், ஏனோ இப்போது கசந்துபோனது. 'லாட்டரி' அடித்தது போல 'பரத்' கிடைத்துவிட்ட பிறகு, இந்த சுண்டைக்காய் வேலை எதுக்காம்? தேவையில்லையே?

அவளது ஆசை, பெரிய கோடீஸ்வரனை மணந்து சீமாட்டியாய் வாழ வேண்டும்! வலம் வரவேண்டும்!! அது நடக்கப்போகிறது.

அழகில் மயங்கி, தன்னையே சுற்றிவரும் ஆணழகனை அடைய வேண்டும்.

''என்ன சுஜி... கடிதத்தைப் படித்துக்கொண்டே இருக்கே? அப்படி என்ன புரியாத விஷயம் அதில் இருக் கிறது?'' பரத் கேட்க...

''ஊகூம்... விமானப் பணிப்பெண் வேலைக்கு அழைப்பு வந்திருக்கிறது'' என்றாள், அவள்.

''உனக்கா... நீ விண்ணப்பித்தாயா என்ன?'' வியப் புடன் கேட்டான், அவன்.

நாக்கைக் கடித்துக்கொண்டாள், சுஜிதா.

'தவளை தன் வாயால் கெட்ட மாதிரி, மாட்டிக் கொண்டாயே... அனாவசியமாய் ஊர்சுற்றும் பெண் களை எரிச்சலுடன் பார்ப்பவன் இதை சாதாரணமாய் எடுத்துக் கொள்வானா? ஆகாயத்தில் பறக்கும் வேலை என்றால் தப்பாக நினைப்பானே...'

'சமாளி... எதையாவது சொல்லிச் சமாளி... தப்பிக்க வழி பாரு' அறிவு எச்சரிக்க...

எப்படி...எப்படி சமாளிப்பேன்? விழித்தாள்.

ஆ! அதான் இருக்கிறாளே... அருமை சகோதரி... அப்படியே தட்டை திருப்பிப் போடவேண்டியதுதான். 'ஓர் எழுத்து வித்தியாசத்தில் பெயர் இருப்பதும்கூட



அனுகூலம்தான்' நினைத்தவள் கடிதத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

''ஆங்! அதானே பார்த்தேன்... நான் விண்ணப்பிக்க வில்லையே... எனக்கு ஏன் வந்தது என்று யோசித்தேன். சுஜா போட்டிருப்பாள் போல. எப்பவும் இந்தப் பெயர் குழப்பம்தான் பரத். எனக்கு வந்திருக்கிறது என்று அப்பா தவறுதலாய் நினைத்துவிட்டார், பாவம்.''

பரத் முகத்தில் தெரிந்த இறுக்கம் மறைந்தது.

'அம்மாடி! தப்பித்தாயிற்று' நிம்மதியுடன் மூச்சுவிட் டாள். யாரும் பார்க்காத நேரத்தில் அந்தக் கடிதத்தை வீசியெறிந்தாள். அது, மருமகளின் கொட்டத்தைப் பார்த்து ஒடுங்கி ஒதுங்கிப் போன மாமியார் போல மூலையில் போய் விழுந்தது.

சுஜாவுக்கு பாடத்தில் சந்தேகம். யாரிடம் கேட்பது என்று யோசித்தாள்.

தேர்வுக்கு படிக்க விடுமுறை கொடுத்திருக்கிறார்கள். விரிவுரையாளரை சந்திக்கவும் முடியாது. தோழிகள் அவளைவிட சுமாராய் படிப்பவர்கள். சந்தேகத்தை அவளிடம்தான் கேட்டுத் தெளிவார்கள். அவளைவிட் டால் தெளிவாகக் கூறி விளக்கக்கூடியத் திறமை அந்த வகுப்பில் சந்திரனுக்கு மட்டும்தான் இருக்குது.

அவனது வீட்டுக்குப் போகலாம் என்றால் விலாசம் தெரியாது. தோழி சுவர்ணாவிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டாள். புறப்பட்டாள்.

பரத் முகத்தை சுளித்தான்.

இன்றைக்கு கல்லூரியில் என்ன வேலை? கல்லூரிதான் விடுமுறை கொடுத்திருக்கிறதே... ஒருவேளை யாரை



யாவது சந்திக்க ஏற்பாடா? அவிழ்த்துவிட்ட கழுதை மாதிரி ஊர்சுத்துகிற இவளை அத்தையிடம் சொல்லி அடக்கி வைக்க வேண்டும். இந்த வீட்டு மாப்பிள்ளைன்னு ஆனபிறகு எனக்கும் பொறுப்பு இருக்கிறது' மனதுக்குள் நினைத்தான்.

''என்ன சுஜா... எங்கேயோ புறப்படுகிற மாதிரி தெரிகிறது?''

''கல்லூரிக்கு... இன்னிக்கு வரச்சொல்லி இருக்கிறார்கள். போயே ஆகணும்.''

பொய்... யாரோ ஒருவனை சந்திக்க இந்தப் பச்சைப் பொய்.

''காரில் அழைத்துப்போய் விடட்டுமா?'' வேண்டும் என்றே கேட்டான், அவன்.

''வேண்டாம்... உங்களுக்கு எதுக்கு வீண்சிரமம். நானே போய்க்கிறேன்.''

அவனுடன் சேர்ந்து காரில் செல்ல மனம் தயங்கியது.

பரத் வேறுவிதமாய் நினைத்துக்கொண்டான். 'எவனையோ சந்திக்கப் போகிறாள். அது தெரியக்கூடாது என்று என்னைத் தவிர்க்கிறாள்... ச்சே! சுஜிக்கு இப்படி யொரு சகோதரியா? இப்படியேவிட்டால் விபரீதமாகி விடும். வேணு மாமாவும் அத்தையும் நல்லவர்கள். அவர் கள் மனம் நோகும்படி எதுவும் நடந்துவிடக்கூடாது.

பாவம் மாமா... வேலை பளுவின் மத்தியில் நிச்சய தார்த்த வேலைகள் வேறு... அந்த மும்முரத்தில் சுஜாவை எங்கே கவனிக்க முடியும்? அதுவும் இளைய மகள் மீது நிறைய நம்பிக்கை வேறு. அவள் தவறு செய்ய மாட்டாள் என்ற அசாத்திய ஆருடம். அந்த நம்பிக்கை பொய்யாகிப்

போனால் அதைத் தாங்கிக் கொள்வார்களா? ஏன் அத்தையும்தான்.

இப்போது நானும் இங்கு ஒரு உறவினன் ஆகிவிட்ட படியால் எனக்கும் கடமையும் பொறுப்பும் இருக்கிறது. ஏன், உரிமைகூட இருக்கிறது. அவளது தவறைச் சுட்டிக் காட்டி திருத்தும் உரிமை எனக்கு இருக்கிறது. இனி அவளை நல்வழிப்படுத்துவதுதான் என் வேலை' அந்தத் தீர்மானத்தில் அவன் உறுதியானான்.

நீலநிற சுடிதாரில் தேவதை போல அவள் புறப்பட்டுச் சென்றாள். ஒரு மணி நேரத்தில், அவனும் புறப்பட்டு விட்டான். அவளது கல்லூரியை நோக்கி.



8

"என்ன... இப்போ தெளிவா புரிஞ்சுதா?" சுஜாதாவின் சந்தேகத்தை தெளிவாக்கிய சந்திரன் கேட்டான். அவளும் தலையசைத்தாள்.

எவ்வளவு எளிதாய் விளக்கி விட்டான்! புரியாத முடிச்சை எத்தனை சீக்கிரமாய் அவிழ்த்து விட்டான்.

"நன்றி."

"நன்றி எதுக்கு சுஜா? ஒருவருக்கொருவர் உதவுறது கடமையில்லையா?"

"ம்... நாம புறப்படலாமா?"

எல்லோரும் போயாச்சு.

இருவரும் வெளியே வந்தனர்.

"ஏதாவது குளிர்ச்சியா குடிக்கலாமா, சுஜா?"



"நான்தான் வாங்குவேன். சம்மதமா?"

"அப்போ... எனக்கு வேணாம். கேட்டது நான். நான்தான் வாங்கித் தருவேன்."

"இல்லே சந்திரன்... இது, விருந்துன்னு வச்சுக்கோ."

"எதுக்கு?"

"என் சகோதரியோட திருமணம் நிச்சயமாகி இருக்கு. அதுக்கு."

"அப்படியா... என் அண்ணனுக்கு பதவி உயர்வு கிடைச்சிருக்கு. அதுக்கு நான் தர்றதா வச்சுக்கோ."

"போச்சுடா... சரி, பாதி பாதி... சரியா?"

"அதெல்லாம் வேண்டாம்" என்றவன் இரண்டு குளிர்பானம் வாங்கி வந்தான்.

"ம்... இதுக்குப் பெயர்தான் ஆண் ஆதிக்கம் என் பார்கள்" என்றாள், மனத்தாங்கலாய்.

"ஓகோ... நீ அப்படி நினைக்கிறாயாக்கும்... அடுத்தத் தடவை பார்... நீ எது வாங்கித் தந்தாலும் வாயை மூடிக் கொண்டு ஏற்றுக்கொள்கிறேன். போதுமா? இப்போ இதை வாங்கிக்கோ. ப்ளீஸ்..."

இருவரும் குளிர்பானம் அருந்திக்கொண்டே நடந் தனர். அவர்களின் அருகே கார் வந்து நிற்க... நின்றனர்.

காரிலிருந்து எட்டிப் பார்த்தான், பரத். "என்ன சுஜா... போகலாமா?"

"நீங்க எப்படி... மறுபடியும் இங்கே?" வியப்புடன் கேட்டாள், சுஜா.

"சொல்கிறேன்... வந்து காரில் ஏறு."

"ஆங்... சந்திரன்... இவர்தான், என் அக்காவின் எதிர் கால கணவர். பெயர் பரத். இவர் சந்திரன்... என்னோடு படிக்கிறார்."



"உங்களை சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி, சந்திரன். சுஜா... வா போகலாம். சீக்கிரம் காரில் ஏறு... நேரமாகிறது."

சுஜாவிற்கு உள்ளூர எரிச்சல்... 'இவர் என்ன சட் டாம்பிள்ளையா? அதிகாரம் செய்வதற்கு?'

"அப்புறம் சந்திப்போம் சந்திரன். வரட்டுமா?" என்று சொல்லிவிட்டு காரில் அமர்ந்தாள்.

'உம்'மென்று அமர்ந்திருந்தவளை கவனித்தான், பரத்.

"கோபமா சுஜா?"

பட்டென்று திரும்பினாள்.

"ஏன்... ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்லை... எதுவும் பேசாமல் இருக்கிறாயே... அதான் கேட்டேன்."

"பின்னே? திடீர்ன்னு வந்து என்னைக் கூட்டிச் சென் றால் எப்படியாம்? பாவம், அந்தச் சந்திரன். முகமே மாறிப்போச்சு. ஏதோ நாங்க தப்பு பண்ணியது போல இருக்கு, உங்க நடவடிக்கை."

காரை ஓரமாய் நிறுத்திவிட்டு, அவள் பக்கமாய்ப் பார்த்தான்.

"சுஜா... உன் மீது எனக்கு அக்கறை இருக்கக்கூடாது என்று நினைக்கிறாயா? நானும் உன்னைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்துடலாம்தான். ஆனால், மனசு கேட்கவில்லையே. உங்க வீட்டில் ஒருத்தனாயிட்டேன். அந்த அக்கறையில் சொல்கிறேன், சுஜா. நீ தவறான பாதையில் போய் விடக்கூடாது பாரு."

புரியாமல் பார்த்தாள், அவள்.

"என்ன பார்க்கிறே சுஜா? நீ வயசுப் பசங்களோடு பழகுவதை நான் தப்பா நினைக்கவில்லை. பழகும்



விதத்தைத்தான் சொல்கிறேன். அன்றைக்கு விக்ரம்ன்னு யாரோ ஒருவன் உன்னைப் பற்றி சுஜிகிட்டே விசாரித் தான். அப்புறம் யாரோ ஒரு பையனோடு வண்டியில் நீ ஒட்டிக் கொண்டு வந்ததை நானே பார்த்தேன்.

இன்னிக்கு இந்தச் சந்திரன். எனக்குத் தெரியும், என் மச்சினி நல்லவள்ன்னு. ஆனால், மத்தவங்களுக்கு அது தெரியுமா? ம்... அதுதான் சொல்கிறேன், பார்த்து நடந்து கொள். உன் அக்கா சுஜியைப் பார்த்து கற்றுக்கொள், எப்படி இருக்க வேண்டும் என்று!"

சுஜாவின் மனதில் 'சுருக்' என்று வலித்தது. யார் யாரிடம் கற்றுக்கொள்வது? அதுவும் சுஜியைப் பார்த்து?

அதீத நாகரீக உடையில் ஊர்வலம் வந்த சுஜி, பரத் வருகைக்குப் பின், அவனைப் பார்த்த மயக்கத்தில் தன்னை மாற்றிக் கொண்டாளே... அவளையா? சுஜியைப் பற்றி இவனுக்குத் தெரியுமா? அவளுக்கு ஆண் நண்பர் கள் உண்டு. அவர்களுடன் சேர்ந்து நட்பு என்ற பெயரில் கொட்டமடிப்பாள் என்று சொன்னால் நம்புவானா? ஊகூம்!

பாவம் பரத்! சுஜியைப் பற்றி இன்னும் முழுவதுமாய் அறியவில்லை. காலை சுற்றும் சாதுவான பூனை என்று அவன் நினைக்கிறான். அந்தப் பஞ்சு போன்ற பாதங் களுக்குள் கூர்மையான நகங்கள் மறைந்திருக்கின்றன என்பதை எப்படி அறிவான்?

'மியாவ்' என்று அழகாய், செல்லமாய் சிணுங்கும் பூனை, 'உர்' என்று கர்ஜிக்கும் புலியினம் என்பதை உணரவில்லையே?

வேண்டாம்... அவன் அதைத் தெரிந்து கொள்ளவும் வேண்டாம். என்ன இருந்தாலும் சுஜி என் உடன் பிறந்த சகோதரி. அவள் பரத்துடன் மனநிறைவாக வாழட்டும்.

என்னைப் பற்றி பரத் என்ன வேண்டுமானாலும் தரக் குறைவாக நினைத்துக் கொள்ளட்டும். வாயை மூடிக்கொண்டு இருந்து விடலாம்.

அதுசரி... சண்முகம், சந்திரன் உண்மைதான். இந்த விக்ரம் யார்? என்னை விசாரித்தானாமே!

''பார்த்தாயா? நான் சொன்னது சரிதான்னு இப்போ புரிந்து கொண்டு விட்டாய். அப்படித்தானே? இதோ பாரு, சுஜா. உன் படிப்புக்கும், அறிவுக்கும் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். இந்த விமானப் பணிப் பெண் வேலை வேண்டாமே?''

அவளுக்கு மேலும் குழப்பம் ஏறியது.

''என்னது... விமானப் பணிப்பெண் வேலையா?''


''அட... சுஜி சொல்லவில்லையா? உனக்கு அந்த வேலைக்கான அழைப்பு வந்திருக்கிறது, எதுக்கு அந்த வேலை? வேறு வேலையில் சேர்ந்துகொள் சுஜா.''

'ஓ! இப்போ புரிகிறது... தனக்கு வந்த கடிதத்தை எனக்கு வந்தது என்று மாற்றிச் சொல்லி இருக்கிறாள், சுஜி. அதை நம்பிவிட்ட பரத் ஏதேதோ பேசுகிறார். அந்த விக்ரம் விஷயமும் அப்படித்தான் போலிருக்கிறது. தன் மீது பரத்திற்கு தவறான எண்ணம் வந்துவிடக் கூடாது என்று என் மீது பழி போட்டு விட்டாள் போலும்! உடன் பிறந்த பாவத்துக்கு அத்தனையையும் சுமக்க வேண்டியதுதான். எல்லாம் சுஜியின் நல்வாழ்வுக்காக.

''இப்போ என் மீது உனக்குக் கோபம் இல்லையே?'' என்றவன் புன்னகையுடன் காரைக் கிளப்பினான்.



ஆனால், அவளால் சிரிக்க முடியவில்லை. இயல்புக்கும் வர முடியவில்லை. சுயநலத்திற்காக குட்டையைக் குழப்ப நினைக்கும் சுஜிதாவை நினைக்கும்போது, வேதனையில் நெஞ்சு கனத்தது. மனம் குமைந்த சுஜாவிற்கு தலை 'விண்' என்று வலித்தது.



9

சூரியகாந்தி பூத்தது போல மஞ்சள் நிற சேலையில் வந்து நின்ற மகளைப் பார்த்து கண்களை விரித்தாள், சரோஜா.

"என்னடீ... வெளியே போகிறாயா? மாப்பிள்ளையுடனா? முன்னாலேயே சொல்லி இருந்தால் சீக்கிரம் சமையல் பண்ணி வைத்திருப்பேன் இல்லையா?

என்னவோ போ... பொறுப்பே இல்லாம இருக்கே. ஆமாம்... மாப்பிள்ளை தயாராகி விட்டாரா?''

''அய்யோ அம்மா, எதுக்கு இப்போ படபடக்கிறே? நான் மட்டும்தான் புறப்படுகிறேன். முதலில் சொல்ல மறந்தது என் தப்புதான் விடு. நிச்சயதார்த்தத்திற்கு என் தோழிகளை அழைக்கணும். அப்படியே கொஞ்சம் பொருட்கள் வாங்கணும். வரத் தாமதமாகலாம். அதுக்கும் பதறிப் போயிடாதே.''

''அப்போ... மாப்பிள்ளை?''

''உன் மாப்பிள்ளைக்கு ஏதோ முக்கிய வேலை இருக்காம். நிதானமா சமைத்து அவருக்குப் போடு. நான் வர்றேன்.''



புறப்பட்டுச் சென்ற மகளைப் பார்த்துக் கொண்டிருந்த சரோஜாவின் உள்ளம் பூரித்துப் போனது. எப்படி இருந்தவள், எப்படி மாறிவிட்டாள்! தான்தோன்றித்தனமாய் திரிந்தவள் இப்படி அடக்க ஒடுக்கமாய் ஆகி விட்டது வியப்புதான். அதுவும் அந்த ஜீன்ஸ் கர்மத்தை மறந்ததுதான் அதிசயம்!

'இதுதான் கல்யாண மாயமோ? அதனால்தான் இதை 'கால்கட்டு' என்கிறார்கள் போல... திமிறிக் கொண்டிருக்கும் குதிரைக்கு கடிவாளம் போட்டது போல அவளை அடக்கி விட்டதே!' பெத்த மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

'எந்த நேரத்தில் பரத் இந்த வீட்டில் கால் வைத்தானோ அப்போதே நல்ல நேரம் வந்து விட்டது. நிச்சயதார்த்தமும் நல்லபடியாய் முடிந்து, சீக்கிரமே கல்யாணத்தையும் நடத்தி விட்டால் பாதி பொறுப்பு தீர்ந்த மாதிரிதான். அப்புறம் சுஜாவுக்கும் வரன் பார்த்து முடித்து விட்டால் முழுப் பொறுப்பும் கழிந்தது' பெருமூச்சு விட்டாள், சரோஜா.

இன்னும் மூன்று நாளில் நிச்சயதார்த்தம். அதற்கே வீடு இத்தனை அமர்க்களப்படுகிறது. திருமணத்துக்கு எப்படித்தான் சமாளிக்கப் போகிறோமோ என்ற பயம் அடி மனதில் எழுந்தது.

''என்ன அத்தை... கையில் கரண்டியோடு சிலை மாதிரி நின்று கொண்டு இருக்கிறீர்கள்?'' பரத் அருகில் வந்து கேட்டதும் நினைவுக்கு வந்த சரோஜா சங்கோஜத்துடன் பார்த்தாள்.

''வாங்க மாப்பிள்ளை... இப்பத்தான் யாரோ தோழியைப் பார்க்க சுஜி கிளம்பிப் போனாள். உங்ககிட்ட சொல்லலையா?''



''உம்... சொன்னாள். எனக்கு ஒரு அவசர வேலை இருக்கு, அத்தை. இன்னிக்கு மதியம் எனக்காகச் சாப்பாடு எதுவும் செய்ய வேண்டாம். வெளியில் பார்த்துக்கிறேன்.''

''நீங்களுமா? போச்சுடா... அப்ப நான் யாருக்கு சமைக்கணும்னு தெரியலையே?''

''ஏன்... நான் இருக்கிறது உன் கண்ணில் படவில்லையா சரோ? உன் சமையலை பயப்படாம சாப்பிடுற ஒரே ஜீவன் நான் ஆச்சே. இருபத்தஞ்சு ஆண்டு அனுபவம்ன்னு சாதனை பண்ணி இருக்கேன் மாப்பிள்ளை... இப்ப எப்படி? என்ன மாப்பிள்ளை... சாப்பிடலாமா?''

''ஏதோ நீங்க கொடுக்கும் தைரியத்தில் சாப்பிடலாம்ன்னு தோணுது.''

சரோஜா, ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

''அய்யோ அத்தை... முறைக்க வேண்டாம். தமாசுக்கு சொன்னேன்.''

''ஊகூம்... உங்க அத்தை முறைக்கவில்லை... அவ முழியே அப்படித்தான். சரோ... நீ செய்த இனிப்பு சுவையோ சுவை.''

இருவரின் பரிகாசத்தை போலி கோபத்துடன் ஏற்றுக் கொண்ட சரோஜாவுக்கு உள்ளுக்குள் குதூகலம் கொப்பளித்தது.

வீட்டுக்கு வரும் மருமகள் மட்டுமல்ல.. மருமகனும் நல்லவனாக - அனுசரணையாக இருக்க வேண்டும் என்று பெற்றவர்கள் எதிர்பார்ப்பது சகஜம். எப்படி வருவார்களோ என்று அடி மனதில் பயம் பிராண்டிக் கொண்டிருக்கும்.

சரோஜாவுக்கும் இருந்தது. இப்போது அந்தப் பயம் போயே போச்சு! ஒரு நல்ல மாப்பிள்ளை தங்களுக்குக் கிடைத்ததை எண்ணி ஆனந்தப்பட்டாள். தினமும் தெய்வத்துக்கு நன்றி சொன்னாள்.

மருமகன் என்பவன் வெறும் மாப்பிள்ளை மட்டுமா... இன்னொரு மகன் அல்லவா? அதை உண்மை என்று நிரூபனம் செய்தான், பரத்.

'இந்த மாதிரி மருமகன் கிடைக்க நாங்கள் தவம் செய்திருக்கோம்... சுஜி அதிருஷ்டக்காரி.'

'சே! இதென்ன? தாய் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே? இன்றைக்கு பிள்ளைகளுக்கு திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். இப்படியொரு அருமையான மாப்பிள்ளை கிடைத்ததற்கு இன்னும் எத்தனைக் கண்கள் பட்டிருக்குமோ' தாய் மனம் தவிப்புடன் நினைத்தது.

பரத் புறப்பட்டுச் சென்றதும் கணவர் அருகே வந்தாள், சரோஜா. ''என்னங்க... உங்களைத்தான்...''

செய்தித்தாளைத் திருப்பிக் கொண்டிருந்த கணவரின் கவனத்தைத் திருப்பினாள்.

''என்ன விஷயம் சரோ?''

''நிச்சயதார்த்தம் முடிந்த கையோடு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு நம்ம குலதெய்வத்தை தரிசித்து வந்து விடலாம். என்ன சொல்றீங்க?''

''முடிவா சொல்லிட்டே.... அதுக்கப்புறம் எதுக்கு ஒப்புக்கு 'என்ன சொல்றீங்க'ன்னு கொசுறு கேள்வி? இந்த வீட்டுல நீ வச்சதுதானே சட்டம். அதை மாற்ற முடியுமா என்ன? இல்ல... என்னால மீறி நடக்க முடியுமா? முடியாதே என் செல்லம்!''



''வழியாதீங்க... மாப்பிள்ளை வந்தாச்சு. இனி அடக்கமா இருக்கப் பாருங்க.''

''அதெல்லாம் நல்ல மாமனாரா நடந்துப்பேன். அவர் இல்லாதப்போதான் இந்த சரசமெல்லாம்.''

''அதெல்லாம் நடக்காது.''

''ஏன்டீ...''

''அடுத்த மாப்பிள்ளையைத் தேட ஆரம்பிக்கணும். சுஜாவுக்கும் அதே வயசுதான். தெரியும் இல்லே?''

''ஏன்டீ... ஆம்பளைக்கு வயசாச்சுன்னா மனைவியைக் கொஞ்சக்கூடாதுன்னு சட்டம் ஏதாவது இருக்கா? என்னடீ இது அநியாயம்?''

''இரண்டு ஆண்டு போகட்டும். நல்லா கொஞ்சலாம்.''

''ஆ! வந்தாயா வழிக்கு. பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆகிப் போனதும் நாம் தனி தானே... அப்புறம் உனக்கு நானே, எனக்கு நீயே.''

''நிறுத்துங்க... என்னமோ சொல்லுவார்களே... பிள்ளை இல்லாத வீட்டுல கிழவன் துள்ளிக் குதிச்சானாம்... அந்த மாதிரிதான் இருக்கு கதை.''

''என்னது... கொஞ்சலாம்ன்னு நீயே சொன்னே... இப்ப கிழவன்னு கிண்டல் அடிக்கிறே... என்னடீ இது?''

''நான் சொன்னது நம்ம பேரன் - பேத்திகளைக் கொஞ்சலாம்ன்னு. புரிஞ்சுதா? ஆளை விடுங்க... எனக்கு தலைக்கு மேலே வேலை இருக்கு. உங்களை மாதிரியா? பத்திரிகையில் அப்படி என்னதான் இருக்கோ? மணிக்கணக்கா தேடிக்கிட்டு...''

''அதான்டீ தேடுறேன். நாற்பது வயது பெண்ணுக்கு வாழ்வு தர விரும்பும் தாராள மனமுடைய ஆண் இருந்



தால் விண்ணப்பிக்கவும்ன்னு எங்கேயாவது விளம்பரம் கண்ணில் படுகிறதான்னு.''

''முதல்ல அதைச் செய்யுங்க... அப்புறம் பொண்ணுகளுக்கு முடிப்போம். எனக்கும் விடுதலை கிடைச்ச மாதிரி இருக்கும். கல்யாணத்தில் ஓடியாடி வேலை செய்ய ஒரு ஆளும் கிடைச்ச மாதிரி இருக்கும். அம்மாடி! நான் தப்பிச்சேன், இந்தப் பாவி மனுஷன்கிட்டேயிருந்து'' கிண்டலாய் சொல்லிவிட்டு அவள் நகர, வேணுகோபால் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு அழுகையாய் மாறும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.



10

அந்த மோதிரத்தைத் திருப்பிப் பார்த்து அதன் அழகை ரசித்தான், பரத்.

வேலைப்பாடுடன் இருந்த அந்த மோதிரத்தில் பதிக்கப்பட்ட மாணிக்க கல் மின்னியது. நகச்சாயம் பூசப்பட்ட சுஜியின் வெண்டை விரலில் அதைப் போட்டு கற்பனையில் அழகு பார்த்தான்.

இது, அழகு சேர்க்குமா? ஊகூம்... அந்த விரலைப் போய் சேர்ந்ததில் இதன் அழகுதான் இன்னும் கூடித் தெரியும்.

மோதிரம் வாங்கிய பூரிப்புடன் காரில் வந்து கொண்டிருந்த போது சுஜியைப் போல அவனது 'செல்' செல்லமாய் சிணுங்கி அழைத்தது.



''பரத்... நான் சுஜி பேசுறேன். எங்கிருக்கிறீர்கள்... வர இன்னும் நேரமாகுமா?''

''சுஜி டியர்... நான் வந்துகொண்டே இருக்கிறேன். நீ வீட்டிலிருந்து பேசவில்லையா... வேறு எண் வந்திருக்கிறது.''

''இல்லை... வெளியிலிருந்து பேசுகிறேன். பொருட்கள் வாங்க வேண்டியிருந்தது. வாங்கியாச்சு.''

''நானும் வாங்க வேண்டியிருந்தது. வாங்கி வைத்திருக்கிறேன்.''

''என்ன?''

''சஸ்பென்ஸ்...''

''சரி... யாருக்கு?''

''அது, இரகசியம்.''

''தெரிந்து விட்டதே... எனக்குத்தான் ஏதோ வாங்கி இருக்கிறீர்கள். சரியா?''

''பரவாயில்லையே... நீ புத்திசாலிதான்.''

''இதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கு? வாங்கினால் வருங்கால மனைவி எனக்குத் தான் வாங்குவீர்கள். இது தெரியாதா?''

''சரி... அது என்ன, சொல் பார்க்கலாம்.''

''சேலை?''

''ஊகூம்.''

''ம்... கடிகாரம்?''

''என்ன... உன்னை அத்தனை குறைவாக மதிப்பிடுறே?''

''நகை... நகையாகத்தான் இருக்கும். ப்ளீஸ்... என்ன பரத்... சொல்லுங்களேன்.''

''சரி... சொல்றேன். உன் அழகான விரலுக்கு மாணிக்க மோதிரம்! நிச்சயதார்த்தத்திற்கு என் அன்புக்குரிய வளுக்கு நான் தரும் அன்பு பரிசு.''

எதிர்முனையில் மவுனம்.

''சுஜி... என்ன... பதிலே இல்லை? கேட்டுவிட்டு கத்து வேன்னு பார்த்தேன். 'கப்சிப்'ன்னு ஆயிட்டே? என்ன ஆச்சு?''

''வந்து... பரத்... மோதிரம்ன்னீங்களே... அதான்... எனக்கு சிவப்புக் கல் பிடிக்காது. அதைத் திருப்பி கொடுத்து விட்டு வைரமா வாங்கிடுங்களேன். எனக்கு வைரம் போட்டுக்கத்தான் ஆசை.''

''சாரிம்மா... இதுவரைக்கும் வாங்கிய எதையும் திருப்பித் தந்த வழக்கமில்லை. உனக்கு வேண்டியது வைரம்தானே... நாளைக்கே அதை வாங்கித் தருகிறேன். நீயே வந்து உனக்கு விரும்பியதைத் தேர்ந்தெடு. சரிதானே?''

''ரொம்ப ரொம்ப நன்றி பரத், நான் ஆசைப்பட்டதை வாங்கித் தர்றேன்னு சொன்னதற்கு. சரி, வீட்டுல நாம் சந்திப்போமா?''

''இரு... இரு... வெறும் நன்றிதானா? வேறு ஏதும் இல்லையா?''

''உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்க... வாங்கித் தருகிறேன்.''

''வாங்கி எதுவும் தரவேண்டாம். இருக்கிறதைக் கொடு, போதும் சுஜி.''

''இருக்கிறதுன்னா?''

''ஓகோ... பாப்பாவுக்கு புரியலையாக்கும்?''



''ஓ! அதுவா... இதோ... உம்ம்... கிடைச்சதா?''

''இல்லையே... மத்தியில் சிக்கிக் கொண்டதோ என்னவோ? மறுபடியும்...''

''அய்யோ பரத்... பக்கத்துல என் தோழி இருக்கா. குடைஞ்சு எடுத்துடுவா. வச்சுடுறேன்.''

'செல்'லை அணைத்துவிட்டு உல்லாச மிகுதியில் விசில் அடித்தவாறு காரை ஓட்டிய பரத், எதிரே அதி வேகத்தில் வந்த பேருந்தைத் தவிர்க்க, ஒடித்துத் திருப்பினான். கைமீறிப்போய், வண்டி ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மீது மோதியது... 'டமார்' என்ற சத்தமும் அதைத் தொடர்ந்து 'சிலீர்' என்று கண்ணாடி உடைந்த ஓசையும் கேட்டது. தலையிலும் மூக்கிலும் இரத்தம் வழிய பேச்சு மூச்சின்றி கிடந்தான், பரத்.

அடுத்த நிமிடமே அந்தக் காரைச் சுற்றி கும்பல் கூடி பரிதாபமாய்ப் பார்த்தது.

செய்தி அறிந்ததுமே அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தனர் சரோஜாவும் வேணுகோபாலும்.

அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தான், பரத். இன்னும் நினைவு திரும்பவில்லை. மருத்துவரிடம் பேசினார், வேணுகோபால். ''உயிருக்கு ஆபத்தில்லையே, டாக்டர்?''

''முழங்காலில் எலும்பு முறிவு... ஆனா, முகத்தில்தான் அதிக காயம். கண்ணாடி சிதறி முகத்தில் பட்டிருக்கிறது. வலது கன்னத்தில் சதை கிழிந்திருக்கிறது. தையல் போட்டிருக்கோம். கண்ணாடித் துகள்களை முடிந்தவரை அகற்றி விட்டோம். உயிருக்கு ஆபத்து இல்லை.''

''இன்னும் இரண்டு நாளில் நிச்சயதார்த்தம், இப்படி ஆகிவிட்டதே, டாக்டர்'' கண் கலங்கினார், வேணு.



''உங்க பிள்ளையா?''

''இல்லை டாக்டர்... எங்க மாப்பிள்ளை. திருஷ்டி பட்ட மாதிரி ஆயிடுச்சு.''

''சீச்சீ... என்ன இது அபத்தம்... திருஷ்டியால் இப்படி நடக்குமா? எப்பவும் கெட்டதாகவே ஏன் நினைக்கிறீர்கள்? ஏதோ இந்த மட்டும் காயத்துடன் தப்பினாரே என்று எண்ணி சந்தோஷப்படுங்கள். உயிருக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் உங்கப் பொண்ணோட வாழ்க்கையே பாதிச்சி இருக்கும். அதை நினைத்து கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள். நீங்க சுதாரித்துக் கொண்டு உங்க பொண்ணுக்கு ஆறுதல் சொல்லப் பாருங்கள். அதுதான் இப்போ முக்கியம். புரிந்ததா?'' வேணுகோபாலின் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றார், மருத்துவர்.

''என்னங்க... மாப்பிள்ளையோட பெத்தவங்களுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லுங்க'' சரோஜா சொல்ல...

''கலவரத்தில் அதை மறந்து போனேனே. நான் போய்ப் பேசிட்டு வருகிறேன்'' என்று அவர் சென்றார்.

'கடவுளே... எங்களுக்கே வேதனைப் பிடுங்கித் தின்கிறது... பாவம்... பெத்தவங்களுக்கு எப்படி இருக்கும்? துடிச்சிடுவாங்களே?' மூக்கைச் சிந்தினாள், சரோஜா.

சுஜா அரக்கப் பரக்க ஓடி வந்தாள். ''அம்மா... பரத்துக்கு என்ன ஆச்சு? அவர் இப்போ எங்கே?''

மகளைப் பார்த்ததும் குரல் பெருக்கி அழுதாள், சரோஜா. ''பாவம்டீ... அந்தப் பிள்ளைக்கு இப்படியா ஆகணும்... நல்ல காயமாம். நினைவில்லாமல் கிடக்கிறான். தெய்வத்துக்கு இரக்கம் இல்லாமல் போயிடுச்சே!''



''சுஜி எங்கேம்மா... வரலையா?''

''அவ எங்கே இருக்காள்ன்னு யாருக்குத் தெரியும்? தெரிஞ்சா சொல்லலாம். எனக்கு நெஞ்செல்லாம் பட படக்குதேடீ, சுஜா.''

''அம்மா... கொஞ்சம் அமைதியா இரு. எதுவும் ஆகாது. இங்கே இருக்க முடியலேன்னா வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கோ. நான் பார்த்துக்கிறேன்.''

''அங்கே இருந்தா மட்டும் நிம்மதி இருக்குமா? இந்த சுஜி வந்து தொலைக்கக்கூடாதா? எங்கே ஊர் சுத்திக் கொண்டு இருக்காளோ?''

இருவரின் அருகில் வந்த நர்சு ஒருத்தி, பொட்டலத்தைத் தந்தாள்.

பிரித்துப் பார்த்தாள், சுஜா. பரத்தின் சங்கிலி, மோதிரம், கடிகாரம், செல்போன்... புதிதாய் சின்ன நகைப்பெட்டி! அதைத் திறந்து பார்த்தாள். மோதிரம், அதில் இருந்த மாணிக்கம் ஒளி வீசியது. கூடவே, ரசீது. அன்றைய தேதியில் வாங்கியது.

'இதையா வாங்கப் போனீர்கள், பரத். ஆசையுடன் வாங்கி வந்திருக்கிறீர்கள். ஆனால், அதை சுஜியின் விரலில் போட்டுப் பார்க்க முடியவில்லையே?' கண்களில் நீர் பெருகியது. மனம் வேதனைப்பட்டது. அவனது உடைமைகளை பத்திரமாய் தனது கைப்பையில் போட்டுக் கொண்டாள்.

'பரத் சீக்கிரமாய் குணமாகி வரவேண்டும்... தடங்கலாகிப் போன நிச்சயதார்த்தம் சீக்கிரமே நடக்க வேண்டும்... இந்த வேண்டுதலை நிறைவேற்று இறைவா' அவள் மனமுருக வேண்டிக் கொண்டாள்.

என்றைக்கு வேண்டுதல் நடக்காமல் போயிருக்கிறது. இந்த வேண்டுதலும்தான் நிறைவேறும்.

ஆனால், கொஞ்சம் வித்தியாசப்பட்டு போயிருந்தது அவ்வளவுதான்.



11

சுஜிதா அவசர அவசரமாய் தனது உடைகளை சூட்கேசில் திணித்துக் கொண்டிருந்தாள். அருகில் இருந்த சுஜா, அவளிடம் கெஞ்சிக் கேட்டாள்.

''ப்ளீஸ்... பரத் பற்றி யோசி... இப் போதுதான் பரத்துக்கு நீ வேண்டும், சுஜி. இந்த வேலை வேண்டாம்ன்னு அவருக்காகத்தானே தூக்கி எறிஞ்சே. இப்ப திடீர்ன்னு வேலையில் போய் சேரப்போறேன்னு சொன்னா என்ன அர்த்தம்? பரத் கண் முழிச்சதும் உன்னைத்தான் கேட்பார் சுஜி. நீதான் அவர் அருகில் இருந்து கவனிக்கணும். நீ இல்லேன்னா மனசு ஒடிஞ்சு போவார். வா சுஜி... ஆஸ்பத்திரிக்குப் போவோம்.''

''ஏய்... எத்தனை தடவை சொல்வது, நான் வர மாட்டேன் என்று. சும்மா என்னைக் கட்டாயப் படுத்தாதே.''

''ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறே, சுஜி? பரத் உனக்குன்னு நிச்சயமானவர். அவருக்கு நேர்ந்தது எதிர்பாராத விபத்து. இந்த நேரத்தில் நீ அனுசரணையா இருக்காமல் இப்படி ஓடினா எப்படி? உனக்கே இது கேவலமாகப் படவில்லையா?''



'பட்'டென்று சூட்கேசை மூடியவள் அவள் பக்கம் திரும்பினாள்.

''இதோ பாரு... முதல்ல தொணதொணன்னு பேசுறதை நிறுத்து. எனக்கு அங்கே வரப் பிடிக்கலை. பரத்தைப் பார்க்க விருப்பமும் கிடையாது. போதுமா?''

''உனக்கு இரக்கமே இல்லையா? உன் மனசு என்ன பாறாங்கல்லா, சுஜி?''

''அப்படியே வச்சுக்கோ. இதோ பாரு சுஜா... உன்னைப் போல நான் இல்லை. எனக்கு எல்லாமே நல்லா இருக் கணும். நான் விரும்பிய பரத் அழகன்... வசீகரமானவர்... கண்களில் கட்டி இழுக்கும் காந்தப் பார்வை.

ஆனால், இப்போ... முகத்தில் தழும்பும் காயமுமாய் அவலட்சணமாகி விட்டது. கண்களில் கோளாறு என்கிறார்கள். ஒரு குருடனைக் கட்டிக்க நான் தயாரா இல்லை.''

''வாயை மூடு... அவர் ஒண்ணும் குருடன் இல்லை. அது தற்காலிக பாதிப்புதான். சரியாகி விடும். வேண்டாம் சுஜி... பரத் உன் வருங்கால கணவர் என்பதை மறந்து விட்டுக் கண்டபடி பேசாதே. இந்த நேரத்தில் அவரை நிர்கதியா விட்டுட்டுப் போறது நியாயமே இல்லை. நிச்சயம் அவருக்கு சரியாகி விடும். அதை நம்பு'' வாதாடினாள், சுஜா.

''சாரிம்மா... வாழ்க்கையை சோதனையாக்க நான் தயாராக இல்லை. எனக்கு எந்தச் சிரமமும் வேண்டாம். இப்போதைய நிலையில் எனக்கு பரத்தைவிட ஆகா யத்தில் பறக்கிறதே சந்தோஷமாகப்படுது. என்னை வற்புறுத்தாதே. ப்ளீஸ்...''



''சே! நீ இந்த அளவு சுயநலமாக இருப்பேன்னு நான் நினைக்கவில்லை, சுஜி. உன் கல்யாணத்துக்கு அப்புறம் இப்படி நடந்திருந்தால் என்ன செய்வே? புருஷன்னு அனுசரிக்க மாட்டே?''

''நல்லவேளையாய் தப்பிச்சேன். அப்படி எதுவும் ஆகவில்லையே... என் நல்ல நேரம் தான் கை கொடுத்தது.''

''போகட்டும்... இதே மாதிரி உனக்கு ஏதேனும் ஆகி... பரத் உன்னை வேண்டாம் என்று விட்டுச் சென்றிருந்தால் எப்படித் துடிச்சிருப்பே?''

''வாயை மூடு'' கத்தினாள், சுஜிதா.

''என் வாயை மூடிக்கிறேன். உன் மனசைத் திறந்து வை. நீ செய்வது சரியா, இல்லையான்னு உண்மை குத் தும். இதோ பாரு சுஜிதா, நானும் நீயும் ஒரே நாளில்தான் பிறந்தோம். பத்து நிமிடத்தால் நீ எனக்கு மூத்தவளா யிட்டே. அதுக்காக உனக்கு புத்தி சொல்லும் அருகதை எனக்கு இல்லைன்னு நினைக்காதே.

உண்மையான அன்பு, வெளித் தோற்றத்தை பெரிய பொருட்டா நினைக்காது. உடம்பைப் பார்த்து வர்ற தில்லை காதலும் அன்பும். உண்மையான அன்பு, மனசைப் பார்த்து வரும். உன் அன்பு எந்த மாதிரின்னு நல்லா யோசி. அப்புறம் முடிவு எடு'' சுஜா சொல்லிவிட்டுச் சென்றதும்... சுஜிதா தலையைப் பிடித்துக் கொண்டாள்.

பரத்திற்கு அடிப்பட்ட செய்தியை அறிந்ததும் சுஜிதா, மருத்துவமனைக்கு ஓடி வந்தது என்னவோ உண்மை தான். ஆனால், முகம் முழுக்கக் கட்டுடன்... கன்னத்தில் கம்பளிபூச்சி போல தையலுடன் படுத்திருந்த அவனது தோற்றத்தைப் பார்த்து முகம் வெளுத்துப் போனாள்.



வீங்கிப்போன அவனது முகத்தில் கண்களைச் சுற்றி கருநீலமாய் இரத்தம் கட்டிப்போய் இருந்தது. முகத்தில் பரவலாய் கீறல்களுடன் பார்க்க கோரமாய்த் தெரிந்தது. பார்த்துவிட்டு 'அய்யோ' என்று அலறினாள்.

மருத்துவர் பரிசோதித்துவிட்டு ''கண்ணாடிச் சிதறல் கள் கண்களில் பட்டிருந்ததால் பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. கண் பார்வை கெட்டிருக்க வாய்ப்புண்டு. பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்'' என்றதும் எல்லோருக் கும் அதிர்ச்சி!

என்ன... பரத் பார்வை இழந்தவனா? அவனது அழ கான கண்களுக்கு பார்க்கும் சக்தி இல்லையா? கடவுளே! இதென்ன சோதனை?

''இது தற்கால பாதிப்பாகக்கூட இருக்கக்கூடும். மனம் தளர வேண்டாம். சிகிச்சையில் பலன் கிடைக்க சாத் தியமிருக்கிறது'' என்று மருத்துவர் சொன்னதும் கொஞ்ச மாய் நிம்மதி திரும்பியது.,

ஆனால், சுஜிதா? அவள் வேறு மாதிரி அல்லவா யோசித் தாள். 'குருடன் என்று தெரிந்து ஒருவனை மணப்பது முட் டாள்தனமின்றி வேறு எதுவுமில்லை. வாழ்நாள் முழுக்க அவனுக்குக் கைத்தடியாக இருக்க வேண்டும். அது ஒத்து வராது.'

பரத்தை மணக்க விரும்பியதே அவனின் கரம் பற்றி உலகை வலம் வருவதற்காகத்தான். மாறாய் நான் அவன் கையைப் பிடித்து நடத்திச் செல்ல வேண்டும் போல இருக்கிறதே... இது தேவையா?

'வேண்டவே வேண்டாம். நல்ல வேளையாய் விமா னத்தில் பணி செய்யும் வேலைக்கு அழைப்பு வந்திருக்

கிறதே... அது எங்கேயோ பத்திரமாக கிடக்கிறது. உடனே போய் அதில் சேர்ந்து விடலாம். அதுதான் சரி' அவளுள் ஒரு தீர்மானம் எழுந்தது.

அவளது முடிவைக் கேட்டதும் பெற்றவர்கள் திகைத்துப் போனார்கள்.

''என் வழியில் குறுக்கிடாதீர்கள். தன் பெண்ணைப் பாழும் கிணற்றில் தள்ளணும்ன்னு எந்தப் பெத்தவங்களும் நினைக்க மாட்டார்கள். இந்தக் கல்யாணம் அந்த மாதிரிதான். நீங்க என்ன நினைத்தாலும் சரி, எனக்கு என் எதிர்காலம்தான் முக்கியமாகப்படுது. அதுதான் நான் வேலையில் சேரப்போகிறேன்'' திட்டவட்டமாய் அவள் பேசியது கண்டு வாயடைத்துப் போய் நின்றார்கள், வேணுகோபாலும் சரோஜாவும்.

பெண்ணாகப் பிறந்தவளுக்கு இரக்க சுபாவம் அதிகம் என்பார்களே... இவளிடம் அது சுத்தமாய் வறண்டு கிடக்கிறதே... சுஜாவும் அதையே எண்ணி மனசுக்குள் புழுங்கினாள்.

பரத் பற்றி நினைக்கும்போது பரிதாபம் உண்டானது. பரத்... உங்களுக்கு இப்படி ஒரு விபத்து ஏன் நடக்க வேண்டும்? உங்கள் மகிழ்ச்சியை ஏன் சிதைக்க வேண்டும்? எதிர்கால கனவுகளை ஏன் குலைக்க வேண்டும்? தெரியவில்லையே! இதுதான் விதியின் விளையாட்டா? இதைத்தான் இறைவனின் திருவிளையாடல் என்கிறார்களா?

உங்களைக் கணவனாய் அடைய எந்தப் பெண்ணும் ரொம்பக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று ஏங்கினேனே... என் கண்பட்டு இப்படி அதிருஷ்டக் கட்டையாகிப் போனீர்களோ என்னவோ?



கண்ணீர்த் திவலைகள் இமையோரத்தில் முத்துக்களாய்ப் பூத்து உதிர்ந்தன.

'சுஜிதா மனம் மாறவேண்டும்... பரத்துடன் சேர வேண்டும்... அதைப் பார்த்து பெற்றவர்கள் மனம் குளிர வேண்டும்' மனதார வேண்டிக் கொண்டாள், அவள்.

''வேணு... என் பிள்ளை எங்கேடா... எப்படி இருக்கான்? பயப்படும்படியா இல்லையே?'' நண்பனின் கைப்பற்றிக்கொண்டு கோவிந்தன் கலங்கினார்.

''ஒண்ணும் இல்லேடா... உயிருக்கு ஆபத்தில்லைன்னு டாக்டர் சொல்லிட்டார். கண்ணாடி சிதறி, முகத்தில் காயம். அவ்வளவுதான்.''

''உனக்கு எப்படி நன்றி சொல்வேன்... மகனுக்கு விபத்துன்னதும் உன் அண்ணி அப்படியே மயக்கமாகி விழுந்துட்டா. இரத்த அழுத்தம் ஏறி நெஞ்சு வலியும் வந்து விட்டது, வேணு. அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்து பார்த்துகக ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன்.

''......''

''சரி... என் பிள்ளையைப் பார்க்கணுமே, வேணு.''

''இருடா... இன்னும் கொஞ்ச நேரத்தில் வார்டுக்கு மாற்றி விடுவார்களாம். போய்ப் பார்க்கலாம். நாங்களும் இன்னும் பார்க்கவில்லை. உன் அண்ணி வர்றதாகச் சொல்லி இருக்கிறாள். அவளும் வந்துடுவா. ஆனா கோவிந்த்... உன் பிள்ளையைப் பார்த்துவிட்டு நீ கலங்கக் கூடாது... அவன் முகத்தில் காயம்பட்டு வீங்கி இருக்கலாம்.''

''இல்லேடா... என் பிள்ளை உயிரோடு இருக்கானே அது போதும்டா... இந்தக் காயத்தைப் பற்றிக் கவலைப் படமாட்டேன். என்கிட்ட நிறைய பணம் இருக்கு. அதை வச்சு அவனைப் பழைய மாதிரி ஆக்கிடுவேன்டா.''



''சரி... இன்னொரு விஷயத்தையும் சொல்றேன். கேட்டதும் கலங்கக் கூடாது. அடிப்பட்ட வேகத்தில் கண்ணாடி தூளாகச் சிதறி கண்களில் பாய்ந்து விட்டதாம். இரண்டு கண்களிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கண்ணாடித் துகள்களை நீக்கி விட்டாலும் முடிவா எதுவும் சொல்ல முடியலையாம். பார்வை கெட்டிருக்கலாம்ன்னு டாக்டர் நினைக்கிறார். காயம் ஆறிய பிறகுதான் வேறு பரிசோதனை செய்து, உறுதியாகச் சொல்ல முடியும் என்கிறார்.''

''என்னடா... என் பிள்ளை குருடன் ஆகிவிட்டானா? அய்யோ... இதைக் கேட்டா உன் அண்ணி உயிரை விட்டு விடுவாளே வேணு. அவளுக்கு என்ன பதில் சொல்வேன்னு தெரியலையேடா.''

தலையில் அடித்துக் கொண்டார், வேணு. ''என்னப்பா கோவிந்த்... நான்தான் சொன்னேனே... தற்காலிகமாக பாதிக்கப்பட்டிருக்கலாம்ன்னுதான் டாக்டர் நினைக்கிறார்ன்னு. மத்தபடி பார்வை வரவே வராதுன்னு அவர் சொல்லலையே... இப்போதைக்கு பரத் பார்க்க முடியாது. அவ்வளவுதான். எல்லாத்துக்கும் மருத்துவ சிகிச்சை இருக்குடா. ஏன் பயப்படுறே?''

''என் நெஞ்சில் பாலை வார்த்தேடா, வேணு. ஒண்ணு செய்... என் பிள்ளை சரியாகிற வரைக்கும் இங்கேயே இருக்கட்டும்டா... அங்கே வரவேண்டாம். என் மனைவி இருக்கிற நிலையில் மனசு ஒடிஞ்சு போயிடுவா... அவனுக்கு லேசான காயம். வேணு இதைப் பெரிசு பண்ணிட்டான்'னு சமாளித்து விடுகிறேன். பரத்கிட்ட போனில் பேசினால் நம்பிடுவா. உனக்கு சிரமம் தர்றேன்னு நினைக்



காதே. இந்த நிலையில் எனக்கு நீதான்டா எல்லாமே'' கண் கலங்க கோவிந்தன் சொல்ல...

''என்னடா பேச்சு இது? பரத் உனக்கு மகன்னா... எனக்கு மருகன்டா. பிள்ளை மாதிரிதான். நீ சொல்லித்தான் நான் செய்யணும்ன்னு இல்லை, தெரிஞ்சுக்கோ. இனி பரத் பற்றிய கவலை உனக்கு வேணாம். நாங்க பார்த்துக்கிறோம். கவலையை விடு'' என்று ஆறுதலாகச் சொன்னார், வேணு.

''சார்... நீங்க பார்க்கலாம்'' நர்சு வந்து சொன்னதும் இருவரும் விரைந்தனர்.

பரத் இன்னும் அரை மயக்க நிலையில் இருந்தான். ''சுஜி... சுஜி'' என்று முணுமுணுத்தான்.

அவனது நாடியை சோதித்து விட்டுத் திரும்பிய மருத்துவர் ''சுஜி யார்?'' என்று கேட்டதும் தடுமாறிப் போனார், வேணு.

போதாததற்கு கோவிந்தனும் கேட்டார். ''ஆமாம்டா... நானும் கேட்கணும்ன்னு நினைச்சேன். என் மருமகளைப் பார்க்கணும்டா... எங்கே அவள்?''

மென்று விழுங்கினார், வேணு.

''வந்து.. உன்கிட்டே ஒண்ணு...'' என்று அவர் ஆரம்பித்தபோது...

''அப்பா... பரத் விழிச்சிட்டாரா? எப்படி இருக்கிறார்?'' என்று ஓடி, ''பரத்... பரத்.... இங்கே பாருங்களேன்... நான் சுஜிதா.. உங்க சுஜி வந்திருக்கேன்'' என்று குனிந்து பரத் கரம் பற்றி நிற்பவள்...

சுஜிதா! சுஜிதாவே!தான்!

திகைத்துப் பார்த்தார், வேணு.

ஓடிப்போக இருந்தவள் மனம் மாறி வந்துவிட்டாளா? அவளுக்கு நல்ல புத்தி வந்ததா? உள்ளத்தில் மகிழ்ச்சி நிரம்ப புன்னகையுடன் மகளைப் பார்த்தார். அவளது முகத்தைக் கண்டதும் புருவங்களில் முடிச்சு விழுந்தது.

இது சுஜி இல்லையே... சுஜா அல்லவா? சுஜியைப் போல ஓடோடி வந்தாலும் அவள் சுஜாதான் என்பதை கன்னத்தில் விழும் குழியும், உதட்டோர மச்சமும் காட்டிக் கொடுத்து விட்டதே?

அப்போ... சொன்னது போல சுஜிதா கிளம்பி விட்டாளா? அதை மறைக்க சுஜியைப் போல வந்திருக்கிறாளா சுஜா? இளைய மகளை வியப்புடன் பார்த்தார், தந்தை.



12

தந்தையின் தோளில் சாய்ந்து அழுதாள், சுஜா. ''எனக்கு வேறு வழி தெரியலேப்பா. சுஜி, இத்தனை சுயநலக்காரியா இருப்பாள்னு நான் கொஞ்சமும் நினைக்கலைப்பா... அவ இப்படி உதறிட்டுப் போயிட்டாள்னு தெரிஞ்சா... பாவம் பரத் மனசு ஒடிஞ்சு போயிடுவாருப்பா... சுஜி செய்த துரோகம் அவரை ஒரேயடியாய் அடிச்சு மூலையில் தள்ளிடும்.

அவர் நன்றாக எழுந்து நடக்கணும். பழைய பரத் ஆகணும். சுஜி கொடுத்த அடியைத் தாங்கிக் கொள்ளும் சக்தி வர்றவரை நான் சுஜிதாவாக இருக்கப் போகிறேன்ப்பா. அதுக்கு நீங்களும் அம்மாவும்தான் ஒத்துழைக்கணும்.''



அவளது கேசத்தை வருடித் தந்த வேணுகோபால் பெருமிதக் குரலில் சொன்னார் -

''உன் அக்கா இப்படி ஒரு தலைகுனிவைக் கொடுத்துட்டாளேன்னு வேதனைப்பட்டேன்ம்மா... நீ எங்க குனிந்த தலையை நிமிர்த்திட்டே, சுஜா. என் நண்பனுக்கு என்ன பதில் சொல்லுறதுன்னு தடுமாறினேன். என்னை இக்கட்டிலிருந்து காப்பாத்திட்டேம்மா... உன்னை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்குடா... உனக்கு இருக்கும் பக்குவமும் விவேகமும் சுஜிதாவுக்கு இல்லையே? ஏம்மா... இந்த விஷயம் அம்மாவுக்குத் தெரியுமா?''

''அம்மாகிட்ட சொல்லிட்டுதான்ப்பா வந்தேன். எனக்குத் தெரியும்ப்பா... கோவிந்தன் மாமா வருவார். அவர்கிட்ட என்ன சொல்லுவதுன்னு தெரியாமல் நீங்க முழித்துக் கொண்டிருப்பீங்கன்னு. அதான் யோசிச்சு, இந்த முடிவுக்கு வந்தேன். அம்மா ஏதாவது உளறிக் கொட்டிடுவாளோன்னு நினைச்சுதான் இங்கே வர வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்ப்பா.

கோவிந்தன் மாமாவும் மனநிறைவாகத் திரும்பிப் போயிட்டார். சுஜி இப்படி பண்ணிட்டாள்னு தெரிஞ்சா ஆடிப்போயிடுவார், பாவம் நான் சுஜிதான்னு பரத் நினைக்கணும். அது நம்ம கையில்தான் இருக்குப்பா.''

''சரிம்மா... நீ சுஜியாயிட்டே! சுஜா எங்கேன்னு கேட்டால் என்ன சொல்லி சமாளிப்பது?''

''அதான் வழிகாட்டிட்டுப் போயிருக்காளேப்பா, சுஜி. நான் அவளாயிட்ட மாதிரி... சுஜியை சுஜாவாக்க



ணும். ஆமாம்ப்பா... சுஜாவுக்கு வேலை கிடைச்சு போயாச்சு. விமானத்தில் வேலை.''

பெருமூச்சு விட்டார், வேணுகோபால்.

''நம்ம வீட்டில்தான் ஏதேதோ விசித்திரமாய் நடக்கிறது. என்ன செய்ய... நம்ம நேரம் அப்படி. சமாளிப்போம்.''

''சமாளிக்கலாம்ப்பா... பரத் கண்கள் இப்போ பாதிக்கப்பட்டிருக்கிறது ஒரு விதத்தில் நமக்கு சாதகம் தான்ப்பா... நான் சுஜியா, சுஜாவான்னு அவரால் பார்த்துத் தெரிஞ்சுக்க முடியாது. எங்க ரெண்டு பேர் குரலும் ஒரே மாதிரின்னு எல்லோரும் சொல்வதுண்டு. ஏன்... அம்மாகூட சில நேரம் கண்டு பிடிக்க முடியாமல் திணறுவாள். அதனால பரத்துக்கு நிச்சயம் சந்தேகம் வராதுப்பா... என்ன, அக்கா மாதிரி வழியப் பேசி... குழைந்து சிரிக்கணும். முயற்சிக்கிறேன்.''

''உன் பேச்சைக் கேட்டு எனக்கும் தெம்பு வந்திடுச்சு, சுஜா. பரத் பழைய மாதிரி ஆனா போதும்மா... அது இப்ப உன் கையில்தான் இருக்கு. முகத்தில் 'பிளாஸ்டிக் சர்ஜரி' எப்போ பண்ணலாம்ன்னு டாக்டர் சொல்கிறாராம்? பணத்தைப் பற்றிக் கவலை இல்லைன்னுட்டான், கோவிந்தன். எல்லாம் நல்லபடியாய் முடியட்டும். குடும்பமாய்ப் போய் அந்த ஏழுமலையானைத் தரிசித்து விட்டு வரலாம்.''

''சரிப்பா... பரத்கிட்டே நான் இருக்கேன். நீங்க வீட்டுக்குப் போய் சாப்பிட்டு ஓய்வெடுங்கப்பா.''

''நீ பரிட்சைக்கு படிக்கணுமே சுஜி... எப்படிப் படிப்பே?''

''புத்தகங்களை இங்கேயே கொண்டு வந்துட்டேன். மருந்து சக்தியால் பரத் தூங்கிக் கொண்டுதான் இருப்



பார். எனக்கு எந்தச் சிரமமும் இல்லைப்பா. இந்த அமைதியான சூழ்நிலையில் நல்லாப் படிக்க முடியும்ப்பா. நீங்க கவலைப்படாமல் போங்க.''

தந்தை புறப்பட்டுச் சென்றதும் பரத்தின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

எந்தவித அசைவுமின்றி கட்டை போல படுத்திருந்த அவனைப் பார்த்தபோது நெஞ்சு பிசைந்தது. பரத்திற்கு ஏன் இப்படியொரு நிலை? ஆணழகனாய் வளைய வந்தவனை அடித்துப் போட்டு படுக்க வைத்து விட்டதே, விதி!

நகக் கண்ணுள் ஊசி குத்தியது போல வலித்தது, அவளுக்கு. கண்கள் பனித்தன.

அவன் கண் விழிக்கக் காத்திருந்தாள். ஊகூம்... கண் விழித்தாலும் என்ன பயன்? வெளியுலகம் அவனுக்கு இருட்டாகிப் போனதே!

'இல்லை பரத்... உங்களுக்கு நான் இருக்கிறேன். உங்கள் கரம் பற்றி அழைத்துச் செல்லும் வழிகாட்டியாய் - நொந்திருக்கும் இதயத்தை வருடி இதம் தரும் மயிலிறகாய் - துயரத்தில் பங்கு கொண்டு தோள் கொடுக்கும் தோழியாய் இதோ... நானிருக்கிறேன் பரத். தைரியமாக இருங்கள்' வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், அவள்.

சுஜாவின் தோளில் கைப்போட்டவாறு மெல்ல அடியெடுத்து வைத்தான், பரத். வலியில் முகம் சுணங்கியது.

''வலிக்கிறதா, பரத்?''

''உம்... வலிக்கிறதுதான். என்ன செய்ய? படுத்துக் கொண்டே இருந்தால் தசைகளும் நரம்புகளும் அசைவு

இல்லாமல் விறைப்பாகி விடும் என்கிறார், டாக்டர். இன்னும் எத்தனை நாளுக்கு இந்த அவதியோ?''

''இப்ப எவ்ளவோ முன்னேற்றம் வந்திருக்கு. பரத். எப்படி இருந்தீர்கள்... டாக்டர் சொன்னபடி நடந்தால் இன்னும் சீக்கிரம் குணமடையலாம் இல்லையா?''

''ப்ச்சு... நான் குணமடைவேனா என்று சந்தேகம் வந்து விட்டது, சுஜி. ஏன் சுஜி... ஒரு வேளை எனக்கு பார்வை வராமலே போய் விட்டால்... என்னை விட்டுப் போய்விடுவாயா? நீ இல்லா விட்டால் என் கண்களைப் போல என் வாழ்க்கையும் இருண்டு விடும், சுஜி.''

அவனது குரலில் தெரிந்த கரகரப்பு, அவளுக்கு வேதனை ஊட்டியது. அவனை நெஞ்சில் சாய்த்துக் கொண்டு ஆறுதல் தர மனம் துடித்தது.

அது, அவளால் முடியாதே! வெறும் வார்த்தைகளில் மட்டுமே ஆறுதல் காட்ட முடியும். ''சேச்சே... என்ன பேச்சு, இது? பரத்! உங்களுக்கு பார்வை வரும் என்று டாக்டர் உறுதியாகச் சொல்லி இருக்கிறார். இது தற்காலிக பாதிப்புதான், பரத். மெல்ல மெல்லச் சரியாகும். மனசைத் தளர விடாமல் இருங்க பரத்.''

''நீ இப்படிச் சொல்லும்போது மலையளவு நம்பிக்கை எனக்கு வருகிறது, சுஜி. ஆனால், தனியாக இருக்கிறபோது எதை எதையோ நினைத்துக் குழம்பித் தவிக்கிறேன். உன் அக்கறையிலும் அனுசரணையிலும்தான் தெம்பாக இருக்கிறேன். ஆனாலும் எனக்குள் ஒரு நெருடல், சுஜி. அதைச் சொல்வேன்... தவறாக எடுத்துக்க மாட்டியே?''

''மாட்டேன்... சொல்லுங்கள்.''

''என் முகம் இப்போ காயம்பட்டு வசீகரம் குலைந்து விட்டதே... அதனால் என்னை மணப்பதில் உனக்குத்



தயக்கமோ, வருத்தமோ இருக்கலாம் இல்லையா? அப்படி இருந்தால்...''

''நிச்சயமாக இல்லை, பரத். புற அழகில் என்ன இருக்கிறது? அக அழகைதான் பார்க்க வேண்டும். நான் அதைத்தான் பார்க்கிறேன். நீங்க அழகானவர் என்பதை விட இனிமையானவர் என்ற தகுதிதான் அதிகம். சரி... நான் இப்போ ஒண்ணு கேட்கட்டுமா?''

''எதிர் அம்பு வீசுறியாக்கும்? ம்... கேளு.''

''நமக்குத் திருமணமாகி இப்படி விபத்து நடந்திருந்தால் இதே கேள்வியை என்னிடம் கேட்டிருப்பீர்களா? இல்லை கேட்கத்தான் முடியுமா?'' சொல்லும் போது அவளின் குரல் தழுதழுத்தது. 'நமக்குத் திருமணம்' என்ற வார்த்தையில் மனம் வேதனையில் சுருண்டது.

சுஜியாக நடிப்பது எத்தனை கஷ்டம்... இல்லை... இது நடிப்பாக இல்லை. என் அடிமனதின் ஆசைதான்! ஆழ் மனதின் துடிப்புதான்!!

பரத்திடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது. ''எல்லாம் நல்லபடியாக நடந்திருந்தால் இந்நேரம் நமது நிச்சயதார்த்தம் முடிந்து, திருமண நாளையும் குறித்திருப்பார்கள் இல்லையா சுஜி? எத்தனை ஆசையுடன் காத்திருந்தேன்... என் சுஜிக்கு... ஆங்... இப்போது நினைவுக்கு வருகிறது. எனக்கு விபத்து நடந்ததே... அதற்கு முன் உனக்கு ஒரு மோதிரம் வாங்கினேன். அது இப்போ எங்கேன்னு தெரியலையே?''

''அது பத்திரமா என்னிடம் இருக்கிறது. கவலை வேண்டாம் பரத்'' கட்டிலில் அவனை மெதுவாக சாய்த்துப் படுக்க வைத்தவாறு சொன்னாள்.



''அது வேணுமே சுஜி.''


''நாளைக்கே எடுத்து வருகிறேன். இப்போ நல்ல பிள்ளையாக, அலட்டிக்காமல் தூங்குங்கள்.''

பரத் களைப்புடன் கண்களை மூடிக் கொண்டான். அவளது கரத்தைப் பற்றி நெஞ்சருகில் வைத்துக் கொண்டான். அவள் தன்னை விட்டு விட்டுச் சென்று விடுவாளோ என்று அஞ்சுவது போல.

அவன் முகத்தைப் பார்த்தவாறு அமர்ந்திருந்த சுஜாவிற்கு அவனது வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதில் ஒலித்தன. வெளிக் காயத்தை விட, எதிர்காலம் என்ன ஆகுமோ? என்ற உள்ளத்தின் நடுக்கம்தான் அவன் மனதைக் குலையச் செய்திருக்கிறது, பாவம்!

இப்போது முகத்தின் வீக்கம் குறைந்து, கண்களைச் சுற்றி இருந்த கருநீலத்திட்டு மறைந்து, பழைய நிலைக்கு வந்திருந்தாலும் கன்னத்தின் வடு மாத்திரம் விகாரமாய் தெரிந்தது.

இன்றைய மருத்துவத்தின் சாதனையால் அதுவும் சரியாகிவிடும். ஆனால், பரத் மனநிலை.. பழைய உற்சாகமும் மகிழ்ச்சியுமாய் திரும்புமா? தெரியவில்லை.



13

காரில் இருந்து இறங்கிய சுஜாவின் கையில் சாப்பாட்டுக் கூடை.... தந்தையிடம் சொன்னாள். ''இப்பதான் வர்றேன்ப்பா.''

''சரிம்மா... சாயந்திரம் வந்து பரத்தைப் பார்க்கிறேன்னு சொல்



லும்மா. அப்புறம், அவங்க அம்மா பேசுறப்போ கொஞ்சம் எச்சரிக்கையா பேசச் சொல்லு.''

''சரிப்பா.''

வியர்வையைத் துடைத்துக் கொண்டு மருத்துவமனைக்குள் நடந்தாள்.

''அப்பப்பா... என்ன வெயில்?''

நல்லவேளை... பரத் இருக்கும் அறையில் குளுகுளு வசதி இருப்பதால் வெக்கை தெரியாது.

பரத் பசியுடன் காத்திருப்பான் என்ற ஆதங்கத்துடன் நடையில் விரைவு காட்டினாள்.

அம்மாவுக்கு வீட்டைக் கவனிக்கவும், பரத்துக்கு சமையல் செய்து அனுப்பவும்தான் நேரம் சரியாக இருக்கிறது. அப்பாவுக்கோ சொல்ல வேண்டாம். பரத் வியாபார வேலையையும் சேர்த்து அலைச்சல் இரட்டிப்பாகிப் போனது. ஓய்வின்றி ஓடி உழைக்கிறார், பாவம்!

ஆக... சுஜா மட்டுமே பரத் அருகில் இருந்து கவனித்துக் கொள்ள முடிந்தது.

அவள் உள்ளே வந்த ஓசையைக் கேட்டு ''சுஜி'' என்று அழைத்தான், பரத்.

அவன் கண்களில் திரைக் கட்டப்பட்டிருப்பது கண்டு பதைத்துப் போனாள், சுஜா.

''கண்ணுக்கு என்னாச்சு, பரத்?''

''கண்களில் எரிச்சலும் வலியும் வந்ததால் கிருமிகள் பரவாமல் தடுக்க இந்தத் திரையைப் போட்டிருக்கிறார்கள். கண்களைத் திறக்கக்கூடாது என்று டாக்டரின் உத்தரவு.''

அவன் அருகில் வந்து நின்றாள், சுஜா. ''சாப்பாடு கொண்டு வந்திருக்கேன், பரத். சாப்பிடுகிறீர்களா?''

''அதைத் தவிர எனக்கு வேறு என்ன இன்பம்? ம்... கொடு'' சலிப்புடன் அவன் சொன்னதும் வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

மூச்சை உள்ளிழுத்து வாசனையை உணர்ந்த பரத் கேட்டான் -

'''கம்'மென்று மல்லிகை மணம்... நீ பூச்சூடி இருக்கிறாயா, சுஜி?''

''ஆமாம்.''

''ம்... சந்தன சோப்பு மணம்... அப்புறம்...''

''அப்புறம்...''

''பவுடரின் வாசனை...''

''எப்படிச் சரியாகச் சொல்கிறீர்கள், பரவாயில்லையே!''

''எல்லாம் அனுபவம்தான். கண்களை மூடிக் கொண்டால் காதுக்கு கூர்மையும் மூக்குக்கு கூடுதல் முகரும் சக்தியும் வந்துவிடும்.''

''ஊகூம்... இப்படி விட்டேற்றியாகப் பேசக்கூடாது, பரத். எத்தனை பேர் பிறவியிலேயே குறையோடு பிறந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் அவர்கள் எதிர்நீச்சல் போடவில்லையா? அன்னிக்கு செய்தித்தாளில் படித்தேன், பரத். ஆறு வயசுப் பையனுக்கு விபத்தில் இரு கைகளும் போய் விட்டதாம். அவனது தாய் ''என் பிள்ளைக்கு இப்படி ஆகி விட்டதே''ன்னு அழுதபோது அந்தச் சிறுவன் என்ன சொன்னானாம் தெரியுமா? ''ஏம்மா அழுறே? எனக்குத்தான் கால்கள் நல்லா இருக்கே... அது



போதும்''ன்னு சொல்லி அந்தக் கால்களால் எழுத, வரையக் கற்றுக் கொண்டானாம்.

என்னாலும் எல்லோரையும் போல வாழ முடியும் என்று நிரூபித்து இருக்கிறது அந்த இளந்தளிர். பிஞ்சு பருவத்தில் அவனுக்கு இருக்கும் நம்பிக்கையும், துணிவும் ஏன் பெரியவர்களுக்கு இல்லை? எதை இழந்தாலும் நாம் தன்னம்பிக்கையை இழக்கக் கூடாது? தெரியுமா, பரத்?''

தட்டில் சோறையும் குழம்பையும் போட்டுப் பிசைந்து சின்னக் கரண்டியுடன் அவன் கையில் கொடுத்தாள்.

''என்ன யோசனை, பரத்?''

''ம்... என்ன கேட்டே, சுஜி?''

''ஒண்ணுமில்லை... ஆமாம்... நான் சொன்ன மோதிரத்தைக் கொண்டு வந்தாயா?''

''இதோ...'' சின்ன நகைப் பெட்டியை எடுத்து அவன் கையில் வைத்தாள்.

அதைத் திறந்து, உள்ளே ஒளி வீசிக் கொண்டிருந்த மோதிரத்தை எடுத்தவன் அன்புடன் வருடித் தந்தான்.

''உனக்குப் பிடித்திருக்கிறதா, சுஜி?''

''என் விரலில் அதைப் போட்டுவிட்டு அப்புறம் கேளுங்க, பரத்.''

அவளது கையைப் பிடித்தான், பரத். விரல்களை வருடினான். மோதிர விரலைப் பிடித்து, அதில் மோதிரத்தை அணிவித்தான். பின்பு அந்தக் கரத்தை உதட்டருகில் எடுத்துச் சென்று விரலுக்கு முத்தமிட்டான்.

அவனது உதடுகள் பட்டதும் உடம்புக்குள் 'ஜிவ்' வென்று அவளுள் உணர்ச்சி ஊடுருவியது.



''உன் அழகு விரலில் இந்த மோதிரம் ஜொலிப்பதை என்னால் பார்க்க முடியவில்லையே, சுஜி?'' என்றான், பரத்.

''சீக்கிரம் உங்க கண்கள் சரியாகிவிடும், பரத். அப்புறம் பாருங்களேன்... உங்கள் முன் கையை ஆட்டி ஆட்டிப் பேசுவேன். நீங்க ரசிக்கலாம்.''

வாய்தான் வேடிக்கையாகப் பேசியது. மனமோ பிறந்த சிசு, தன் வலியை சொல்ல முடியாமல் தவிப்பது போல அழுதது.

'அப்போது பரத் யாரோ? நான் யாரோ? என்னைத் திரும்பியும் பார்ப்பாரா பரத்? சுஜியாய் நடித்து ஏமாற்றியதற்கு வெறுத்து ஒதுக்கி விட்டால்?'

''சாரி சுஜி... மறுநாள் போய் உனக்குப் பிடித்த வைர மோதிரத்தை வாங்கிடலாம் என்றுதான் இருந்தேன். அதுக்குள் இப்படி.... ச்சே!''

''வைரமா... ஊகூம்... எனக்கு சிவப்புக்கல்தான் பிடிக்கும், பரத். சிவப்புதான் எனக்கு ராசி. சிவப்புன்னா சக்தின்னு அர்த்தம் தெரியுமா? அதான் குங்குமத்தை வைத்துக் கொண்டால் எந்த தீய சக்தியும் நெருங்காது என்பார்கள். இந்த மோதிரமே போதும்; பரத்'' மோதிரத்தை அழகு பார்த்தவாறு அவள் சொல்ல...

அவன் முகத்தில் சிறு குழப்பம்... ஏதோ யோசனை... ''ஆமாம் சுஜி... எங்கே சுஜாவைக் காணோம்? இந்தப் பக்கம் வரவேயில்லை?''

'பகீர்' என்றது, சுஜாவிற்கு. திடீர் என்று அவன் இப்படி விசாரிப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தடுமாறிப் போனாள், சுஜா.



''வந்து... தேர்வு...'' திக்கினாள்.

''அது முடிந்திருக்கணுமே?''

''ஆமாம்... முடிந்து விட்டது. உடனே வேலையும் கிடைத்து விட்டது. வேலையில் சேர்ந்துட்டா.''

''எது... அந்த விமானத்தில் பறந்து திரியும் வேலைதானே? நினைச்சேன்... அவளாவது வீட்டில் அடங்கி ஒடுங்கி இருப்பதாவது... இருக்கிறதைவிட்டுப் பறக்கிறதைப் பிடிக்கப் போயிருக்கிறாளா? அவளை அனுப்பி இருக்கக்கூடாது, சுஜி. கன்னத்தில் அறைவிட்டு நிறுத்தி இருக்கணும்.

இப்படி சுத்துகிற பெண்ணைக் கட்டிக்கொள்ள யார் வருவார்கள்? சொல்! இந்தக் காலத்தில் அடங்கி வாழும் பெண்களுக்குகே கதைக்கட்ட காத்திருக்கிறது நம் சமூகம். இவள்... ஏய்... சுஜி... என்ன பேச்சையே காணோம்? ஓ! உன் சகோதரியைப் பற்றி இப்படிப் பேசுகிறேன் என்றா? ஏன்... எனக்கு என் மச்சினியைக் கண்டிக்க உரிமை இல்லையா, சுஜி?''

''இருக்கு பரத். உங்களுக்கு இல்லாத உரிமையா?'' திணறினாள்.

'ஏன் தொண்டை இப்படி அடைத்துக் கொள்கிறது... என் மீது பரத் கொண்டிருக்கும் வெறுப்பை எண்ணியா?'

''அவளை விட்டுத்தள்ளு, சுஜி. இங்கே வாயேன். உன்னைத் தொட்டுப் பார்க்கணும்... கண்கள்தான் வேலை நிறுத்தம் செய்து விட்டதே.''

சுஜாவின் முகத்தை கைகளில் ஏந்தியவனாய் விரல்களால் வருடினான்.

''என் மனசில் பதிந்திருக்கும் இந்த முகத்தைக் காண எனக்கு அதிருஷ்டமில்லையே, சுஜி. இந்த அழகான கண்ணாடிக் கன்னங்கள்... ஆரஞ்சு சுளை உதடுகள்... சின்ன முகவாய்... விசாலமான கண்கள்... சுஜி! அழுறியா? ஏம்மா... சுஜாவைப் பற்றி பேசினேன், என்றா?''

''அதெல்லாம் இல்லை... எனக்கு நிச்சயதார்த்த மோதிரம் போட்டீர்களே... அந்த ஆனந்தம்தான் பரத்.''

''அம்மாடி! அதற்கா... நான் என்னவோன்னு பதறிப் போயிட்டேன்.''

அந்த நேரத்தில் 'செல்' ராகம் பாடியது.

''பரத்... சொல்ல மறந்துட்டேனே... உங்கம்மா உங்க கிட்ட பேசணும்ன்னு சொன்னாங்க. உங்க 'செல்'லை எடுத்து வந்திருக்கிறேன். உங்களுக்கு லேசா அடிபட்டிருக்கிறது என்று உங்கப்பா சொல்லி வைத்திருக்கிறாராம். நீங்க ஆஸ்பத்திரியில் தான் இருக்கீங்கன்னு உங்கம்மாவுக்குத் தெரியாது. அதனால எச்சரிக்கையோடு பேசுங்க, பரத்.''

'செல்'லை அவனிடம் தந்தாள்.

''எப்படி இருக்கீங்கம்மா?'' விசாரித்தான்.

''.......''

''எனக்கு ஒண்ணும் இல்லேம்மா... நான் நன்றாய் இருக்கேன்.''

''........''

''வர்றேன்ம்மா... வேலையையெல்லாம் முடித்து விட்டுச் சீக்கிரமா வருகிறேன்ம்மா... கண்டிப்பா.''

''.........''



''இங்கே என்னோடுதான் இருக்கிறாள். இதோ கொடுக்கிறேன்.''

அந்த கையடக்கப் பேசியை அவளிடம் தந்தான்.

''கவலைப்படாதீங்க அத்தை. நான் பார்த்துக்கிறேன். நீங்க உடம்பைப் பார்த்துக்குங்க.''

''.......''

''கண்டிப்பாய்... உங்க பிள்ளையைப் பார்த்து அசந்திடுவீங்க, பாருங்க. சரி அத்தை...''

அதை அணைத்துவிட்டு அவனிடம் தந்தாள்.

''எனக்கு இப்போ சந்தேகம், சுஜி.''

''என்னன்னு?''

''உண்மையில் நீ சுஜிதானா?''

இதயம் 'டக்'கென்று நின்றுவிட்டு, பின் படுவேகமாய்த் துடிக்க ஆரம்பித்தது. அடி வயிற்றில் ஏதோ புரண்டது.

தெரிந்து விட்டதா? நான் சுஜிதா இல்லை என்று. எப்படிக் கண்டு பிடித்தான்? என் நடிப்பு தோற்று விட்டதோ?

''அடடே... பயந்து விட்டாயா, சுஜி. என் பழைய சுஜிதானா என்று சந்தேகம்தான். ஆர்ப்பாட்டம்... படபடப்பான பேச்சு... கலகலவென்று உரக்க சிரிக்கும் சிரிப்பு... செல்லச் சிணுங்கல்கள்... இவை எதையும் காணோமே? உன் பேச்சில் மென்மை... செயலில் நிதானம்... இதெல்லாம் எப்படி வந்தது? ஒரு வேளை எனக்கு ஏற்பட்ட விபத்து உன்னை இப்படி மாற்றி விட்டதா? அப்படித்தான் இருக்கும். இல்லே சுஜி?''

'நல்லவேளை அவன் சுஜி என்று நினைத்துப் பேசுகிறான்' நிம்மதி கொண்டாள்.



''உண்மைதான் பரத்... இந்த விபத்து என்னை மாற்றி விட்டது. நீங்க பழைய நிலைக்கு வந்ததும் உங்க சுஜியைப் பார்ப்பீங்க... இன்னும் ஒரு வாரத்தில் உங்க முகத்திற்கு சிகிச்சை ஆரம்பம். பரத், சந்தோஷம் தானே?''

''ஊ...கூ...ம்.. எனக்கு உன் முகத்தைப் பார்க்கிற அதிருஷ்டம் கிடைத்தால் அன்னிக்குத்தான் நிஜமாவே சந்தோஷம் அடைவேன், சுஜி.''

'என்னைப் பார்த்த பின் சந்தோஷம் வருமா, பரத்?' நான் சுஜியில்லை என்று தெரிந்த பின் உங்களுக்குத் துக்கமும் வேதனையும்தான் மிஞ்சும்' உள்ளுக்குள் புலம்பினாள், சுஜா. புன்னகை மலர அங்கு வந்தவள் மனச்சுமையுடன் திரும்பினாள்.



14

பரத், வீட்டுக்கு வந்து மூன்று மாதம் ஓடி விட்டது. இப்போது அவன் உடம்பு தேறி இருந்தது. பழைய பரத் ஆனான்.

ஊட்டச்சத்தான உணவும், சுஜாதாவின் அருமையான கவனிப்பும் அவனை பழைய நிலைக்குக் கொண்டு வந்தன. உடம்பில் தெம்பும், மனதில் வலிமையும் சேர்த்தன.

வகை வகையான காய்கறிகளை சரோஜா அக்கறையுடன் சமைத்துப் போட்டாள். வேணுகோபால், சத்தான பழங்களை வாங்கிக் குவித்தார். தவிர, திரவ பதார்த்தம் வேறு. கேட்க வேண்டுமா... முன்னை விட மினுமினுப்



பும் அதிகமாகி, சிவந்திருந்தான், பரத். முகம், அறுவை சிகிச்சையில் பழைய வசீகரத்திற்கு வந்தது.

இப்போது பார்ப்பவர்கள், அவன் விபத்தில் சிக்கியவனா என்று மூக்கில் விரல் வைத்து அதிசயிப்பார்கள். ஆனால், அது உண்மைதான் என்று சொல்லும் அவனது கண்கள்.

ஏதோ நிழலாடுவதை உணர முடிகிறது என்று அவன் சொன்னதும், மருத்துவரின் முகத்தில் மகிழ்ச்சி ரேகை தெரிந்தது.

''கவலை வேண்டாம். பார்வை வருவது நூறு சதம் உறுதி. அதுவரை கண்களை அலட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். தவறாமல் மருந்து போட்டுக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியம், எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்த மாதமே 'லேசர்' சிகிச்சை செய்து விடலாம்'' என்றார், அவர்.

மகனின் தேக நலம் தேறி வருவதைக் கண்ட கோவிந்தன், பூரித்துப் போனார்.

''வேணு... எப்படிடா உனக்கு நன்றி சொல்லுவேன்? என் பிள்ளையை எனக்கு அப்படியே திருப்பித் தந்து விட்டாயே? நான் உனக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்டா. அண்ணி... உங்க உதவியை இந்த ஜென்மத்தில் மறக்கமாட்டேன்'' என்று சொன்னார், நெகிழ்ச்சியுடன். சரோஜா பூரித்தாள்.

வேணு சொன்னார்: ''என்னடா... நமக்குள் நன்றி சொல்லிக்கொண்டு? அன்னிக்கே நான் சொன்னேனே... பரத் எங்களுக்கும் பிள்ளைதான்னு.

சரி... அப்படி நான் என்ன செஞ்சுட்டேன்? என் பொண்ணைச் சொல்லு... ஒத்துப்பேன். எல்லாப்

பெருமையும் அவளுக்குத்தான். சுஜாதான் அவனை அருகில் இருந்து கவனித்துக் கொண்டது.''

அவசரத்தில் வாய் தவறியது.

''என்ன... சுஜாவா?'' பரத் வியப்புடன் கேட்க...

கோவிந்தன் குழப்பத்துடன் பார்த்தார்.

வேணு நாக்கைக் கடித்துக் கொண்டார். சரோஜா முகம் வெளுத்து நின்றாள்.

ஒரு கணம் விழித்து நின்ற சுஜா, அவசரமாய் சமாளித்தாள். ''அப்பாவுக்கு எப்பவும் சுஜா நினைப்புதான். சுஜான்னா உங்களுக்கு ரொம்ப உசத்திப்பா... எப்பவும் அவ பெயர்தான் உங்க வாயில் வருகிறது. போங்கப்பா...''

சுதாரித்துக் கொண்டார், வேணு.

''சாரிடா... சுஜாகிட்டே இருந்து எந்தத் தகவலும் இல்லே பாரு... அதான், அவளைப் பற்றியே நினைப்பு. ஆமாம்... எப்படா அண்ணியை அழைச்சுட்டு வர்ற மாதிரி இருக்கே, கோவிந்த்'' என்று பேச்சை மாற்றினார், வேணு.

''எனக்கு மட்டும் ஆசை இல்லையா? பரத்துக்கு சிகிச்சை முடியட்டும். அப்புறம் அழைத்து வருகிறேன். மகனைப் பார்க்கணும்னு அவளும் துடிச்சிட்டு இருக்கா.''

கோவிந்தன் ஊருக்குப் புறப்படும் முன் மகனிடம் மனம் விட்டுப் பேசினார்.

''பரத்... ஒருவனுக்கு நல்ல மனைவி அமைவது இறைவன் தந்த வரம். அந்த வரத்தை வாங்கி வந்திருக்கே. நீ ரொம்ப கொடுத்து வச்சிருக்கேப்பா. இப்படியொரு பொறுமையான - புத்திசாலியான பொண்ணு உனக்கு



மனைவியா - எங்களுக்கு மருமகளா கிடைத்ததில் மனசு நிறைஞ்சு வழியுதுப்பா.

இன்பத்தில் மட்டும் கூடவே இருப்பது துணை இல்லை. துன்பம் வந்தப்போ அதைப் பங்கு போட்டு அனுசரணையா இருப்பதுதான் உண்மையான வாழ்க்கைத் துணை... அந்தக் காரியத்தில் நீ ரொம்பக் கொடுத்து வச்சவன்டா. எனக்கு இனிக் கவலை இல்லை. எல்லாம் என் மருமகள் பார்த்துப்பா'' மகனைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றார், தந்தை.

''என்ன சுஜி... அப்பாவுக்கு என்ன மந்திரம் போட்டே? இப்படி உன் புராணம் பாட ஆரம்பித்து விட்டாரே... ஏதாவது சொக்கு பொடி வச்சிருக்கியா? அப்படித்தான் இருக்கும். இல்லேன்னா... இப்படி உன் முன்னால் நானும் மகுடிக்கு மயங்கிய நாகமாக நிற்பேனா?'' என்று பரிகாசம் செய்தான், பரத்.

''பாருங்கள்... அத்தையும் மருமகள் புராணம் பாடப் போகிறார். கேட்டுக் கேட்டு உங்கள் காது ஓட்டையாகி விடப் போகிறது'' அவளும் வேடிக்கையாகச் சொன்னாள்.

''நாயனா... நா தன்றி.. நன்னா ரட்சிசுப்பா... கோவிந்தா'' தெலுங்கில் அலறினான், பரத்.

''இப்பத்தானே உங்க நைனா புறப்பட்டுச் சென்றது. அதற்குள் அழைத்தால் வருவாராக்கும்?''

''நான் அழைத்தது என் அப்பனை இல்லை... அந்த திருப்பதி திம்மப்பனை...''

''சரிதான்... இன்னிக்குத்தான் நீங்க தெலுங்கு பேசி நான் கேட்டது. ஒரு வேளை இரண்டு, மூன்று வார்த்தைகள் மட்டுமே தெரிந்து வைத்துக் கொண்டு எல்லாம் தெரிந்த மாதிரி ஜம்பமடித்துக் கொள்கிறீர்களாக்கும்?''



''யார் சொன்னது... அப்புடுச்சூடு... நுவ்வே நா பிராணமு... நாகு நுவ்வே காவாலி... நா ஹிருதயால்ல நுவ்வே...''

''போதும்... எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் புரியலே. 'காவாலி'ன்னா திட்டுகிற மாதிரி இருக்கு.''

''அதுக்கு என்ன அர்த்தம்னு சொல்றேன்... கிட்ட வா! நீதான் என் உயிர்... எனக்கு நீ வேணும்... என் இதயத்தில் இருப்பது நீதான்னு அர்த்தம். எப்படி?''

அவள் முகம் ரோஜா மலராகியது. 'கடவுளே... இது வெறும் பேச்சு. நிஜம் என்று நினைத்து நிழலிடம் பேசும் அபத்தம். இதற்கே நெஞ்சு படபடக்கிறதே! ஆயிரம் பட்டாம்பூச்சிகள் மனசுக்குள் நுழைந்த மாதிரி தோன்றுகிறதே... இது உண்மையாக இருந்து விட்டால் இன்பச் சுமையைத் தாங்க இயலாமல் இதயம் நின்று போய் விடுமோ?

''ஏய் சுஜி... என்ன மவுனமாயிட்டே?''

''....''

''இதை... இதைத்தான் மாற்றம்னு சொன்னேன். என் பழைய சுஜி எங்கே? இத்தனை நேரம் ஓடி வந்து உற்சாகத்தோடு எனக்கு ஒரு 'உம்மா' கொடுத்திருப்பாள், தெரியுமா?''

அவன் அருகே தயங்கித் தயங்கி வந்தவள் குனிந்தாள். அவனது கன்னத்தில் தன் இதழ்களை ஒற்றி எடுத்தாள்.

அவனது முகத்தில் யோசனை ரேகைகள், கன்னத்தைத் தடவிக்கொண்டு அவளைக் கேட்டான்.

''சுஜி... எனக்கு முத்தம் தந்தாயா என்ன?''

''உம்...''



''ஏதோ பட்டாம்பூச்சி கன்னத்தில் உரசிவிட்டுப் போனதோன்னு நினைச்சேன். சுஜி... எனக்கு சும்மா உட்கார்ந்து பொழுதுபோக்க பிடிக்கவில்லை. எதையாவது வாசிச்சுக் காட்டேன்.''

''செய்தி வாசிக்கட்டுமா?''

''ப்ச்சு... அதைத்தான் தினமும் வாசிச்சுக் காட்டுகிறாயே... ஏதாவது கதைப் புத்தகம் இருக்கிறதா?''


''எந்த மாதிரி கதை? மர்மமா... காதலா.. சரித்திர நாவலா?''

''உனக்கு என்ன பிடிக்கும்?''

''எனக்கு சரித்திர நாவல் பிடிக்கும். அப்புறம் கவிதைகள் பிடிக்கும்.''

''சரித்திர கதையே போதும். எனக்கு பொழுது போகணும். அவ்வளவுதான்.''

''இன்னிக்கே போய் நூலகத்திலிருந்து புத்தகத்தை எடுத்து வருகிறேன். அதுவரை சமர்த்துப் பிள்ளையாகப் படுத்து ஓய்வெடுங்கள்'' அவள் சொல்லிவிட்டுச் செல்ல... அவனது முகத்தில் புன்னகை.



15

''இவ்வாறு பார்த்திப சோழன் கண்ட கனவு அவன் வீர சொர்க்கம் அடைந்த முன்னூறு வருடங்களுக்குப் பிறகு பரிபூரணமாக நிறைவேறியது. முற்றும்.''

கல்கியின் 'பார்த்திபன் கனவு' கதையை முடித்துவிட்டு நிமிர்ந்தாள், சுஜா.

செதுக்கி வைத்த சிலை மாதிரி பரத் அசையாமல் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். கை விரலைச் சொடக்கினாள்.

''பரத்... எந்த உலகில் இருக்கீங்க?''

''இரு... இரு... பல்லவ காலத்திலிருந்து இறங்கி வர வேண்டாமா?''

''சரி... கதை எப்படி?''

''அருமை... அற்புதம்... ஏன் சுஜி... இந்தக் கதைதான் கல்கியின் படைப்புகளில் நம்பர் ஒண்ணா?''

''இதுவும் ஒண்ணு... இந்த நாவலின் அடுத்தத் தொடராக இருப்பது 'பொன்னியின் செல்வன்' இராஜராஜ சோழனின் கதை. அதுவும் உங்களை சோழர் காலத்துக்கே அழைத்துச் செல்லும். அத்தனை அற்புதமான படைப்பு, பரத்!''

''இப்ப மட்டும் என்ன... திருச்சிறார்பள்ளி, உறையூர், தோணித்துறைன்னு ஒரு சுற்று சுற்றி வந்துவிட்டேனே! அவருடைய மொழியில் சொல்லணும்ன்னா மகோன்னத படைப்பு! என்ன நடை! என்ன வருணனை! அவருடைய கற்பனை வளம் அபாரம்... ஒரு மர்ம நாவலைப் படித்து முடித்த மன நிறைவு சுஜி... அதுகூட இத்தனை விறுவிறுப்பாக இருக்குமா என்பது சந்தேகம்தான். அதுவும் விக்ரமனும் குந்தவியும் சந்திக்கும் இடங்களில் வரும் உரையாடல் அட்டகாசம். இரு உள்ளங்களில் வரும் காதலைப் பற்றி நரசிம்ம பல்லவர் சொல்வாரே, அதை மறுபடியும் படியேன் சுஜி'' அவளது கையைப் பற்றிக் கேட்டான், பரத்.

'பக்கங்களைப் புரட்டினாள், அவள். அவன் கேட்டதை வாசித்தாள்.



''சக்கரவர்த்தி அப்போது அன்பு கனிந்த குரலில் கூறினார். 'குழந்தாய்... இந்த உலகில் அன்பு ஒன்றுதான் சாசுவதமானது. மற்றதெல்லாம் அநித்தியம். இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்று சேரும்போது அங்கே அன்பு வடிவமான,கடவுளே சாந்நித்தியமாயிருக்கிறார். அவ்விதம் அன்பினால் சேர்ந்த உள்ளங்களுக்கு மத்தியில் நின்று தடை செய்ய யாருக்குமே பாத்தியதை கிடையாது'' அவளது குரலில் தழுதழுப்பு.

அவள் வாசித்து முடிக்கையில் அவனது பிடி இறுகியது. அவனிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.

அவன் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறான் என்பதை உணர்ந்தாள் சுஜா. சுஜியை நினைத்து உருகுகிறானோ?

''நூற்றுக்கு நூறு சத்தியமான வார்த்தைகள். அழகான விளக்கம் இது. உண்மையில் அன்புக்கு ஏது தடை? அடுத்தக் கதைக்கு போகலாமா, சுஜி. என்ன பெயர் சொன்னே?''

''பொன்னியின் செல்வன்... மொத்தம் ஐந்து பாகம்!''

''ஐந்து பாகமா... அப்படி என்ன கதை இருக்கிறது ஐந்து பாகத்திற்கு? ஒரு வேளை வெறும் வருணனையில் கதை ஓடுமா... இல்லை உரையாடலா?''

''படித்துக் காட்டுகிறேன். அப்புறம் சொல்லுங்கள்.''

''பார்த்திபன் கனவு மாதிரி மர்ம முடிச்சுகள் இருக்குமா சுஜி?''

''சொல்லமாட்டேன்... நான் போய் நூலகத்தில் அந்தப் புத்தகத்தை எடுத்து வரும் வரை பொறுமை அவசியம்.''

''அப்படியே அம்மணி'' என்று தன் ஒற்றை விரலால் வாயை மூடிக் கொண்டு அமைதியானான். அவள் சிரிப்புடன் சென்றாள்.



ஆக அவனுக்குக் கதையைப் படித்துக் காட்டுவது அவளது தினசரி கடமைகளுள் ஒன்றானது. பாவம்... அவனுக்கும் பொழுது போகவேண்டுமே!

பொழுதும் உற்சாகமாய் குதித்துச் சென்றது.

ஐந்து பாகத்தை வாசித்து முடிக்க அவகாசம் தேவைப்பட்டது. நடுநடுவே கதைப் பாத்திரங்களைப் பற்றி அலசல்... விமர்சனம்... பாராட்டு... சரித்திர நிகழ்வுப் பற்றிய விவாதம்.

ஒரு வழியாய் கதை முடியும் தறுவாய் வந்தது. மணிமேகலை மறையப் போகும் காட்சி... நெக்குருகிப்போய் வருணித்தாள்.

அவளே மணிமேகலையாகவும், பரத் - வந்தியத்தேவனாகவும் மாறினான்.

மணிமேகலை மானசீகமாய் இறந்து, தான் சொர்க்கத்தில் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு வந்தியத்தேவனை நினைத்து நெகிழ்ந்த மனத்துடன் நீராழி மண்டபத்தில் யாழிசையுடன் பாடிக் கொண்டிருக்கும் கட்டம்!

'கட்டுக்காவல் தான் கடந்து
கள்ளரைப்போல் மெள்ள வந்து
மட்டிலாத காதலுடன்
கட்டி முத்தம் ஈந்ததெல்லா
நிகழ்ந்ததுண்டோடி... நாங்கள் மகிழ்ந்ததுண்டோடி!'

வந்தியத்தேவனின் மடியில் தலை வைத்து அவன் முகத்தை உற்றுப் பார்க்கிறாள்...

வந்தியத்தேவனின் கண்களில் நீர்ததும்பி, கண்ணீர் முத்துக்கள் உருண்டு விழுகின்றன.



சிறிது நேரத்திற்கெல்லாம் அவளது கண்ணிமைகள் மூடின. முகத்தில் தவழ்ந்த தெய்வீக சோபைக் குன்றியது. அமைதி குடிகொண்டது.

மணிமேகலையின் உயிர் அவளுடைய உடலிலிருந்து உதிர்ந்தது. உடலைப் பிரிந்த உயிர் எங்கே சென்றது? கண்ணீர் பெருக்கும் கற்சிலைபோல் நினைவற்று... செயலற்று உட்கார்ந்திருந்த வந்தியதேவனுடைய உள்ளத்தில்தான் கலந்து போய் விட்டதோ...

மணிமேகலையாகிய தெய்வம் அவன் இதயக் கோவிலில் குடிகொண்டாள்.

படித்துக் கொண்டிருந்த சுஜாவின் கண்களிலும் உடைப்பெடுத்தது போல கண்ணீர் வழிந்தது. அவளே அந்த வேதனையை அனுபவிப்பது போலத் துடித்தாள். மணிமேகலையைப் போல அவளும் ஏங்கி ஏங்கி சாகவேண்டுமோ...

மணிமேகலை கொடுத்து வைத்தவள். காதலன் மடியில் உயிர் விடும் பாக்கியம் கிடைத்தது.

தனக்கு?

அவளது கேவல் சத்தத்த்தைக் கேட்ட பரத் ''சுஜி... அழுகிறாயா?'' என்று பதறிக் கேட்டான்.

அவன் கேட்டதும் முகத்தை மூடி விசும்பி அழுதாள். அவளது கரத்தை வருடியவாறு சொன்னான், பரத். ''இத்தனை இளகிய மனசா, உனக்கு. படிக்கிறபோது நெகிழ்ச்சி ஏற்படுவது சகஜம்தான். ஆனால், இது வெறும் கற்பனைக் காட்சி, சுஜி.''

''இல்லே பரத்... இதுபோல யாருக்காவது எங்கே யாவது நடக்கலாம் இல்லையா? ஒருதலைக் காதல்

என்பது ரொம்ப வேதனையானது, பரத். அந்தக் காதலை உள்ளேயே புதைத்துக் கொண்டு ஊமைக்குயில் போல வேதனைப்பட்டு... இலவு காத்த கிளியாய் அன்புக்கு ஏங்கி... அது கிடைக்க வழியில்லை என்று உணர்ந்ததும் தரையில் விழுந்த மீனாய் தத்தளித்து... துடித்து... மனம் நொந்து... ரொம்ப கொடுமை, பரத்.''

''அசடு... நம்ம விஷயம் அப்படி இல்லை. சீக்கிரமே நாம் மணமக்கள் ஆகப்போகிறோம். சந்தோஷமாக வாழப் போகிறோம். போதுமா? சின்னதுக்கெல்லாம் இப்படி நீ அழுவது வேடிக்கைதான் சுஜி.''

''சாரி பரத்... நான் சீக்கிரமே உணர்ச்சி வசப்பட்டு விடுவேன். கதையில் அழும் கட்டம் வந்தால் என்னையும் அறியாமல் அழுது விடுவேன்... ஆச்சு... வேறு கதைக்குப் போலாமா?''

''வேணாம்மா... வேணவே வேணாம். கதையைப் படிக்கவும் வேண்டாம்... படித்து விட்டு நீ அழவும் வேண்டாம். உனக்கு கவிதைப் பிடிக்கும்னு சொன்னாயே... அதைப் படித்துக் காட்டு போதும். நீ கண்ணீர் விட்டால் எனக்குத் தாங்காது.''

அந்தக் கடைசி வார்த்தையில் மெய் மறந்து போனாள், சுஜா.

அது, குழந்தை தன் பிஞ்சு விரல்களால் கன்னத்தை வருடியது போல மனசுக்கு இதம் அளித்தது.

அடுத்த கணமே மனக்குரல் எச்சரித்தது.

'அட முட்டாளே! நீ அழுதால் இல்லை... சுஜி அழுவதைத்தான் தாள முடியாது என்கிறான். எதையோ நினைத்து உச்சிக் குளிர்ந்து விட வேண்டாம்.



நீ அவன் சுஜி இல்லை...

உண்மை, பேய்க்கரமாகி அவளது கன்னத்தில் அறைந்தாற் போல வலித்தது.

இன்னும் கொஞ்ச நாள்... அப்புறம் இந்த நாடகம் முடிவுக்கு வந்து விடும். திரை விழுந்து விடும்... அதுவும் இரும்புத்திரை!

அதற்குப் பிறகு அவன் எங்கேயோ... அவள் எங்கோ... 'லேசர்' சிகிச்சையானதும் அவன் கண்களில் பார்வை வரும். உண்மை தெரிந்ததும் என்ன செய்வான்... சுஜியைத் தேடி ஓடுவானா...?

யாருமே வேண்டாம் என்று தன் ஊர் திரும்பி விடுவானா? பல கேள்விகள்! பதில் தெரியாத கேள்விகள்!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... ஏற்கனவே சுஜா என்றாலே முகம் சுளித்துப் பேசும் பரத் இனி அவளைப் பார்த்ததும் முகம் திருப்பிக் கொள்ளுவது உறுதி!


இதுநாள் வரை அவனுடன் பேசி... பழகி... பொழுதை இனிமையாகக் கழித்தாயிற்று... பரத் எட்டாத கனியாகி விட்டால் வாழ்க்கை வறண்ட பாலைவனம்தான்...

ஏதாவது ஒரு வேலையை தேடிக்கொண்டு, அந்தப் புது சூழ்நிலையில்... புதுமுகங்களின் மத்தியில் அவனை மெல்ல மறக்க முயல வேண்டும்...

சிரமம்தான்... இருந்தாலும் அதுதான் சரி... என் எதிர்காலத்துக்கும் நல்லது...

அந்தத் தீர்மானத்தில் வேலைகளுக்கு மனு போட்டாள், சுஜா. வேலையும் கிடைத்தது!





16

தந்தையிடம் வந்து தயங்கி நின்றாள், சுஜாதா.

''அப்பா...''

வியாபாரக் கணக்கை எழுதிக் கொண்டிருந்த வேணுகோபால் நிமிர்ந்து பார்த்தார்.

''உங்ககிட்ட பேசணும்னு வந்தேன்ப்பா.''

''என்னம்மா'' எழுதுவதை நிறுத்திவிட்டுக் கேட்டார், வேணுகோபால்.

''எனக்கு அடுத்தவாரம் கல்லூரி விரிவுரையாளர் வேலைக்கு கோயமுத்தூரில் நேர்முகத் தேர்வு இருக்குப்பா. போய்வர இரண்டு நாளாகும். இந்த விசயம் பரத்துக்குத் தெரிய வேண்டாம்ப்பா.''

''வேலையா...? ஏம்மா சென்னையில் இல்லாத வேலையா? எதுக்கும்மா வெளியூருக்குப் போகணும்?''

''இங்கே வேலை கிடைக்கும்வரை ஏன் சும்மா இருக்கணும்ப்பா. எந்த வேலைக்கும் முன் அனுபவம் கேட்கிறார்கள். இந்தக் கல்லூரியில் அப்படி எதுவும் கேட்கல்லே... நல்ல கல்லூரிப்பா... கிடைத்தால் அது புண்ணியம்தான்...!''

முகவாயைச் சொறிந்தவாறு யோசித்தார், வேணு.

''அதில்லைம்மா... நீ இல்லாமல் பரத்துக்கு பொழுது போகாது சரி... நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்... விடு... இருந்தாலும் கொஞ்சம் யோசிச்சு முடிவு எடும்மா... என் செல்வாக்கில் இங்கேயே உனக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்...''



''எதுக்குப்பா... நல்ல மதிப்பெண்ணோடு தேர்ச்சி பெற்றிருக்கிறேன்... சிபாரிசு தேவையா? என் திறமைக்கு வேலை கிடைத்தால்தான் மதிப்பும் பெருமையும்ப்பா!''

''இப்ப சொன்னியே... அது நூத்துக்கு நூறு சரியான வார்த்தை. ஆமாம்... என்னிக்கும்மா கிளம்பணும்... நம்ம காரில்தானே போறே?''

''இல்லேப்பா... என் தோழியும் வர்றா... இரண்டு பேரும் ரெயிலில் போயிட்டு வந்து விடுகிறோம்.''

சின்ன மகளை பெருமையுடன் பார்த்தார், வேணுகோபால்.

எத்தனை பொறுப்பா, புத்திசாலித்தனமா நடந்து கொள்ளுகிறாள்... 'தாம் தூம்' என்று ஆர்ப்பாட்டத்துடன் நடந்து கொள்ளும் பெரியவளை நினைத்து மனம் வருந்தினார்.

''சரிம்மா... உன் விருப்பம்...'' என்றவர் மீண்டும் கணக்கு வழக்கில் ஆழ்ந்து போனார்.

பரத் வியப்புடன் கேட்டான்.

''உண்மையில் இது உன் கவிதைகள்தானா? 'ரீல்' விடலையே. என்னால் நம்ப முடியவில்லை சுஜி...''

''ஏன்... கவிஞர்களின் தலையில் கொம்பு இருக்கும் என்ற நினைப்பாக்கும்?''

''அதில்லை... உன் கவிதைகள் இத்தனை சிறப்பாக இருந்தும், அடக்கமாய் இருந்தாய் பாரு... அதுதான்! எங்கே.. உன் கவிதையைப் படி.... பார்ப்போம்.''

''வாசிக்கிறேன்... கேளுங்கள். இது காதல் கவிதை...''

கையொப்பம் இல்லாத காதல் மடல்
என் கண்வழியே அஞ்சல் ஆனது!
விழியோரக் கனவுகளில் விம்மியெழும் பெருமூச்சுகள்...
இதயத்தாளத்தில் இதமாய் அச்சாகி
இன்ப மடலாய் வெளிவர... அதில்
வேறு வார்த்தைகள் ஏதுமில்லை...
வெறும் காதல்... காதல் மட்டுமே!
நாணம் எனும் உறையிலிட்டு
நல்ல நாள் நேரம் பார்த்து
தேன் மடலை அனுப்ப விழைந்தேன்
என்ன அவசரமோ காணேன்...
ஏன் இந்த வேகமோ - உன்
நீலம் பூத்த நீள் விழிகளில் - அது
நிர்வாணமாய் நீந்தி வந்ததே!

அவன் ரசித்தானா... இல்லையா... என்று வெட்கத்துடன் அவனை ஏறிட்டாள்.

''பிரமாதம்... சுஜி... பிரமாதம்... காதலின் அனுபவத்தை ரசித்து எழுதி இருக்கிறாயே... 'நாணம் எனும் உறையிலிட்டு' என்ன அழகான சொல் அலங்காரம்... எங்கே உன் கையைக் கொடு... இந்தக் கவிதையை எழுதிய கைக்கு ஒரு செல்ல முத்தத்தைத் தரணும்.''

அவனது உதடுகள் தன் கரத்தில் பட்டதும் இரத்த நாளங்களில் சிலிர்ப்பு குதித்து ஓடியது... உடம்புக்குள் 'குப்' என்று சூடேறியது... இதயம் வரை மின்னல் வெட்டியது.

''இன்னும் இருக்கா...?'' என்று கேட்டான், பரத்.

''கேட்க ஆர்வம் இருந்தால் படிக்கிறேன்.''



''ஆர்வம் இல்லாமலா கேட்கிறேன்.''

''இதோ இன்னொரு கவிதை!''

'இலையுதிர் காலமோ என
ஏங்காதே பெண்ணே...
வருகிறதே வசந்தகாலம்
வாசலைத் திறந்து வை!'

அவளது கரத்தை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டான், அவன். உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

''நம் இலையுதிர் காலம் முடிந்துவிட்டது, சுஜி... இனி வருங்காலம் நமக்கு வசந்த காலமாக இருக்கும். இதோ என் இதய வாசல் திறந்திருக்கிறதும்மா, உனக்காக... உன் ஒருத்திக்காக'' அவளை அணைத்து தோளில் சாய்த்துக் கொண்டான்.

அவளுக்குள் படபடப்பு... இதய தாளத்தின் சத்தம் 'லப் டப்' என்பதற்கு பதில் 'பரத் பரத்' என்று ஒலிப்பது போல பிரமை.

இதே நிலை நீடித்தால் இனி தாங்காது.

பரத்தைவிட்டு விலகிச் செல்ல வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அவனை விட்டுக் கொஞ்சம் தள்ளியே இரு என்று அறிவு எச்சரித்தாலும், இதயம் கேட்க வேண்டுமே. அவனது அணைப்புக்காக அல்லவா ஏங்குகிறது.

''சுஜி...''

''ம்ம்...''

''சீக்கிரமே நம் திருமணத்தை நடத்தச் சொல்லலாமே... ஏன் இன்னும் தள்ளிப்போட வேண்டும். 'சில்'



என்று பனிக் கட்டிகளை வாரி இறைத்தது போல உடம்பு தூக்கி வாரிப் போட்டது. அவனிடமிருந்து விலகி நின்றாள்.

திருமணமா... அது எப்படி முடியும்? நான் சுஜி இல்லையே, பரத்.

''சுஜி... என்னாச்சு?''

''அம்மா இந்தப் பக்கமாக வருகிறார்கள், பரத்'' சமாளித்தாள்.

''ஓ!''

''பரத்... அடுத்த வாரம் என் தோழியின் கல்யாணம்... நான் அதுக்குப் போய்த்தான் ஆகணும். இரண்டு நாளில் வந்து விடுவேன்.''

''இரண்டு நாள்! நாற்பத்தெட்டு மணி நேரமா... நீ இல்லாமல் எனக்குப் போரடிக்குமே, சுஜி. கண்டிப்பாய் போய் ஆகணுமா?''

''நெருங்கிய தோழி, பரத். தவிர்க்க முடியாது.''

''சரி... போய் வா.''

''அதை சிரித்த முகத்துடன் சொல்லக் கூடாதா?''

''ஈ... ஈ... போதுமா?''

அவனது மூக்கை செல்லமாய் திருகியவாறு சொன்னாள்.

''வழக்கமாய் எல்லோரும் சொல்கிற மாதிரி இதுக்கு அந்த மூஞ்சியே தேவலாம்ன்னு சொல்ல மாட்டேன். இந்த மூஞ்சிகூட அழகாகத்தான் இருக்கு. என்ன... ஒரு வாலும் இருந்துட்டா இன்னும் பொருத்தமா இருக்குமேன்னு தோணுகிறது.''

உரக்கச் சிரித்தான், அவன். ''இதைத்தான் ரசிக்கிறேன். நீ இல்லாத இரண்டு நாளை எப்படிக் கழிக்கப் போகிறேன், சுஜி.''



''ஏன்... உங்க மாமனாரும், மாமியாரும் மனிதப் பிறவிகளாக உங்களுக்குத் தோன்றவில்லையாக்கும்?''

''அவர்கள் மனிதப் பிறவிகள்தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால், நான் குரங்காச்சே... இந்த வானரத்திற்கு ஒரு மந்திதானே துணையாய் இருக்க முடியும்!''

''அம்மாடி... என் காலை வாரி விட்டீங்களே! சரி, நானும் குரங்குதான், உங்களுக்கு ஏத்த ஜோடிதான். சந்தோஷமா?''

அவளுக்கே வியப்பு... என்ன உரிமையில் இவருடன் சரிக்கு சரியாய் வாயாடுகிறேன். இது சரியா?

'இல்லை... குறைந்த பட்சம் கற்பனையிலாவது பரத் என்னவர் என்று நினைத்துப் பேசலாமே... அதில் தவறில்லையே?' மனம் சமாதானம் செய்து கொண்டது.

அவன் பெருமூச்சு விடுவது தெரிந்தது. ''சுஜி... நீ சொன்னது போல எனக்கு ரொம்பவும் சந்தோஷம்தான். எதுக்குத் தெரியுமா? நம் இருவரையும் கடவுள் சந்திக்க வைத்தாரே, அதுக்கு. நம்மை வாழ்வில் இணைய வைத்தாரே, அதுக்கு... எனக்குத் துணையாக இருந்து என் துன்பத்தை மறக்க வைத்தாயே, அதுக்கு. நீ இல்லாத வாழ்க்கை வெறுமையாகத்தான் இருந்திருக்கும், சுஜி. சரி, நீ புறப்பட்டு போம்மா... நான் உனக்காகக் காத்திருப்பேன்.''

அமுதம் தாரையாகப் பொழிவது போல அவனது வார்த்தைகள் நெஞ்சுக் கூட்டுக்குள் இனிமையாய் படர்ந்தது. சிறகு முளைத்ததும் பறவைக் குஞ்சு உல்லாசமாய் திரியுமே... அது போல அவளும் குதூகலத்துடன் புறப்பட்டாள். சீக்கிரமே திரும்ப வேண்டும் என்ற

பரபரப்பில் அவள், வேலைக்கான நேர்காணலை முடித்துவிட்டு ஆசையுடன் வீடு திரும்பினாள்.

ஆனால், அங்கே அவளுடன் காத்திருந்தது அவளது இதயம் கவர்ந்த பரத் இல்லை... மின்னாமல், முழங்காமல் விழுந்த இடி! பேரிடி!!



## 17

"அம்மா! நான் வந்துட்டேன்!" அடுக்களையில் எதையோ கிளறிக் கொண்டிருந்த சரோஜா, பின்புறமாய் வந்து கட்டிக் கொண்ட மகளிடம் திரும்பாமலே கேட்டாள்.

"நேத்து போய், இன்னிக்கு வந்தாச்சா? சீக்கிரமே போன காரியம் முடிஞ்சுடுத்தாடீ?"

"அம்மாவ்... நான் நேத்து போகவில்லை. நான் புறப்பட்டுப் போய் முழுசா நூற்றி அறுபத்திரெண்டு நாள் ஓடிப்போய் விட்டது. தெரிஞ்சுக்கோ."

வியப்புடன் திரும்பிய சரோஜா தன் மூத்த மகளைப் பார்த்து விட்டுத் திகைத்தாள்.

"சுஜி... நீயா?"

"பின்னே... யாருன்னு நினைச்சு நீ பேசினே? திடீர்ன்னு வந்து, உங்களை மலைக்க வைக்கணும்ன்னு நினைச்சு வந்தா ஏதேதோ சொல்லுறீயேம்மா... ஓ! சுஜான்னு நினைச்சு பேசினாயாக்கும்? ஆமாம்... அவ எங்கே? சரி... வீட்டு நடப்பு எப்படி இருக்கு? பரத் இருக்காரா? இல்லே மனசு ஒடிஞ்சு ஊர் திரும்பிட்டாரா?" படபடவென்று பொரிந்து தள்ளிய மகளை வெறித்துக் கொண்டு நின்றாள், சரோஜா.



"அம்மா... என்ன இது? சிலை மாதிரி நின்னுட்டே... நான்... உன் மூத்தப் பொண்ணு சுஜி... மறந்தே போயிட்டியா?"

"நீ எப்படிடீ... திடீர்ன்னு..."

"இதென்னம்மா கேள்வி? விடுப்பு கிடைச்சது. அதான் வந்தேன். சரிம்மா... சுஜா எங்கே? அவளுக்கு வேலை ஏதும் கிடைச்சதா?"

"அது விஷயமாதான்டீ கோயமுத்தூர் போயிருக்கா. அது பரத்துக்குத் தெரியாது."

"பரத்... அப்போ அவர் இங்கேதான் இருக்கிறார். என்னம்மா... நான்தான் இந்தத் திருமணம் நடக்காதுன்னு சொன்னேனே... இன்னும் ஏன்?"

"வாயை மூடுடீ... நீதான் இரக்கமே இல்லாமல் கிளம்பிட்டேன்னா நாங்களும் அப்படி இருந்துவிட முடியுமா? பாவம் அந்தப் பிள்ளை. அடிப்பட்டு கிடந்தப்போ நீ இப்படி உதறிட்டுப் போயிட்டேன்னு தெரிஞ்சா மனசு ஒடிஞ்சு போயிடுவானே... அதனாலதான் வாயை மூடிக்கிட்டு இருந்தோம்."

"வாயை மூடிக்கிட்டா... என்னம்மா பிதற்றல்? அவர் என்னைப் பற்றி விசாரிக்கவே இல்லையா? இது வரைக்கும் அவரைப் பார்க்க நான் வராதததற்கு காரணம் அறியாத முட்டாளா, பரத். போம்மா..."

"உனக்கு விளக்கமா சொல்லணும். அப்போதான் புரியும். நீ புறப்பட்டுப் போயிட்டே. எங்களுக்கு என்ன செய்வது என்று தோணலை. பரத்தின் தந்தையும் வந்து விட்டார். உங்கப்பா என்ன சொல்வதுன்னு தடுமாறிக் கொண்டிருந்தார்" என்று தொடங்கி, நடந்ததை எல்லாம் சொல்லி முடித்தாள், தாய்.



"இப்போ திடீர்ன்னு வந்து குதிச்சு குட்டையைக் குழப்பப் பார்க்காதே. பாவம் சுஜா... இதுநாள் வரைக்கும் எப்படியோ சமாளித்துக் கொண்டிருக்கிறாள்."

"எனக்கு என்ன வந்தது? சுஜாவே இருந்து கவனிக்கட்டும்... எனக்கு அத்தனைப் பொறுமை இல்லை. வேணும்னா அவளே பரத்தைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டும். எனக்கு கவலை இல்லை! சரிம்மா... அப்பா எங்கே?"

"பரத்தை அழைத்துக் கொண்டு கண் நிபுணரிடம் போயிருக்கிறார். ஏதோ சிகிச்சையாம். வர்ற நேரம்தான்."

சொல்லும்போதே வாசலில் கார் வந்து நிற்க... கார் கதவை திறந்து இறங்கிய பரத் நிதானமாய் நடை போட்டு வீட்டினுள் வந்தான்.

அவனைப் பார்த்ததும் அப்படியே பனிச்சிலையாய் நின்று விட்டாள், சுஜி.

'பரத் முகத்தில் காயங்களின் வடுக்களுடன் அவலட்சணமாய் இருப்பான் என்று நினைத்தேனே... மாறாய்... இது என்ன மாயம்! கோரம் எதுவும் இல்லாமல் இன்னும் அழகு கூடி தெரிகிறானே... எப்படி?'

தாயைத் திரும்பிப் பார்த்தாள்.

"என்னடீ... ஆச்சரியமா இருக்காக்கும்? பார்க்க சகிக்கலைன்னு ஓடிப் போனியே? அதே பரத்தான். சுஜாவின் கவனிப்பில் உடம்பு தேறி வந்திருக்கிறான். கண் பார்வை கூட வந்து விடும் என்று டாக்டர் உத்திரவாதம் கொடுத்து இருக்கிறார். என்னவோ சொல்றது போல, பூனை தன் கண்ணை மூடிக் கொண்டு பூலோகமே இருட்டாச்சுன்னு நினைச்சுதாமே. அது மாதிரி நீ



ஒதுக்கிட்டு ஓடினதும் அவன் 'அம்போ'ன்னு கிடப்பான்னு நினைத்தாயாக்கும்?

இதுக்குத்தான் சொல்றது. அவசரத்தில் புத்தி இழக்கக் கூடாதுன்னு. நீ செய்த துரோகம் தெரியாமல் அந்த அப்பாவிப் பிள்ளையும் இன்னும் உன் நினைவில் இருக்கானே... அதைச் சொல்லணும்" மெல்லிய குரலில் சரோஜா சொன்னதும்...

சுஜியின் மனம் குரங்கு போலக் குட்டிக் கரணம் போட்டது. இன்னும் என் நினைவா? உள்ளம் கள் குடித்த நரியாய் குதியாட்டம் போட்டது.

'சுஜி... புத்திசாலித்தனமா பிழைக்கப் பாரு... இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதே... அதிருஷ்டம் ஒரு தடவைதான் கதவைத் தட்டும். உன் விசயத்தில் இரண்டாவது தடவையாய் தட்டிக் கொண்டிருக்கிறது... பயன்படுத்திக்கோ. விமானப் பணிப் பெண்ணாக இருந்து எதை சாதித்தாய்? அத்தனை அழகு இருந்தும் தேவதைகளின் மத்தியில் உன் வனப்பு சோபிக்காமல் போனதே... விமான ஓட்டிகளோ, விமானத்தில் பயணம் செய்த செல்வச் சீமான்களோ உன் அழகில் சொக்கி நிற்காதது ஏமாற்றமே.

ஐம்பது வயசுக்கு மேல் இருந்த பெரிசுகள்தான் பல் இளித்தன. ஒரு தடவை அந்த இந்தி சினிமா நடிகர் பயணம் செய்தாரே.. உன்னை ஏறிட்டுப் பார்த்தாரா? இல்லையே. வேறு யாரையோ அல்லவா கிறக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதோ... இங்கே... உன்னை தேவதையாய் ஆராதிக்கும் ஒருவன்.. உன் பெயரையே சுவாசிக்கும் காதலன்... தன்

அன்பை மட்டுமல்ல... அத்தனை செல்வத்தையும் உன் காலடியில் கொட்டக் காத்திருப்பவன்... இவனை விடவா ஒருவன் உயர்வாக உனக்குக் கிடைப்பான்?

வானவில்லைப் பிடிக்க ஆசைப்பட்டு இந்தப் புளியங் கொம்பை விடப் பார்த்தாயே... இனி மேலாவது சாமர்த்தியமாக நடந்து கொள். போ... போய்ப் பேசு!'

''பரத்'' என்று அழைத்தவாறு கிளம்பிய மகளைத் தடுத்து நிறுத்தினாள், தாய்.

''எங்கேடி போறே?''

''ஏன்... என் பரத்கிட்டதான்.''

''உன் பரத்தா... சரிதான்! உதறிட்டுப் போனியே... அப்போ இந்த உறவு எங்கே போச்சு? இப்பத்தான் தேறி வந்திருக்கிறான். போய் ஏதாவது பேசி காரியத்தைக் கெடுத்து விடாதே... உனக்குக் கோடி புண்ணியம்.''

''என்னம்மா பேசுறே? அப்போ அவரைப் பார்த்த அதிர்ச்சியில் பயந்து ஓடிட்டேன். அதுக்காக அவரை வெறுத்ததாய் அர்த்தமா? பரத்துக்கு என் மேல் இருக்கும் அன்பு மாறவில்லைன்னு சொல்றே... அப்போ ஏன் தடுக்கிறே?''

''நான் ஒண்ணும் தடுக்கல்லே. குழப்பத்தை ஏற்படுத் தாதேன்னு சொல்றேன். ஆமா... இந்த உடையிலா போறே. முதல்ல உடையை மாற்று.''

நாக்கை கடித்துக் கொண்டாள், சுஜிதா.

ஜீன்ஸ், பனியனில் சுதந்திர பறவையாய் திரிந்தவள் ஆயிற்றே. ஏதோ உறுத்த, தாயிடம் கேட்டாள் - ''பரத் துக்கு இன்னும் பார்வை வரவில்லையேம்மா?''



''இப்போ கொஞ்சம் பரவாயில்லை... மங்கலாகத் தெரியுதாம். உருவம் ஆணா, பெண்ணான்னு தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், முழுப் பார்வையும் இன் னும் திரும்பவில்லை. அதான் சொல்றேன். கவனக் குறைவா எதுவும் செய்திடாதே. இப்ப நீ தோழியின் திருமணத்திற்குப் போய் வந்திருக்கே... நாளை வர வேண்டியவள் இன்னிக்கு வந்துட்டே... தெரிஞ்சுதா?''

''நான் பார்த்துக்கிறேன்ம்மா'' என்று புறப்பட்டவள், மறுபடியும் தாயின் அருகே வந்தாள்.

''என்னடீ?''

''நன்றிம்மா'' தாயின் கன்னத்தில் முத்தமிட்டுச் சென்றாள், அவள்.

'இதில் ஒண்ணும் குறைச்சல் இல்லை. அப்பப்ப புத்திதான் மழுங்கிப் போகிறது' என்று முணுமுணுத்த வாறு சமையலைத் தொடர ஆரம்பித்தாள், சரோஜா.

ஆனால், மனதில் குழப்பம் பரவியது. 'எப்படியோ மகள் மனம் மாறிவிட்டாள். அது போதும்; சீக்கிரமே நிச்சயதார்த்தத்தை முடித்துவிட வேண்டும்' பெற்ற மனம், மகளின் நலத்தை நினைத்தது.

''பரத்!''

கட்டிலில் அமர்ந்திருந்தவன் அந்தக் குரலைக் கேட் டதும் சட்டென்று திரும்பினான். ''சுஜி... வந்தாச்சா? நாளைக்கு வர்றதாய்ச் சொன்னே... சீக்கிரம் வந்துவிட் டாயே?''

''என்ன செய்ய... நீங்க இல்லாம எனக்குக் கஷ்டமாகி விட்டது. அதான் வந்துவிட்டேன். பரவாயில்லை... முன் மாதிரியே 'ஜம்'முன்னு ஆயிட்டீங்க, பரத். உடம்பு வலியெல்லாம் போய் விட்டதா?'' என்றாள், அவள்.



''என்ன இது, சுஜி... ஏதோ ரொம்ப நாளைக்கு அப்புறம் பார்த்த மாதிரி நலம் விசாரிக்கிறே... நேத்து தானே ஊருக்குப் போனே?''

அப்போதுதான் உறைத்தது. 'தப்பு பண்ணிவிட் டேனே?' சமாளித்தாள்.

''அதானே! என்னவோ ரொம்ப நாளாகப் பிரிந்து இருந்த மாதிரி தெரியுது, பரத்.''

''எனக்கும் அப்படித்தான், சுஜி. நீ ஊருக்குப் போய் இருபது மணி நேரம் தான் ஆகி இருந்தாலும் ஏதோ இருபது ஆண்டு ஆன மாதிரி தோணுது. நீ புத்தகம் படித்துக் காட்டி வழக்கம் பண்ணி விட்டாயா? கதை கேட்காமல் எனக்குப் பொழுது போகவில்லை.

சுஜி... இந்தா... இதைப் படித்துக் காட்டேன்.''

அதை வாங்கிப் பார்த்தவள் முகம் சுளித்தாள். ''சரித்திர நாவலா? அய்யே... இதெல்லாம் சுத்த போர்... பரத்! என்கிட்ட நல்ல கிரைம் கதைகள் இருக்கு. விறுவிறுப்பாக போகும்.''

பரத் புருவங்கள் உயர்ந்தன. ''நீ படிக்கிறது மர்ம நாவல்களா, சுஜி?''

''ஆமாம். படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டும் ஆங்கில நாவல்கள்தான். படிக்கட்டுமா?''

''ஊகூம்... இன்னிக்கு நீ நல்ல மனநிலையில் இல்லைன்னு தெரிகிறது. பயண அலுப்பாக இருக்கும்.''

பற்களைக் கடித்தாள், சுஜி.

'எதை எதையோ பண்ணி, பரத் மனநிலையைக் கெடுத்து விட்டிருக்கிறாள், இந்த சுஜா' மனசுக்குள் பொருமினாள்.



அறையை விட்டு வெளிவந்தபோது தந்தையைப் பார்த்தாள். வெளியே யாருடனோ 'கைப்பேசி'யில் பேசிவிட்டு உள்ளே வந்தவர் சுஜியைப் பார்த்ததும் அயர்ந்து போனார்.

''எப்போ வந்தே?'' பரத் காதில் விழாதவாறு மெல்லக் கேட்டார்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வந்தேன். அப்பா... என் மீது உங்களுக்குக் கோபம் இருக்கலாம். என்னை மன்னிச்சிடுங்கப்பா. நான் செஞ்சது தப்புதான். மடத் தனம்தான். என்ன செய்வது என்று தோணாமல் பயந்து ஓடி விட்டேன். இப்ப நீங்க என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கேன்ப்பா'' கொஞ்சும் குரலில் சொல்ல...

மகளை மன்னித்து விட்டார், வேணுகோபால்.

''அப்ப நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறித்து விடலாம் தானே?''

''சரிப்பா... எனக்கு பூரண சம்மதம்.''

பெற்றவரின் மனம் குளிர்ந்தது. நல்ல செய்தியை உடனே தன் நண்பனுக்குத் தெரிவிக்க தொலைபேசி அருகே விரைந்தார், என்றும் இல்லாத மகிழ்ச்சியுடன்.



## 18

சுஜாவுக்கு இதயம் இரும்பு குண் டாக மாறியது போல கனத்தது.

திடீர் என்று சுஜிதா வந்து நிற்பாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

அதுவும் சொல்லாமல் கொள்ளாமல் வந்ததுதான் அதிர்ச்சி!

இனி பரத்திற்கு அவள் தேவையில்லை. சாப்பாட்டு இலையின் ஓர் மூலையில் போய் விழுந்த கறிவேப்பிலை போல அவளும் ஒதுங்கிவிட வேண்டியதுதான். மனம் வெம்பிப் போனாள், இளையவள்.

பரத்தைப் பார்க்கப் போகும் மகிழ்ச்சியில் மான் குட்டியாய் உள்ளம் துள்ள, வீட்டில் நுழைந்தவள் எதிரே வந்த சுஜிதாவைப் பார்த்ததும் தரையில் விழுந்த மீன் குஞ்சாகத் துடித்துப் போனாள்.

பரத்... இனி உங்களை தொலைவிலிருந்துதான் பார்க்க வேண்டுமா? கதிரவனின் அருகில் நெருங்க முடியாத சூரிய காந்தி பூ சூரியனையே பார்த்துக் கொண்டு ஏக்கத்துடன் இருப்பது போல நானும் தவிக்க வேண்டுமா?

கண்களில் ஈரம் கசிய நின்றவளிடம் சுஜிதா உற்சாகத்துடன் வந்தாள். ''ஏய்... என்ன... அப்படியே நின்னுட்டே? இன்ப அதிர்ச்சியா? ஏதோ நேர்முகத் தேர்வுக்கு போயிருந்தாயாம்... காயா, பழமா? முகத்தில் சந்தோசத்தைக் காணோமே? காய்தான் போல. விட்டுத் தள்ளுடீ... இன்னொரு வேலை கிடைக்காமலா போகும்? சுஜா கண்ணு... உனக்கு நான் நன்றி சொல்லணும். 'என்' பரத்தை நன்றாக கவனித்துக் கொண்டதற்குத்தான்.

மடச்சி... நான் அவரைப் பார்க்க மனமில்லாமல் ஓடினேன் பாரு. இப்போதான் புரிந்து கொண்டேன், சுஜா. எதை இழக்க இருந்தேன்னு. இனிமே அவரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு என்னுடையது. ஆங்! சொல்ல மறந்துவிட்டேனே. இப்ப நீ சுஜா. புரிஞ்சுதா? பழைய நினைவில் உளறித் தொலைத்து விடாதே!''



கடைசியாய் அவள் உச்சரித்த வார்த்தைகள் தீப்பொறிகளாய் மாறி இளையவளைச் சுட்டெரித்தன. தன் உள் உணர்வுகளை மறைக்க சுஜா மிகவும் சிரமப்பட்டாள்.

''பரத் எனக்காக காத்திருக்கிறார்... போறேன்.''

தரையில் கால் பதியாமல் ஓடும் சகோதரியை வெறித்தவாறு நின்றிருந்தாள், சுஜா.

இதயம் கழன்று விழுந்து விடும் போல வலி வர... அதைத் தாங்க முடியாமல் தாயிடம் போனாள்.

''வந்துட்டியா, சுஜா. சுஜி வந்தாச்சு தெரியுமா? அப்பப்பா! தலைவலி தீர்ந்தது. உன்னை 'சுஜி'ன்னு அழைக்க வேண்டியதில்லை. அப்புறம்... இன்னொரு சந்தோஷமான செய்தி. சுஜி கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டா. இனி நிச்சயதார்த்தத்தைத் தள்ளிப்போட வேண்டாம்ன்னு அப்பாவும் சொல்லிட்டார். கோவிந்தன் மாமாவுக்கும் சொல்லியாச்சு. நினைச்ச மாதிரி எல்லாம் நல்லபடியாகவே முடியப் போகுது.''

சுஜா தயங்கியவாறே கேட்டாள் - ''ஏம்மா... பரத்... அவருக்கு... பார்வை வரும்வரை கல்யாணத்துக்குக் காத்திருக்கணும்ன்னு சொன்னாரே?'' தொண்டையில் முள் சிக்கியது போல வார்த்தைகளில் தடுமாற்றம்.''

''நேத்து டாக்டர்கிட்டே போய் வந்ததிலிருந்து எவ்வளவோ தேவலை... நிறம் தெரிகிறதாம். இன்னும் ஒரு தடவை போய் வந்தால் போதும். கண் பார்வை முழுவதும் வந்த மாதிரிதான். என்னவோ, எல்லாம் தெய்வ சித்தம். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போச்சு. உடனே நிச்சயதார்த்தத்தை முடித்துவிட்டால் நல்லது.

ஏன்னா, சுஜிதாவுக்கு குரங்கு புத்தி... எந்த நேரத்தில் எப்படி மாறுவாளோ? நாளைக்கே ஏதோ அழகுப்



போட்டி, கலந்துக்கணும்னு புறப்பட்டுப் போனாலும் போயிடுவா. சுஜா... இதை எடுத்துக் காண்டு போய் பரத்துக்குக் கொடுத்துட்டு வாயேன்'' என்று மகளிடம் கஞ்சியைக் கொடுத்தாள், சரோஜா.

பரத்திடம் வந்தாள், சுஜா. மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

தொலைபேசியில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான், அவன். அந்த வசதியை ஏற்படுத்தித் தந்திருந்தார், வேணுகோபால். அவனது 'செல்'லை தொடர்பு கொள்ள முடியாதவர்கள் தொலைபேசியில் பேசிக்கொள்ளட்டும் என்ற முன் யோசனைதான் காரணம்.

அவன் பேசி முடிக்கும்வரை காத்திருந்தாள், சுஜா. பேசி முடித்ததும் கஞ்சியை நீட்டினாள்.

''சுஜாவா... எப்ப வந்தே?''

மென்று விழுங்கினாள், அவள். ''இப்போதுதான். எப்படி இருக்கீங்க பரத்?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''ராஜா மாதிரி இருக்கிறேன். என் ராணி அருகில் இருக்கிற போது எனக்கென்ன குறை? அது சரி... உன் வேலை எப்படி இருக்கிறது? மறுபடியும் எப்ப கிளம்பணும்? எங்க நிச்சயதார்த்தத்திற்கு இருப்பாய்தானே? ஓடி விட மாட்டாயே?''

இருக்க வேண்டுமா? பரத்தும் சுஜிதாவும் மாலையும் கழுத்துமாய் இருப்பதைப் பார்த்து வேதனையில் தவிக்க வேண்டுமா? அதைவிட, உயிரை விட்டு விடலாம். ஆனால், அது முடியுமா?

நினைத்தவுடன் உயிரைப் போக்கிக் கொள்ளும் சக்தியை அந்த இறைவன் நமக்குத் தரவில்லையே?



அந்த நேரத்தில் அங்கே வந்த சுஜிதா, பரத்திடம் கேட்டாள் - ''என்ன பரத்... என்ன விஷயம்?''

''நம்ம நிச்சயதார்த்தத்திற்கு சுஜா இருக்கப் போவதில்லைன்னு தெரிகிறது. ஒருவேளை இருக்கப் பிடிக்கவில்லையோ என்னவோ?''

''அப்படியொண்ணும் இல்லை. நான் வேலைக்குப் போகணும். அதுதான் யோசிக்கிறேன்.''

''இப்பத்தான் வந்திருக்கிறாள், பரத். இதைப்பற்றி அப்புறம் பேசுவோமே... ஏன் பரத்... நம்ம நிச்சயதார்த்தத்திற்கு துணிகள் எடுக்க என்னிக்குப் போகலாம்? எங்கே?''

சுஜா அங்கிருந்து ஓடினாள், அக்காளின் பேச்சு காதில் விழாத தூரத்திற்கு.

துணி துவைக்கும் கல் மீது அமர்ந்து வானத்தை வெறித்தாள். அதுவும் அவளது வாழ்வைப் போலவே வெறுமையாக இருந்தது.

எல்லாம் மாறிப்போச்சு.

வாழ்வின் வசந்தம் போயே போய்விட்டது. பதிலாய் வெயில் காயத் தொடங்கி விட்டது.

கனவுகள் கலைந்து போனது - அழகான வண்ணக் கோலத்தில் நீர் பட்டது போல ஆசை உதிர்ந்து போனது - செடியில் பூத்து மணம் வீசி சிரித்த மலர்கள் புயலில் சிக்கியது போல... கற்பனைகள் அழிந்து போயின - கண் கவரும் சித்திரத்தின் மேல் வண்ணக் கலவை கை தவறி விழுந்தது போல.

பூரிப்பும் மகிழ்ச்சியும் காற்றில் கரைந்த கற்பூரமாயின. ஆனந்த நாட்கள் தொலைந்து விட்டன... கானல் நீராய் காணாமல் மாயமாகி விட்டன.

கண்களில் கங்கை உதிர்ந்தது, கன்னங்களில் அருவி யானாள். வேதனை தாளாமல் முகத்தை மூடிக் கொண்டு கேவினாள், சுஜா.

ஆதரவாய் அன்புக்கரம் ஒன்று அவளைத் தோளைத் தொட்டது. தாய் கரிசனத்துடன் கேட்டாள் - ''சுஜா... எதுக்கும்மா அழுறே... என்னாச்சும்மா?''

''தெரியல்லேம்மா... மனசில் ஏதோ சங்கடம்... வேதனைம்மா... சொல்லத் தெரியவில்லை.''

மகளை அணைத்துக் கொண்டாள், சரோஜா.

''சுஜா... ஒண்ணு கேட்பேன். நிஜத்தைச் சொல்வியா? பரத்தை நீ விரும்புகிறாயா? இப்படித் தனியாக உட் கார்ந்து அழணும்ன்னா... அதுவும் சுஜி வந்தப்புறம் வேதனைப் படுறேன்னா அது ஒண்ணுதான் காரணமா இருக்க முடியும்ன்னு தோணுது.''

''இது தப்புதான்ம்மா... ஆனா, அவரை என்னால் மறக்க முடியலேம்மா'' விசும்பினாள், மகள்.

''இது தப்பில்லைம்மா... முழுக்க முழுக்க அனு சரணையா இருந்து பரத்தை அக்கறையா கவனிச்சது நீதான். உருக்குலைந்து போன அவனை மனிதனாக்கியதும் நீதான். அதுக்காக நீ பட்ட சிரமங்கள்... தேர்வுக்குக்கூட சரியாப் படிக்க முடியாமல் பட்ட அவதி... எல்லாம் எனக்குப் புரிகிறதும்மா... ச்சே! இது முதல்லேயே தெரி யலையே... இப்பவே உங்க அப்பாகிட்ட சொல்லி இந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தச் சொல்றேன்.''

''அய்யோ... அம்மா! அப்படியெல்லாம் செய்ய வேண் டாம்மா... நான்தான் அவரை விரும்புகிறேன். அவர் மனதில் சுஜிதான் இருக்கிறாள். இரண்டு கை இணை



யணும்னா இரண்டு மனமும் இணையணும்மா. அப்போ தான் வாழ்க்கை சந்தோஷமாய் இருக்கும். நான் மட்டும் ஆசைப்பட்டு என்ன பயன்? அவர்கள் இருவரும் சந் தோஷமாக இருக்கட்டும்.''

சரோஜாவின் கண்களும் கலங்கிப் போயின. இளைய மகளை இழுத்து அணைத்து உச்சி முகர்ந்தாள். ''என் தங்கம்... உன் மனசும் தங்கம்டீ..''

தாயின் அணைப்பில் குழந்தையாகிப் போனாள், சுஜா. மனச்சுமை குறைந்தது போல இருந்தது.

குழந்தையாகவே இருந்து விட்டால்தான் எந்தத் துக்கமும் இல்லையோ?



19

சுஜா தன் கையில் இருந்த கடி தத்தை வெறித்துக் கொண்டு நின்றிருந் தாள்.

கல்லூரியில் விரிவுரையாளர் வேலைக்கான நியமனக் கடிதம்! அவளுடைய பல நாள் கனவு! இதோ, நனவாகி இருக்கிறது... ஏனோ உற்சாகம் பொங்கி வரவில்லை.

இன்னும் ஒரு வாரத்தில் வந்து சேரும்படி எழுதி யிருந்தது. பரத் - சுஜி நிச்சயதார்த்தம்! அதிலிருந்து தப்பித்து ஓட இதோ காரணம் கிடைத்து விட்டது.

சரோஜாவுக்கு தன் மகளை அனுப்பி வைக்க மன மில்லைதான். தனக்கு ஒத்தாசையாய் இருப்பவள் ஆயிற்றே. அவள் மீது பிரியமும் அதிகம்தான்.



ஆனால், இப்போதைய நிலையில் சுஜாவுக்கு ஒரு மாற்றம் தேவை.

புதிய இடம்... புதிய சூழ்நிலை... புதுமுகங்கள் எல் லாம் சுஜாவின் மனப் புண் ஆற உதவும்.

வீட்டில் நிச்சயதார்த்த வேலைகள் களைகட்டத் தொடங்கின. வீட்டை அலங்காரம் பண்ணுவதிலும், வண்ணத் தோரணங்களால் அழகு செய்வதிலும், அதிக அக்கறை. கடைக்கும் வீட்டுக்குமாய் ஓடியாடுவதிலும், உறவினர்களையும் நண்பர்களையும் பார்க்கச் செல்வது மாய் அமர்க்களப்பட்டது.

நிச்சயதார்த்த நாளன்று பரத் பெற்றோர் வருவதாய் ஏற்பாடு.

சரோஜாவுக்கு மூச்சு விடவும் நேரமில்லை. பம்பர மாய் சுழன்றாள்.

சுஜா, தாய்க்கு ஒத்தாசையாய் இருந்தாள்.

சுஜிதாவிற்கும் நேரம் சரியாக இருந்தது. துணிமணி களையும் அழகு சாதனங்களையும் வாங்க... தன் தோழி மார்களை அழைக்க... அவ்வப்போது அழகு நிலையத் திற்குச் சென்று தன்னை அழகுபடுத்தி வர... மிஞ்சி இருக்கும் நேரத்தில் பரத்துடன் அரட்டை அடிக்க...

அன்றைக்கு எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்த சுஜியிடம் கேட்டான், பரத். ''என்ன சுஜி... என்னிடம் பேசக்கூட முடியாமல் அப்படி என்ன வேலை உனக்கு? வரவர நீ வீட்டில் தங்குவது குறைந்து விட்டது தெரியுமா?''

''சாரி பரத்... அவசர வேலைகள் இருக்கு. சேலைக்கு ஏற்ற நிறத்தில் செருப்பு வாங்கணும். கைக்கு மருதாணி



வைத்துக் கொள்ள அழகு நிலையத்துக்குப் போகணும். எனக்கு இருந்து பேசக்கூட நேரமில்லை.''

''உனக்காக உனக்குப் பிடித்ததை வாங்கி அன்பளிப் பாகத் தர இரண்டு நாளாய் காத்திருக்கிறேன்... தெரியுமா சுஜி.''

அவளது கண்களில் மின்னல் வெட்டியது! ''அன் பளிப்பா? என்ன பரத்... காட்டுங்களேன்.''

பளபளப்பான காகிதத்தால் சுற்றப்பட்டிருந்தது, அந்த அன்பளிப்பு!

ஆசையுடன் வாங்கி ஆர்வத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தவளுக்கு ஏமாற்றம். உதட்டைச் சுழித்துக் கொண்டாள்.

''இதுதானா... வெறும் கவிதைத் தொகுப்பு! இது ஒரு அன்பளிப்பா? நான் என்னவோ வைர அட்டிகை, இல்லை தங்க நகைன்னு நினைச்சேன்.''

''இது புது வெளியீடு, சுஜி. நீ படித்திருக்க மாட் டாய்ன்னு நினைச்சு வாங்கினேன்.''

''போச்சுடா... எனக்கு கவிதையும் பிடிக்காது. கவிதை எழுதுகிறவர்களையும் பிடிக்காது. தங்கள் கற்பனையில் ஆகாயத்தில் கோட்டையும் மணல்ல மாளிகையும் கட்டிக் கொண்டிருப்பார்கள். வெறும் கற்பனையில் காலம் தள்ளுபவர்களைப் பார்த்தால் எரிச்சலாக வரும். யார் அந்தக் கண்றாவியைப் படிப்பது? அட்டா... எனக்கு நேரமாகி விட்டது பரத்... வர்றேன்.''

அவனது கரம் அந்தப் புத்தகத்தைத் தடவியது. எதையோ நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

வாசல் வரை சென்ற சுஜி, தொலைபேசி ஒலிக்கவும் திரும்பி வந்து எடுத்தாள்.

தன் தோழிகளில் யாராவது இருக்கலாமோ? ''அலோ...''

''சுஜி... நான் விக்ரம் பேசுறேன்.''

சுஜி கலவரத்துடன் பார்த்தாள். நல்லவேளை... பரத், கட்டிலில்தான் இருந்தான்.

''எதுக்கு இப்ப போன் பண்ணினே?'' தாழ்ந்த குரலில் சீறினாள், அவள்.

''எப்ப வந்தே... ஏன் எனக்குச் சொல்லலை?''

''ஒவ்வொரு தடவையும் உனக்குச் சொல்ல முடியுமா என்ன?''

''போகட்டும். உனக்கு நிச்சயதார்த்தமாமே... யார் அது? அன்னிக்கு ஓட்டலில் உன்னுடன் இருந்தானே... அவனா?''

''ஆமாம்... அவர்தான். யார் சொன்னார்கள் உனக்கு?''

''யாரோ சொல்லி நான் தெரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது. ஏன்... எனக்கு நீயே சொல்லக் கூடாதா? ஏன் சுஜி... நாம் பழகியதற்கு ஒரு அர்த்தமே இல்லையா? அன்னிக்கே எனக்கு சந்தேகம்தான். அந்த ஆள்கிட்டே என்னைத் தெரியாதுன்னு சொன்னே, பாரு. அப்பவே நினைச்சேன். இந்த நாடகம் எதுக்கோன்னு. அது சரியாகப் போச்சு. கடைசியில் என் காலை வாரி விட்டுட்டே பாரு... அவன் பணக்காரனா? அதான் விழுந்துட்டே.''

''வாயை மூடு விக்ரம். நாம் வெறும் நண்பர்கள்தான். அதற்கு மேல் எதுவுமில்லை.''

ஆத்திரத்தில் முகம் எல்லாம் வியர்த்து வழிந்தது. 'முட்டாள்' என்று மனதுக்குள் திட்டியவாறு சென்றாள்.



கார் கதவை அறைந்து சாத்தி தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டாள்.

நிச்சயதார்த்த நாள் -

பார்த்தவர்கள் வியக்கும் வண்ணம் இருந்தது அந்த வீடு.

மலர் அலங்காரமும்... காகிதத் தோரணங்களின் ஜோடனையும்... வண்ண விளக்குகளின் கண் சிமிட்டலும் அந்த இடத்தை சொர்க்கபுரியாகக் காட்டின.

நடக்காமலே போய்விடுமோ என்று எண்ணி இருந்த நிச்சயதார்த்தம் ஒருவழியாய் நடந்தேறப் போகிறது என்ற நிம்மதி வேணுகோபாலுக்கும் சரோஜாவுக்கும்.

வந்தவர்கள் கும்பல் கும்பலாய் நின்று குளிர்பானம் பருகியவாறு கதை பேசிக் கொண்டிருந்தனர்.

அய்யர் சுபமுகூர்த்த வேளைக்காகக் காத்திருந்தார். தாம்பூல தட்டை மாற்ற இன்னும் அரை மணி நேரம் இருந்தது.

பரத்தின் தந்தையும், தாய் வாசுகியும் வந்து விட்டனர். அவர்கள் சரோஜாவிடம் பேசிக் கொண்டிருந்தனர். வாசுகியின் முகத்தில் கொள்ளை மகிழ்ச்சி. மகனுக்கு நல்ல இடம் அமைந்தது... வீட்டுக்கு நல்ல மருமகள் வந்து விட்டாள். இன்னும் என்ன வேண்டும்?

வாசுகிக்கு மருமகளைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு. சுஜியோ இன்னும் அலங்காரத்தில் இருந்தாள். கண்ணில் படவே இல்லை.

அவளது அறைக் கதவு மூடியே இருந்தது.

''எங்கேடா என் மருமகள்... நான் பார்க்க வேண்டாமா?'' என்று மகனைக் கேட்டாள், வாசுகி.



''இரும்மா... போய் பார்க்கிறேன்! அத்தை... உங்க மகள் எங்கே?''

''அது என்னவோ... அழகு நிலையத்திலிருந்து வந்த வங்க மணிக்கணக்கா என்னவோ செய்கிறார்கள். இப்ப வந்துடுவாள்னு நினைக்கிறேன்.''

''சுஜா எங்கே? அவளும் கண்ணில் படவில்லையே, அத்தை?''

''அவள் ஊருக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறாள்.''

''என்ன... அவள் இல்லாமல் நிச்சயதார்த்தமா... நான் போய் கேட்கிறேன்'' என்றவன், ''அம்மா... கொஞ்சம் பொறும்மா. உன் மருமகளைப் பார்க்கலாம். நானே அழைத்து வருகிறேன்... இரு'' என்று விருட்டெனக் கிளம்பிச் சென்றான், அவன்.

சுஜா, கோயமுத்தூர் புறப்பட, அறையில் தயாராகிக் கொண்டிருந்தாள். பெட்டியைப் போலவே நெஞ்சமும் கனத்தது. கீழே இறங்கிச் செல்ல பிடிக்காமல் அமர்ந்திருந்தாள். எங்கே உடைந்து போய் அழுது விடுவோமோ என்ற பயம்.

பரத்தையும் சுஜியையும் வாழ்த்தி விட்டுப் போக வேண்டும். அதுதான் முறை. ஆனால் அது முடியாதே. பரத் முகத்தை காணவும் முடியாமல் கண்களில் நீர் தேங்கி...

வேண்டாம்... அவர்களைப் பார்க்க வேண்டாம். பார்த்து அழவும் வேண்டாம்.

பேசாமல் புறப்பட்டு விடலாம். அவனுடன் இனிமையாகக் கழித்த அந்த இன்ப நினைவுகளை மனதில் பூட்டிக் கொண்டு போய் விடலாம். அதுவே போதும்.



சுஜிதாவாக மாறியவள் இப்போது சுஜாவாய் திரும்பி வந்தாலும் பழைய துள்ளலும், சிரிப்பும், வேடிக்கைப் பேச்சும் போயே போய் விட்டன.

எதையோ பறிகொடுத்தவள் போல ஒரு சோகம் அவளை அப்பிக் கொண்டது.

'சுஜிதா மட்டும் வராமல் இருந்திருந்தால்?' மனம் ஏங்கியது.

அதே நேரம் சுயநலமாய் நினைக்கிறேன் என்று உள்ளுக்குள் தவிப்பு.

பரத்துக்கு படித்துக் காட்ட வாங்கி வைத்திருந்த புத்தகம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

'சிவகாமியின் சபதம்!' நரசிம்ம பல்லவரின் காதல் கதை! அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சிவகாமி தன் அன்பை அவருக்கு காணிக்கையாக்கிய கதை! அவள் காதலும் நிறைவேறவில்லை! தன் காதலும் நிறைவேறவில்லை!!

சிவகாமியின் காதல் போலவே பூத்து... சிரித்து... காய்த்து... கனியாமல் உதிர்ந்து போனது அவளின் அன்பும்...

விதி! அந்த விதிதான் இப்படிப் பிரித்துப் போட்டு நகைக்கிறது...

''என்னம்மா... புறப்பட்டுட்டு இருக்கே?'' மகளைத் தேடி வந்த வேணுகோபால் கேட்டார்.

''நாளைக்கு வேலையில் சேரணும்ப்பா.''

பொய்! இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. இங்கிருந்து தப்பித்துச் செல்கிறாள் என்பதுதான் உண்மை. அது அவளது உள்ளத்திற்கு மட்டுமே தெரியும்.

''ஏம்மா... இவ்வளவு தூரம் போய் தனியாக இருக்கணுமா? சுஜிதாவுக்கு முடிஞ்சதும் உனக்கும் கல்யாணம் வச்சுடலாம்ன்னு நானும் உன் அம்மாவும் நினைக்கிறோம். நீ என்னடான்னா புறப்படுறே?''

'கல்யாணமா... எனக்கா... இந்தப் பிறவியில் அது இல்லைப்பா' மனம் முணுமுணுத்தாலும், வெளியில் வேறு விதமாகச் சொன்னாள்.

''எனக்கும் வேலைக்குப் போகணும்ன்னு துடிப்பா இருக்குப்பா. அக்கா வேலைக்குப் போறதை சம்மதிச்ச நீங்க எனக்கும் தடை சொல்ல மாட்டீங்கன்னு நினைச்சேன். இந்த வேலை என்னோட குறிக்கோள்ப்பா... ப்ளீஸ்... வேண்டாம்ன்னு சொல்லாதீங்க.''

''சரிம்மா, உன் விருப்பப்படி செய். நான் குறுக்கே வரலை. உன் துணிமணிகளை எடுத்து வைத்து விட்டாயா? முடிஞ்சதும் கீழே வா. நான் போய் வந்தவர்களைக் கவனிக்கிறேன்.''

தந்தை சென்றதும் முழங்காலில் முகம் புதைத்து அழுதாள்.

எத்தனை நேரம் கரைந்தது தெரியாது!

வாசலில் ஏதோ அசைவு உணர்ந்து நிமிர்ந்தாள். எதிரே பரத்! ஆசைப்பட்ட அவள் பரத்!

அவசர அவசரமாய்க் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''புறப்பட்டு விட்டாயா, சுஜா?''

''ஆமாம்.''

''சொல்லிக் கொள்ளாமல் கிளம்பும் உத்தேசமா என்ன?''



உதட்டைக் கடித்தவாறு தலை குனிந்து நின்றாள்.

''சரி... புறப்படும் முன் எனக்கு சொந்தமானதை திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணமில்லையா?''

''எதை?'' யோசனையுடன் அவனைப் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறே... எனக்கு வரவேண்டிய ஒன்று உன்னிடம் இருக்கணுமே.. அதைச் சொல்கிறேன்.''

மோதிரம்! சட்டென்று நினைவுக்கு வர... கழட்டினாள், அதை.

''சாரி பரத்... சுஜியிடம் வாங்கி ஆசையாக விரலில் போட்டுக் கொண்டேன். திருப்பித் தர மறந்துவிட்டேன். இந்தாங்க.''

''இதைக் கொடுத்து விட்டால் கணக்கு தீர்ந்து விடுமா? இன்னொன்றும் இருக்கு. அதையும் திருப்பிக் கொடுத்து விட்டுப் போ.''

அவள் விழித்தாள். இன்னொன்று என்கிறானே... அப்படி என்ன இருக்கிறது, அவனுக்கு உரிமையானது? வேறு எது? இதென்ன புதிர்!

''இப்படி தப்பித்து ஓடிப் போனால் மறந்து விடுவேனா? அது உன்னால் முடியுமா, சுஜா. எனக்குச் சொந்தமான உன் இதயத்தைக் கொடுத்து விட்டு எங்கே வேண்டுமானாலும் போ.''

''பரத்!'' சத்தம் வராமல் உதடுகளை மட்டும் அசைத்தாள், சுஜா. அவள் முகத்தில் வியப்பின் குறி... அதைப் பார்த்துவிட்டு புன்னகைத்தான், பரத்.





20

திகைப்புடன் பார்த்தாள், சுஜா. பரத் வாயிலிருந்து வந்த சொற்கள் உண்மைதானா, இல்லை என் பிரமையா?

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சுஜாவைப் பார்த்து மேலும் புன்னகைத்தான், பரத்.

''எப்படி எனக்குத் தெரியும் என்ற திகைப்பு... இல்லையா சுஜா? நீ சுஜியாக நடிக்க ஆரம்பித்த ஒரு வாரத்திலேயே நான் ஊகித்து விட்டேன், நீ சுஜாதான்னு. சுஜிக்கு உன் அளவு பொறுமையோ, நிதானமோ கிடையாது. அவளுக்கு எல்லாமே அவசரம். உன்னை மாதிரி ரசனையும் இல்லை. உனக்கு அவளைப் போல கொஞ்சிப் பேசவும் தெரியவில்லை. குழைந்து பழகவும் வரவில்லை. நீ, நீயாகவே இருந்தே!''

சுஜா அவனை வியப்புடன் பார்த்தாள்.

''குரல் மட்டும் ஒரே மாதிரி இருந்தால் போதுமா? அவளுக்கு கவிதைப் பிடிக்காது. சரித்திர நாவல் என்றால் எட்டிக்காய். உன் மாதிரி அழகாய் கதை வாசிக்க வராது. எல்லாத்தையும் விட மணிமேகலை இறக்கும் கட்டத்தில் நீ அழுதாய் பாரு... அப்போதுதான் என் சந்தேகம் இன்னும் வலுப்பட்டது. சுஜி உணர்ச்சிவசப்படும் ரகம் இல்லையே?''

''........''

''அப்புறம் கன்னத்தில் முத்தம் கொடுத்தே பாரு... தயங்கி... தயங்கி... அந்தத் தயக்கம்... நாணம் சுஜியிடம் இல்லாதது. என் கன்னத்தில் உதட்டு சாயத்தின் பிசு



பிசுப்போ... மணமோ இல்லை. இது போதாதா, நீ சுஜியில்லைன்னு தெரிய! என் தாயிடம் அன்றைக்குப் பேசினாயே... அன்பாய் - அனுசரணையாய்... அந்த பொறுமை சுஜியிடம் மைனஸ்...''

''நீங்கள் என்னை வெறுத்தவராச்சே, பரத்.''

''வெறுப்பில்லை சுஜா. கோபம்... எரிச்சல்... அதுவும் சுஜிதா பூசிவிட்ட கறுப்புச் சாயம். அவள் அந்த விக்ரமுடன் தொலைபேசியில் பேசியதை தற்செயலாய் கேட்க முடிந்தது. அப்போதுதான் தெரிந்து கொண்டேன் - விக்ரம் அவளின் நண்பன் என்று.

எனக்கே வெட்கமாக இருக்கிறது, சுஜா. எல்லோரையும் துல்லியமாக எடை போடுபவன், நான். எப்படி தங்கத்துக்கும் தகரத்துக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாளாகிப் போனேன்? அந்த மோதிரம்கூட உன்னைக் காட்டிக் கொடுத்தது தெரியுமா?''

அவளது கண்களில் கேள்வி... 'எப்படி?'

''சுஜிக்கு சிவப்பு என்றால் அலர்ஜி. வைரம் வேண்டும் என்றாள். 'நீயோ சிவப்பு நிறம் எனக்கு ராசி. வைரம் வேண்டாம்' என்றாய். அந்த முரண்பாடுதான் எனக்குத் தெளிவாகக் காட்டியது.''

''பரத்... நான் சுஜி இல்லை என்று தெரிந்தும் ஏன் தெரியாதது போல நடிச்சீங்க? ஒவ்வொரு தடவையும் 'சுஜி... சுஜி' என்று அழைத்தபோது எனக்கு மனசு எப்படி துடித்தது தெரியுமா? அன்றைக்கு 'என் ராணி, அருகில் இருக்கையில் எனக்கு என்ன குறை'ன்னு சொன்னீங்களே... என் இதயத்தையே அறுத்த மாதிரி இருந்தது. என்னால் அழுகையை அடக்க முடியவில்லை, பரத்.''

''என் சுஜா புத்திசாலின்னு நினைத்தேன். இப்பத்தான் அசடுன்னு தெரியுது. நான் ராணின்னு சொன்னது, சுஜியை அல்ல. உன்னைத்தான்.

அதுசரி... எனக்கு உண்மை தெரியும்ன்னு உனக்கு எப்படித் தெரியும்? நானும் கொஞ்சம் சீண்டிப் பார்த்தேன்... கண்ணாமூச்சி விளையாட்டு, உனக்கு மட்டும்தான் தெரியுமா என்ன?

சரி... இப்போ மனம் விட்டு கேட்கிறேன். என் இனியவளே... உயிர் காதலியே... என் இதயம் கவர்ந்த சுஜி... சாரிம்மா... பழக்கதோஷம். என் இதயம் கவர்ந்த சுஜா கண்ணே... எனக்கு மனைவியாக உனக்கு சம்மதம்தானே?''

அதற்காகவே காத்திருந்தது போல விம்மியவாறு சுஜா அவனது மார்பில் சாய்ந்தாள். அவளது முகத்தை நிமிர்த்தியவன், நெற்றியில் தன் உதடுகளைப் பதித்தான்.

''கண் பார்வை இல்லாமலே உன்னை அறிந்து கொண்டேன் சுஜா. எப்படித் தெரியுமா?''

கண்களை மூடிக்கொண்டு ''இதோ... இப்படித்தான்... உன் பட்டுக் கூந்தலின் நறுமணம்... உன் மேனியில் தவழும் சந்தன சோப்பின் வாசனை... பவுடரின் மணம்... இத்தனையும் நீ சுஜா என்பதைச் சொல்லும். என் அருகில் வந்ததும் உன்னிடம் உண்டாகும் புறாவின் படபடப்பு... இதயத்தில் வரும் ராகத் துடிப்பு... உன் உடம்பில் வரும் இன்ப அதிர்வு... என் உணர்விலேயே அதை அறிய முடியும், என் இனிய சுஜாதான்னு'' அவன் சொல்ல...

''பரத்... இதயம் மகிழ்ச்சியில் துடிக்கிறது. இத்தனையும் நிஜமா... இல்லை கனவு காண்கிறேனா என்று பயமும் தோன்றுகிறது.''



''இது கனவல்ல, சுஜா. அத்தனையும் நிஜம்தான் இதோ பாரு'' அவளை இறுக அணைத்த அதே நேரம்...

''பரத்!'' என்ற கூவல் கேட்டது.

இருவரும் திரும்பினார்கள்.

அங்கே... வாசலில் சுஜிதா ஆவேசத்துடன் நின்றிருந்தாள், மணப்பெண் அலங்காரத்துடன்

இயல்பாக பரத்தின் அணைப்பிலிருந்து விலக முயன்றாள், சுஜா. ஆனால் அவன் விடவில்லை. அவளை தன் அணைப்பிலேயே இருத்திக் கொண்டான்.

சுஜிதாவின் முகம் கோபத்தில் சிவந்தது. வெடிக்கப் போகும் எரிமலையைப் போல குமுறிக் கொண்டிருந்தாள்.

'சுனாமி' அலையாக சுருட்டி விடத் துடித்தாள்.

''பரத்... என்ன இது? எனக்கு மோசம் பண்ணுவது எந்தவிதத்தில் நியாயம்? இப்படி ஏமாற்ற உங்களுக்கு வெட்கமாயில்லை?''

''சாரி சுஜிதா. இப்படிக் கேட்க உனக்கு அருகதையே இல்லை. எனக்கு வாழ்க்கைத் துணையாக வருவதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது? சொல்.''

''..........''

''எனக்கு மனைவியாக வருகிறவள் என் இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருக்கணும். துன்பம் என்றதும் ஓடி ஒளிந்து... இன்பம் மட்டும்தான் இனிக்கும் என்று நினைக்கிறவளுக்கு என் மனைவியாக தகுதி இல்லை. எனக்கு அவள் தேவையும் இல்லை. பகட்டாய் வாழணும்னு நினைக்கும் உனக்கு, ஒரு விக்ரமோ இல்லை வக்ரமோ கிடைப்பான். கவலைப்படாதே சுஜி. என் வாழ்த்துக்கள்.''

அவனை எரித்து விடுபவள் போல பார்த்துவிட்டு சரசரவென சென்றாள், சுஜிதா.

''எனக்கு பயமாக இருக்கு பரத்'' என்றாள், சுஜா.

''பயம் எதற்கு? நான் இருக்கிறேன். என் கரத்தை பிடித்துக் கொள், சுஜா. நாம் போகலாம். தைரியமாக வா.''

அவனது வலிமையான கரத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள், இளையவள்.

''போகலாமா?'' அவளைப் பார்த்துப் புன்னகையுடன் கேட்டான், பரத்.

அவள் தலையசைத்தாள். மனதுள் ஆயிரம் யானை பலம் வந்த மாதிரி அவளுக்குத் துணிவு வந்திருந்தது.

இனி எத்தனை இடையூறுகளை சந்திக்க நேர்ந்தாலும் இந்தக் கரம் அவளுக்கு துணை நிற்கும். இந்தக் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு நடப்பாள்.

இணைந்த அன்புக் கரங்களுக்கு வானம், பூ மழை தூவியது. காதலனை - கணவனாகப் போகிறவனை அடியொற்றி நடந்தாள், சுஜா.

எதிர்காலம் மலர்ச்செண்டுடன் அவர்களை வரவேற்கக் காத்திருந்தது.

அந்த அன்புக் காதலர்களுக்கு வருங்காலம் பொன் னாய் ஒளிரப் போகிறது! பூவாய் சிரிக்கப் போகிறது! வசந்த காலமாய் வாழ்த்தப் போகிறது!